اَلْخَصَائِصُ النَّبَوِيَّة فِى الْاَحَادِيْثِ الْمِعْرَاجِيَّة

வேந்தர் நபியின் விண்ணுலகப் பயண வரலாறு

தொகுப்பு :

அல்லாமா அஸ்ஸெய்யது முஹம்மது அப்துல் காதிர்
ஆலிம் அல்மல்கரி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள்

வெளியீடு
பல்லாக் குடும்பத்தினர்
காயல்பட்டணம்.

அச்சு அமைப்பு :
ஃபஹீமிய்யா பப்ளிஷர்ஸ், 98415 67213









اَلْخَصَائِصُ النَّبَوِيَّةُ فِى الْاَحَادِيْثِ الْمِعْرَاجِيَّةِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ؕ

سُبْحَانَ الْعَلِيِّ الْاَعْلٰى، اَلْوَلِيِّ الْاَوْلٰى، اَلَّذِىْ اَسْرٰى
بِعَبْدِهٖ لَيْلًا، مِنَ الْمَسْجِدِ الْحَرَامِ اِلَى الْمَسْجِدِ
الْاَقْصٰى لِيُرِيَهٗ مِنْ عَجَائِبِ غَرَائِبِ اٰيَاتِهِ الْكُبْرٰى
وَعَرَّجَهٗ اِلٰى اَطْبَاقِ اَفْلَاكِ عِنْدَ سِدْرَةِ الْمُنْتَهٰى،
وَاَدَارَهٗ عَلٰى مَلَكُوْتِ جَبَرُوْتِ عَوَالِمِهِ الْعُلْوِيَّةِ
وَالسُّفْلٰى، وَاَجْلَسَهٗ عَلٰى رَفْرَفِ كُرْسِيِّ ثُمَّ دَنٰى
فَتَدَلّٰى، وَاَوْقَفَهٗ عَلٰى مَنَصَّةِ عَرْشِهٖ فِىْ حَضْرَةِ
قُرْبِيَّةِ فَكَانَ قَابَ قَوْسَيْنِ اَوْ اَدْنٰى، وَاَشْهَدَهٗ
جَمَالَ جَلَالِ كَمَالِ اَحَدِيَّةِ مَا كَذَبَ الْفُؤَادُ مَا
رَاٰى، وَاَطْلَعَهٗ عَلٰى اَنْوَارِ اَسْرَارِ غَيْبِيَّةِ فَاَوْحٰى

اِلٰى عَبْدِهٖ مَا اَوْحٰى، وَخَلَعَ عَلَيْهِ تَاجَ كَرَامَةِ
صَمَدِيَّتِهٖ مَا زَاغَ الْبَصَرُ وَمَا طَغٰى، اَحْمَدُهٗ عَلٰى مَا
اَنْزَلَ وَاَجْزَلَ، وَاَتَمَّ وَاَكْمَلَ، عَلَيْنَا مِنْ وَالٍ
مِفْضَالٍ اٰلَآءِ نَعْمَآئِهٖ مِنْ خَزَائِنِ غَيْبِ فَيْضِ
اَقْدَسِ رَحْمُوْتِهِ السَّابِقِيَّةِ، الَّذِىْ اَعْلٰى مَرَاتِبَ
مَنَاسِبِ رُسُلِهٖ وَاَنْبِيَائِهٖ اِلٰى اَوْجِ مَعَارِجِ مَدَارِجِ
النُّبُوَّةِ الْاِلٰهِيَّةِ، وَرَفَعَ مَرَاكِبَ مَطَالِبِ اَوْلِيَاءِهٖ
اِلٰى ذِرْوَةِ اَعَالِىْ مَعَالِى الْوِلَايَةِ الرَّبَّانِيَّةِ، وَفَضَّلَ
سَيِّدَنَا مُحَمَّدًا صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ عَلٰى جَمِيْعِ
خَلْقِهٖ عَلَى الْاِطْلَاقِ بِالْكُلِّيَّةِ الْاَجْمَعِيَّةِ، حَيْثُ
اَخْتَصَّهٗ بِقَابِ قَوْسَيْنِ اَوْ اَدْنٰى مِنْ حَضْرَةِ الْقُرْبِيَّةِ
اللَّامَكَانِيَّةِ، وَاَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ
لَاشَرِيْكَ لَهٗ شَهَادَةَ عَبْدٍ مُّقِرٍّ بِعَجْزِهٖ وَذِلَّتِهٖ
الْاَصْلِيَّةِ، مُعْتَرِفٍ بِتَقْصِيْرِهٖ وَانْقِطَاعِ حِيْلَتِهِ
الْعُذْرِيَّةِ، وَاَشْهَدُ اَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَلْمَصْدُوْقِ بِشَاوُسِ سَعَادَةِ سِيَادَةِ نُبُوَّةِ رِسَالَتِهِ
الْخَاتِمِيَّةِ ، اَلْمَنْصُوْصِ بِجَاوِيْشِ دَوْلَةِ صَوْلَةِ
سَطْوَةِ الْخِلَافَةِ الْعَامَّةِ الْمُطْلَقَةِ السَّرْمَدِيَّةِ ،
اَلْمَوْصُوْفِ بِقُطْبِيَّتِهِ الْكُبْرٰى الْفَرْدَانِيَّةِ الذَّاتِيَّةِ ،
اَلْمَنْصُوْبِ عَلٰى بِسَاطِ سِمَاطِ مَرْكَزِ الْاَفْلَاكِ
الْوُجُوْدِيَّةِ ، اَلْمَحْمُوْدِ فِي الْمَلَكُوْتِ وَالنَّاسُوْتِ
بِمَعَالِيْ مَعَانِيْ سِيْرَتِهِ الْمَرْضِيَّةِ ، اَلْمَشْهُوْدِ فِي
الْجَبَرُوْتِ وَاللَّاهُوْتِ بِصُوْرَتِهِ الْحَقِيْقِيَّةِ الْحَقِّيَّةِ ،
اَلْمَخْصُوْصِ بِمَكَارِمِ مَحَاسِنِ اَوْصَافِ اَلْطَافِ
اَخْلَاقِهِ الْعَظِيْمَةِ السَّنِيَّةِ ، اَلْمَوْهُوْبِ بِجَلَائِلِ
جَزَائِلِ فَضَائِلِ فَوَاضِلِ مَرْتَبَتِهِ الْاَعْلَوِيَّةِ ، عَلٰى
وَجْهِ الْاَكْمَلِيَّةِ الْاَجْمَعِيَّةِ ، فَكَيْفَ لَا وَالْاَنْبِيَاءُ
ظِلَالُ نُبُوَّتِهِ ، وَالْاَوْلِيَاءُ اٰثَارُ وِلَايَتِهِ ، وَالْمَلَائِكَةُ
اَمْوَاجُ اَبْحُرِ اَخْلَاقِهِ ، وَجَمِيْعُ الْاَرْوَاحِ شُعَاعَاتُ
نُوْرِ اِشْرَاقِهِ ، اٰدَمُ وَمَنْ بَعْدَهٗ نُوَّابُهٗ ، وَجَبْرَئِيْلُ

وَمَنْ تَحْتَهُ اَتْبَاعُهُ، فَمَا الْعَجَبُ فِيْمَنْ اِذَا كَانَ لَهُ
الْمِعْرَاجَةُ فِي اللَّيْلِ، فِيْ شَأْنِ "لِيْ مَعَ اللّٰهِ" وَقْتُ لَّا
يَسَعُنِيْ فِيْهِ مَلَكٌ مُّقَرَّبٌ وَّلَا نَبِيٌّ مُّرْسَلٌ، فَلَا
مَدْحَ وَلَا ثَنَاءَ، وَلَا مَجْدَ وَلَا سُوْدَدَ، وَلَا شَرَفَ
وَلَا فَخَارَ، وَلَا فَضْلَ وَلَا كَمَالَ، وَلَا حَالَ وَلَا مَقَامَ،
مِنْ مَّقَامِ الْعُبُوْدِيَّةِ بَعْدَ الرُّبُوْبِيَّةِ، اِلَّا وَمُحَمَّدٌ
صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ اَحَقُّ بِهَا وَاَهْلُهَا بِحَقِيْقَتِهِ
الذَّاتِيَّةِ، وَصَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى خَيْرِ ذَاتِهِ الْمُطَهَّرَةِ
الْمُقَدَّسَةِ الْمُشَرَّفَةِ لِحَضْرَتِهِ الْقُدْسِيَّةِ، وَعَلٰى
اٰلِهٖ وَصَحْبِهٖ وَسَائِرِ اُمَّتِهِ الْخَيْرِيَّةِ، مَا طَابَ مُدَّاحُ
كَابَ طَابَ، مَحْبُوْبِنَا الْمُسْتَطَابِ، بِذِكْرِ مَعَانِيْ
مَثَانِيْ مَنَصَّةِ قِصَّتِهِ الْمِعْرَاجِيَّةِ، وَبِنَشْرِ نِثَارِ
نِظَامِ لَآلِيْ اَحَادِيْثِ اللَّيْلَةِ الْاِسْرَائِيَّةِ، فَهَا
اَنَا اَشْرَعُ فِيْ شَرْحِ غَرْفَةٍ مِّنْ اَخْبَارِ الْمِعْرَاجِ مِنْ
تَيَّارِ زَخَّارٍ دَاُمَائِهٖ، اَوْ بَحْثِ رَشْفَةٍ مِّنْ فَيَّاضٍ

حِيَاضِ اِسْرَائِهٖ، فَاَنْشُرُ مِنْ رَيَّاهُ فَوَاحِيْ فَوَائِحِ
الْمِسْكِ وَالْعُطُوْرِ، عَلٰى حَضَرَاتِ الْقُرَّاءِ وَالسُّمُوْعِ
وَالْحُضُوْرِ، فِيْ نَدْوَتِنَا هٰذِهِ الْمُبَارَكَةِ الشَّذِيَّةِ، ثُمَّ
اَنْسُجُ مِنْ هَاتِيْكَ الْجَوَاهِرِ وَالدُّرَرِ، مَا بَيْنَ النَّظْمِ
وَالنَّثْرِ، بُرْدَةً عَبْقَرِيَّةً، اُحَيِّيْ بِهَا مُحَيَّا مَمْدُوْحِيَ الْمُحَلّٰى
بِحُلَلِ الْكَمَالَاتِ الْعَلِيَّةِ، مُتَبَرِّكًا بِفَيْضِ مُقَدَّسِ
حَضْرَةِ الذَّاتِ الْمُصْطَفَوِيَّةِ، مُسْتَمِدًّا بِفَضْلِ
جُوْدِ وُجُوْدِهِ الْمُسْتَفَاضِ مِنْهُ الْبَرَكَةُ وَالنِّعْمَةُ
لِكُلِّ الْبَرِيَّةِ، وَاَسْتَعِيْنُ اللّٰهَ فِيْ ذٰلِكَ بِمُطَهَّرِ جَنَابِ
الرُّوْحِ الْمُحَمَّدِيَّةِ، وَهُوَ الْاَحَقُّ بِحَقِيْقَةِ الْحَقِيَّةِ
اَنْ يُّسْتَجَابَ كُلُّ دَاعٍ لِّدُعَائِهٖ فِيْ جَمِيْعِ مُهِمَّاتِهِ
الدِّيْنِيَّةِ وَالدُّنْيَوِيَّةِ وَالْاُخْرَوِيَّةِ

1. ஹிகாயத்தின் வரலாறு

மஹா மேலான மாட்சிமைக்குரிய வல்ல காரிய கர்த்தாவாகிய ஆண்டவன் அல்லாஹ் சுபுஹானஹூ வ தஆலாவை தூய்மையாக்குகிறேன். அவன் தனது அரும்பெரும் அற்புதானந்த அதிவினோத அற்புதங்களை காண்பிக்க வேண்டி தனது சொந்த அடிமையாகிய நம் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களை சங்கை பொருந்திய பள்ளி கஃபத்துல்லாவிலிருந்து தீர்ச்சையான பள்ளி பைத்துல் முகத்தஸளவிலே இராவழி நடத்தினான்.

இன்னும் சித்ரத்துல் முன்தஹாவெனும் மகாம் வரையில் ஏழுவான்களின் ஒவ்வொரு அடுக்கின் பேரிலும் ஏற்றுவித்தான். ஆலம் உல்வி மேலுலகம் ஆலம் ஸுப்லி கீழுலகமெனும் இருலோகத்தின் தனது தத்துவாதிகார பீடஸ்தலமாகிய ஆலம் மலகூத்தெனும் அமரர் உலகம் ஆலம் ஜபரூத்தெனும் சூட்சம உலகத்தில் பவனி நடத்தினான்.

தன்னளவில் மிக நெருங்கி முடுகினாரெனும் திருவாக்கியத்தின் ஆசனத்தில் பச்சை பொற்கம்பளத்தில் அமர்த்தினான். ''காப கவ்ஸைனி அவ் அத்னா'வெனும் சமீப சமூகத்தின் தனது அர்ஷாகிய சிம்மாசன கொலுவினிடத்து நல் வரவேற்றான். தாங்கள் தரிசித்த காட்சியை மனது மறக்கவில்லை என்ற திருவசனமாகிய மகாம் அஹதியத்தெனும் ஏகாந்த பரிபூரண வன்மையின் அழகை அவர்கட்கு ஸ்தோத்திரமருளினான்.

தனது அடிமையளவில் "வஹீ" பரம இரகசியம் அறிவித்ததை எல்லாம் அறிவித்தான் என்னும் திருவுளத்தின் மறைவான சூட்சாதி சூட்சியத்தின் ஒளிகளின் மீது அவர்களை உதயமாக்கி வைத்தான். பார்வைப் பிசகாது மாறாதிருந்ததென்று திரு ஆயத்தின் நிரந்தர கவுரவ கிரீடத்தை அவர்கட்குச் சூட்டினான். நான் அவனைப் புகழ்கிறேன். அவன் தனது முதன்மை பெற்ற திவ்விய கிருபா கடாட்சத்தின் சுனையில், ஒலிக்கும் சூட்சுமப் பொக்கிஷத்தின் இரகசிய, பராசிய நிஃமத் என்னும் வரிசைக் கொடையில் சர்வ

சம்பூரணமான நிரப்பமான மிகுதமான சௌபாக்கியங்களை நமக்காக இறக்கியருளினான். தனது ரசூல்மார்கள் அன்பியாக்கள் அலைஹிமிஸ்ஸலாம் அவர்களின் 'மர்தபா' அந்தஸ்த்துக் களை தெய்வீகத் தன்மையின் "நுபுவ்வத்" தீர்க்க தரிசனத்துவப்பட்ட பதவிகளென்னும் ஏணிப்படிகளின் தீர்ச்சைக்கு உயர்த்தினான். தனது அவ்லியாக்கள் ரலியல்லாஹு அன்ஹும் அவர்களின் இலட்சியங் களென்னும் வாகனங்களை நாயகத்துவத்தின் சர்வாதிகாரமென்னும் "விலாயத்" மேலாதி மேன்மையின் உச்சஸ்தானத்திற்கேற்றி வைத்தான். இன்னும் நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை எல்லா படைப்புகளுக்கும் மேலால் தானமற்ற தானமாகிய "காப கவ்ஸைனி" சமீப சமுகமென்னும் நன்னிலங்கொண்டு சொந்தமாக்கிவைத்ததன் பலனாக மொத்தமாக வரிசையாக்கினான்.

இன்னும் நான் வணக்கத்திற்குரித்தாக்கிய நாயன் தனித்த இணையற்ற அல்லாஹ் தஆலாவையன்றி வேறில்லையென ஓர் அடிமையானவன் தன்னியற்கை சுபாவமான இழிவு இயலாமைக் கொண்டு உறுதிக் கூறி, புகழற்ற நிற்கதியினால் தனக்குரிய குறைகளைக் கொண்டு விண்ணப்பித்துரைக்கும் சாட்சியமாக சாட்சி கூறுகிறேன். இன்னும் சாட்சி கூறுகிறேன். நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவனுடைய நல்லடியாரும், திருத்தூதரும், முத்திராங்கமாகிய "நுபுவ்வத் ரிசாலத்" தீர்க்க தரிசனத்துவம் தூதுத்துவம், நன்மாராயம், நாயகத்துவம் முதலிய சௌபாக்கியங் கொண்டு விசுவதிக்கப்பட்டவர்களும் சதாமயமாயடைய வளையத்தக்க "கிலாபத்" பிரதிநிதித்துவமென்னும் தத்துவாட்சியும், தவ்த்திய மாட்சியும் கொண்டு நிர்ணயிக்கப்பட்டவர்களும் ஹக்கு தஆலாவின் தாத்து அதிசூக்குமத்திற்குரிய "பர்தானிய்யா"தனிமயத்தின் பதவிகளில் "குத்பியத்துல் குபுறா" நடு நாயகத்துவமென்னும் மகா சாஸனப் பட்டங்கொண்டு வர்ணிக்கப் பெற்றவர்களும் உள்ளமையெனும் அண்ட கோல சக்கரத்தின் பந்தியின் விரிப்பில் நடுநாயகமாய் இஸ்தாபிக்கப் பெற்றவர்களும் "நாசூத்து மலக்கூத்து" போதீக ஆத்மீக உலகத்தில் தங்கள் திருவருள் பொருத்தத்திற்குரிய உன்னத

நன்னடத்தையின் அகமியப் பொருள் கொண்டு புகழப் பெற்றவர்களும் "ஜபரூத் லாகூத்" சூட்சாதி, சூட்சும உலகத்தில் தங்களகமியத்திலே ஹக்குடைய வர்ணனைகளில் புகழப் பெற்றவர்களும், தக்க கண்ணியம் நிலவிய சற்கணாதீத வர்ணனைகளின் அழகிய சங்கைக் கொண்டு சிறப்பிக்கப் பெற்றவர்களும், சர்வ பரிபூரணத் தோரணையில் தங்கள் உயர் பதவியில் தக்க அருமையும், மிகப் பெருமையும், கனவரிசையும், வெகு சிலாக்கியமும் கொண்டு பரிசளிக்கப் பெற்றவர்களுமாகும். ஏனெனில் "அன்பியாக்கள்" தங்கள் நபித்துவத்தின் சாய்கைகளாகவும், "அவ்லியாக்கள்" தங்கள் வலித்துவத்தின் அடையாளங்களாகவும், மலாயிகத்து அமரர்கள் தங்கள் சற்குண சாகரத்தின் திரைகளாகவும் சர்வ "அர்வாஹு" ஆத்மாக்களும் தங்கள் திருவதன சுயஞ்ஜோதியின் பிரபைகளாகவும், ஆதமும் அவர்பின் சந்ததிகளும் தங்கள் பிரதிநிதிகளாகவும், ஜிப்ரீல் தேவர்கோனும், அவருக்கு கீழ்பட்டோரும், தங்கள் அடிச்சுவட்டை பின்பற்றினவர்ளாகவு மிருக்கின்றனர். ஆதலின் யாதொரு முர்ஸலான நபியாகிலும், முகர்ரபான மலக்காகிலும், ஏகத்தாகாத ஓர் சந்தர்ப்பம் அல்லாஹ் தஆலாவினிடத்தில் எனக்குண்டு என்ற தங்கள் திருவுளப் பிரமாணப்படி அவர்களுக்கு ஓரிறவில் ஒரே மிஃராஜ் உண்டாவது ஆச்சரியமாமோ?

ஆகவே ஏதொரு புகழோ, துதியோ, கவுரவமோ, கியாதியோ, நாயகத்துவமோ, சிறப்போ, மாட்சியோ, சம்பூரணமோ, இன்னும் தெய்வீகத்துவத்திற்கு புறம்பான அடிமைத் தன்மையின் பதவிகளில் யாதொரு மகாம் ஹால் ஸ்திர, ஸ்துதியோ, அவற்றிற்கு நமது மஹ்பூப் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் திவ்விய தாத்தின் நுண்ணிய நுட்பத்தினால் சுதந்திர பாதியஸ்தராயிருந்தே அல்லாமல் உண்டாயிருக்கவில்லை.

இன்னும் அல்லாஹ்தஆலா தனது திவ்விய திருச்சமூகத்தளவில் நல்வரவருளைப் பெற்ற அந்நாயகரின் பரிசுத்த சிறப்பான தாத்து நுட்பத்தின் மீதும், அவர்களின் மித்திர சகாக்கள் சமஸ்த சமூகத்தினர் மீதும், தங்கள் மிஃராஜ் சரித்திர பீடிகை புகழ்ச்சியின் கருத்துக்களை எடுத்தோதுவது கொண்டும் அவ்விரவின் ஹதீது

திரு நபி வாக்கியங்களாகிய கோவையான, உதிரியான முத்து ரத்தினாதிகளை விரித்துரைப்பதாலும், நமது மணமாக்கப்பட்ட "தாபதாபென்னும்" திருநாமம் தரித்த மஹ்பூப் நாயகத்தை புகழ்ந்தேற்றுபவர்கள், நித்யானந்த பரவச சுகம் பெற்று வாழும் காலமெல்லாம் ஸலவாத்து, ஸலாம் திருக்கருணையும் நல் ஈடேற்றமும் புரிந்தருள்வானாக ! ஆமீன்.

இனி நாம் நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மிஃராஜ் சரித்திரவிருத்தாந்த சமுத்திர பிரவாகத்திரைகளினோர் கிரங்கை விவரிப்பதில் மிஃராஜ் என்னும் அகழின் சுனையில் ஒலிக்குமோர் துளியை விளக்குவதில் ஆரம்பித்து அதன் சுகந்த நறுமலர் வாடையில் நின்றும் பரிமளம் வீசத்தக்க களப்ப கஸ்தூரி அத்தர் முதலிய கமளம் வாசனை திரவியங்களை இந்த மணமான, பரக்கத்தான மஜ்லிஸில் சமூகமாயிருப்போர், ஓதுவோர், கேட்போர், முதலியோர்களின் சன்னிதியில் பரந்து வாசிக்கச் செய்கிறேன். பின்பு இந்தக் கோவையான, உதிரியான முத்து மாணிக்கங்களால் ஓர் அபூர்வ பிரதான பட்டு, பரிவட்டமுடித்து அதுக் கொண்டு எனது புகழுக்குரிய அம் மகானின் மேலான சம்பூரண, சுயஞ்ஜோதி திருமுக வதனத்திற்கு காணிக்கை வைக்கிறேன். இன்னும் நம் முஸ்தபா நாயகமவர்களின் துப்புரவான தாத்து நுட்பத்தில் கசிந்தொழுகும் பைழு கனிவின் பொலிவை நாடினவனாகவும், அவர்களில் நின்றும் சர்வ சிருஷ்டிகளுக்கும் அருளத்தக்க நிஃமத்து, பரக்கத்தென்னும் சௌபாக்கியத்தின் வரிசையைக் கொண்டு ஆதரவு தேடினவனாகவும் இருக்கிறேன்.

இன்னும் நான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பரிசுத்த ரூஹ் ஆத்மீக சமூகத்தில் இவ்வரியப் பெரிய புண்ணிய, தரும, கைங்கரியத்தில் உதவி தேடினவனாகவும் இருக்கிறேன். ஏனெனில் அவர்களே தங்கள் திவ்விய, சமூகத்தைக் கொண்டு துஆ இறக்கும் எல்லா ஒவ்வொருவனின் இகபரலோக சர்வ அத்தியா வசியங்களுக்குரிய பிரார்த்தனைகளை அங்கீகரிக்கப்படுவதற்கு தக்க உரிமையாளராகவும் காரண புருஷராகவும் இருக்கிறார்கள்.

مولاي صلّ وسلّم دائمًا ابدًا

سُبْحَانَ رَبِّي مَنْ بِالْعَبْدِ اَسْرَاهُ — مِنْ مَسْجِدِ الْحَرَامِ الْمَحْمِيْ بِبَطْحَاهُ

لَيْلًا اِلَى الْمَسْجِدِ الْاَقْصٰى الْمُقَدَّسِ اَنْ — يُعْصٰى بِهٖ فَاِلَى الْاَعْلٰى فَاَعْلَاهُ

مِنْ عَالَمِ الْعُلْوِ مِنْ سَبْعِ الطِّبَاقِ مِنَ الْ — جَنَّاتِ وَالنَّارِ وَالْاَرْوَاحُ تَلْقَاهُ

مِنْ مُنْتَهَى السِّدْرِ مِمَّا لَا انْتِهَاءَ لَهٗ — مِنْ مُسْتَوَى الْعَرْشِ فَالرَّحْمٰنُ نَادَاهُ

نَادٰى وَدَلّٰى اِلٰى اَنْ كَانَ قُرْبَهٗ — مِنْ قَابِ قَوْسَيْنِ قُرْبًا ثُمَّ اَدْنَاهُ

حَتّٰى دَنٰى فَتَدَلّٰى لَا مَكَانَ وَلَا — شَاْوٌ لَمُكْنَتِهٖ مِّنْ دُوْنِ مَرْقَاهُ

نَعَمْ تَثَنّٰى حَبِيْبًا لِلْمُحِبِّ وَلَا — مُثَلَّثٌ ثُمَّ كَلَّا بَلْ وَحَاشَاهُ

لَقَدْ رَاٰى الْاٰيَةَ الْكُبْرٰى بِقُدْرَتِهٖ — وَكَمْ اَعَاجِيْبَ وَالْاَنْوَارُ تَغْشَاهُ

اَوْكَمْ اَعَاجِيْبَ وَالْاَنْوَارَ شَاهَدَهٗ — اَوْكَمْ خَفِيِّ عُلُوْمٍ قَدْ تَلَقَّاهُ

مِنْ عَالَمِ الْغَيْبِ اِذْ اَوْحٰى اِلَيْهِ بِمَا — اَوْحَى الْمُهَيْمِنُ فِي السَّرَّا وَضَرَّاهُ

وَعَايَنَ اللّٰهَ حَقًّا رَاْيَ يَقْظَتِهٖ — بِعَيْنِ رَاْسٍ وَعَيْنِ الْقَلْبِ تَرْعَاهُ

وَرَحَّبَ اللّٰهُ لُقْيَاهُ وَبَشَّرَهٗ — مُلَاطِفًا جِسْمَهٗ مِنْ حَيْثُ رَقَّاهُ

فَبَعْدَ اَنْ قَرَّ عَيْنًا عَادَ مُنْتَحِلًا — بِخَيْرِ دِيْنٍ مِّنَ الْقُرْاٰنِ اَمْلَاهُ

وَبِالشَّفَاعَةِ فَضْلًا اَنْ يُّخَلِّصَنَا — مِنَ الْجَحِيْمِ اِلَى الْفِرْدَوْسِ مَاْوَاهُ

يَارَبِّ صَلِّ عَلَيْهِ دَائِمًا وَّعَلٰى — اٰلٍ وَّصَحْبٍ وَمَنْ اَوْلٰى فَاَوْلَاهُ

2. பைத்தின் உரை

1) எனது ஆண்டவன் அல்லாஹ் தஆலாவை தூய்மைப்படுத்துகிறேன் அவன் தனது சொந்த அடிமையாகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை திரு மக்கா மாநகரில் பாதுகாக்கப்பட்ட கஃபத்துல்லா வெனும் சங்கையான பள்ளியிலிருந்து இராவழி நடத்தினான்.

2) பரிசுத்த பைத்துல் முகத்தஸெனும் பள்ளியிடத்திலும் அதற்கு மேலும் அதன் மேலும் உயர்த்தினான்.

3) அதாவது மேல் லோகமாகிய ஆன்மாக்கள் சந்திக்கத் தக்க ஏழடுக்கு வானங்கள், சுவர்க்க நரகம்.

4) இன்னும் தீச்சையற்ற ஸ்தலமாகிய "சித்ரத்துல் முன்தஹா" வென்னும் கற்பக விருட்சம், தெய்வீக ஆசிரமமாகிய அர்ஷின் திவ்விய சமஸ்தானங்களுமாம். ஆகவே ரஹ்மானாகிய ஆண்டவன் அவர்களைக் கூப்பிட்டான்.

5) காபகவ்ஸைனி அவ்அத்னா வென்னும் சமீப சாயுட்சமய சமீபத்தில் நல்வரவேற்றான்.

6) நாயகம் தங்கள் உயர்பதவியின் அடுத்த படியில் ஏறுகிற எவருக்கும் யாதொரு ஜோடியும், தானமும் ஈந்திரா வண்ணம் அதனை நெருங்கிச் சென்றார்கள்.

7) மெய்தான். அவ்விடத்தில் மூன்றாவதொருவருமின்றி முஹிப்பாகிய ஆண்டவனுக்கு ஹபீபாகிய தாங்களே இரண்டாவதாக இருந்தார்கள்.

8) திட்டமாக ஆண்டவனின் குத்ரத்தினால் அரும்பெரும் திருஷ்டாந்தங்களை தரிசித்ததும், எம்மாத்திரமோ அற்புத அதிசய ஒலிகள் அவர்களை பொதிந்துக் கொண்டன.

9) இன்னும் எத்தனையோ அதிசய ஆச்சரியமான ஒளிகளையும் அந்தரங்க அறிவுகளையும் தரிசித்து அறிந்தார்கள்.

10) சூட்சாதி சூட்சய அறிவுடைய ஆண்டவன் இரகசிய

பராசியத்தில் வஹி அறிவித்த பரம இரகசியங்களை தெரிந்துக் கொண்டார்கள்.

11) தங்கள் அகக்கண் பேணுதலுடன் தலைக்கண்களால் விழிப்பிலேயே அல்லாஹ் தஆலாவை நிச்சயமாகக் கண்டார்கள்.

12) அல்லாஹ் தஆலா நாயகமவர்களை மேலே உயர்த்துகையில் தங்கள் ஸ்தூல திரேகத்தை மிருதுவாக்கி, அவர்களின் சந்திப்பை நல்வரவேற்று வந்தனமளித்தான்.

13) பின்பு அல்லாஹ்தஆலாவை கண்குளிரக் கண்டபின் திருக்குர்ஆன் ஷரீபின் பூர்வ பீடிகையாகிய நன்மார்க்க நியம, நிஷ்டயாகிய ஒழுக்க, வணக்கங்களைப் பெற்றவர்களாகவும்

14) பிரதானமாக நம்மை கொடிய நரகத்தைவிட்டும், கடைத்தேற பிர்தெளஸென்னும் சுவனப் பதியில் சேர்த்து வைக்கும் பொருட்டு மனமார்ந்த மன்றாட்டம் கொண்டும் மீண்டு வந்தார்கள்.

16) எனது ஆண்டவனே ! அந்நாயகத்தின் மீதும், அவர்களின் சமுக சகாக்கள் மீதும், அடுத்தடுத்த தரவாரியான உரித்தாளிகள் மீதும் நீடுழிகாலம் ஸலவாத்து, ஸலாம் கருணையும், ஈடேற்றமும் பாலித்தருள்வாயாக !

ثُمَّ نَبْتَدِأُ الْمَقَالَ، بِسْمِ اللهِ الْمَلِكِ الْمُتَعَالِ، وَهُوَ
خَيْرُ قَابِلٍ، وَقَالَ عَزَّ مِنْ قَائِلٍ، سُبْحَانَ الَّذِىْ اَسْرٰى
بِعَبْدِهٖ لَيْلًا مِّنَ الْمَسْجِدِ الْحَرَامِ، قَالَ اَنَسٌ رَضِىَ اللهُ
عَنْهُ هُوَ الْكَعْبَةُ، وَقِيْلَ مِنْ بَيْتِ فَاخِتَةَ الْمَشْهُوْرَةِ
بِاُمِّ هَانِئٍ بِنْتِ اَبِىْ طَالِبٍ، اِلَى الْمَسْجِدِ الْاَقْصٰى يَعْنِىْ
بَيْتَ الْمُقَدَّسِ، لِكَوْنِهٖ مُنَزَّهًا مِنَ الْاَصْنَامِ وَيُتَطَهَّرُ

فِيهِ مِنَ الْاٰثَامِ، ثُمَّ اخْتَلَفَ الْعُلَمَاءُ فِي مِعْرَاجِهٖ وَ
اِسْرَآئِهٖ بِالرُّوْحِ اَوْ مَعَ الْجَسَدِ، وَالْاَصَحُّ اَنَّـهُـمَا
بِالرُّوْحِ وَالْجَسَدِ، مَعًا يَقَظَةً فِي الْبَارِحَةِ، اِلٰى حَيْثُ
شَاءَ اللّٰهُ مِنْ مَقَامِ الْمُكَافَحَةِ، وَالصَّوَابُ اَنَّهٗ كَانَ
الْمِعْرَاجُ بِمَكَّةَ لَيْلَةَ السَّابِعَةِ وَالْعِشْرِيْنَ، مِنْ
رَجَبَ بَعْدَ النُّبُوَّةِ بِعَشْرِ سِنِيْنَ، وَكَانَ لَيْـلَـةَ
الْاِثْنَيْنِ اَوْ لَيْلَةَ السَّبْتِ، وَذٰلِكَ اَنَّ اللّٰهَ تَعَالٰى لَمَّا
اَرَادَ اَنْ يُّسْرِيَ بِمُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ اِلٰى
حَضْرَةِ قُدْسِهٖ، وَيُقَرِّبَهٗ لِمَحَلِّ كَرَامَتِهٖ وَاُنْسِهٖ،
قَالَ يَا جِبْرِيْلُ قُمْ وَتَدَرَّعْ بِالْاَجْنِحَةِ الطَّاؤُسِيَّةِ،
وَرَصِّعْ اَجْنِحَتَكَ بِالْجَوَاهِرِ السَّنِيَّةِ، وَلَا تَبْرُزْ اِلَّا
بِسَبْعِ مِأَةِ اَلْفِ جَنَاحٍ، وَسَبْعِ مِأَةِ اَلْفِ وِشَاحٍ، وَخُذْ
مَعَكَ مِيْكَائِيْلَ، وَاِسْرَافِيْلَ وَعِزْرَائِيْلَ، وَمَعَ كُلٍّ
مِّنْكُمْ سَبْعُوْنَ اَلْفَ مَلَكٍ بِالتَّسْبِيْحِ وَالتَّهْلِيْلِ، ثُمَّ
اذْهَبْ اِلَى الْجَنَّةِ وَخُذْ اَحْسَنَ الْبُرَاقِ، مِنْ اَرْبَعِيْنَ
اَلْفِ بُرَاقٍ، مَكْتُوْبٍ فِيْ جَبْهَتِهٖ لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ

رَسُوْلُ اللّٰہِ، ثُمَّ اَنْزِلْ مَعَھُمْ اِلٰی دَارِالدُّنْیَا بِلَا تَوَانِیْ
وَادْخُلْ بِمَکَّۃَ فِیْ بَیْتِ اُمِّ ھَانِیْ، وَفِیْہِ یَتِیْمُ اَبِیْ
طَالِبٍ فَاِذَا وَصَلْتَ اِلَیْہِ فَاحْتَرِمْہُ بِالْاِکْرَامِ، وَالْزَمْ
خِدْمَتَہٗ عَلَی الدَّوَامِ، وَتَأَدَّبْ تَأَدُّبَ الْخُدَّامِ لَدَیْہِ،
وَاَکْثِرْ مِنَ الصَّلٰوۃِ وَالسَّلَامِ عَلَیْہِ، وَقُلْ یَا اَیُّھَا
الْمُزَمِّلُ یَا اَیُّھَا الْمُدَّثِّرُ رَبُّکَ یُقْرِئُکَ السَّلَامَ،
وَیَدْعُوْکَ لِیَحْبُوْکَ خَیْرَ الْاِنْعَامِ، فَذَھَبَ جِبْرِیْلُ
بِاَمْرِ رَبِّہِ الْجَلِیْلِ، وَرَاٰی بُرَاقًا بَاکِیًا، قَدْ تَرَکَ
الْاَکْلَ وَالشُّرْبَ ذَاوِیًا، فَسَاَلَہٗ عَنِ الْمَقْصَدِ،
فَقَالَ شَوْقًا اِلَی اسْمِ مُحَمَّدٍ، فَاَخَذَہٗ وَھُوَ فَوْقَ الْحِمَارِ
دُوْنَ الْبَغْلِ، عَلٰی صُوْرَۃِ وَجْہِ الْاٰدَمِیِّ بِقَوَائِمِ الْاِبِلِ،
وَذَنَبُہٗ کَالْبَقَرَۃِ، وَجَبِیْنُہٗ کَالزَّھْرَۃِ، وَلَوْنُہٗ کَالطَّاؤُسْ
وَبَدَنُہٗ مِنَ الْیَاقُوْتِ النَّفِیْسِ، وَرَأْسُہٗ مِنَ الْمِسْکِ
الْاَذْفَرِ، وَعُنُقُہٗ مِنَ الْعَنْبَرِ، وَخُطْوَتُہٗ مُنْتَھَی الْبَصَرِ
مَشْدُوْدٌ بِسِلْسِلَۃِ التِّبْرِ وَالْجَوْھَرِ اَللّٰھُمَّ صَلِّ وَ
سَلِّمْ وَبَارِکْ عَلَیْہِ

3. ஹிகாயத்தின் வரலாறு

பின்னர் நாம் அதி உன்னத மேன்மையான உத்தம இராஜனாகிய அல்லாஹ் தஆலாவின் திருநாமத்தை முன்னிட்டு இந்த மிஃராஜின் வரலாற்றை துவக்குவோம். அவனே அதை அங்கீகரிப்பதில் மிக சிலாக்கியமானவன். இன்னும் சிறப்பான திருவசனத்திற்குரிய ஆண்டவன். அல்லாஹ்தஆலா திருவுளமானான். சங்கையான பள்ளியில் நின்றும் தனது சொந்த அடியார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இராவழி நடத்திய நாயன் தூயவன்.

அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அருட் செய்கிறார்கள். சங்கையான பள்ளி என்ற தன் கருத்தாவது கஃபத்துல்லா திருமக்காவின் பரிசுத்த சேத்திரமாகும். இன்னுமொரு சொல்லின்படி அபூ தாலிபின் புதல்வி பாஹிதா வென்று பிரசித்திப் பெற்ற உம்முஹானி ரழியல்லாஹு அன்ஹாவின் வீட்டிலிருந்து தூரமான பள்ளி வரையில் அதாவது பரிசுத்தப்பட்டணம் என்று பொருட்பட்ட பைத்துல் முகத்தஸாகும். அது விக்கிரகங்களை விட்டு துப்புரவாக்கப்பட்டிருப்பதாலும் பாவங்களை விட்டும் சித்தமாக்கப் பட்டிருப்பதாலுமே அங்ஙனம் பெயர் பெற்றது.

பின்னர் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மிஃராஜ் என்னும் வினோத யாத்திரையானது ரூமா தங்களின் ஆத்மாவைக் கொண்டு மாத்திரமா? அல்லது ஜஸது சரீரத்தோடுமா? வென்ற விஷயத்தில் "உலமாவு" கல்விமான்கள் அபிப்பிராயத்தில் பலவாறு விகர்ப்பம் கூறியிருக்கின்றார்கள். எனினும் மிகப் பலமான சொல்லின்படி ஆத்மாவும், சரீரமும் உடந்தையாகவே அல்லாஹ் தஆலா நாடிய தானமாகிய சமூக சம்பாஷணையின் ஸ்தலம் வரையில் நள்ளிரவில் விழிப்பிலேயே நுவுவ்வத் நபித்துவத்திற்கு பத்து வருடங்களுக்குப் பின் ரஜபு மாதம் இருபத்தேழு திங்கள் அல்லது சனி இரவிலாயிருந்தது.

வரலாறாவது பூர்வாங்கமாக, அல்லாஹ் தஆலா தனது ஹபீபாகிய நமது நாயகம் ஹழ்ரத் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தனது பரிசுத்த சமூகத்தளவில்

இராவழி நடத்திவிக்கவும், தனது மகத்துவ மருவுதலென்னும் ஐக்கிய ஸ்தலத்தளவில் முடுகச் செய்யவும் நாடிய போது ஜிப்ரிலென்னும் அமரர் கோனை அழைத்து ஜிப்ரிலே ! நீரெழுந்து உமது கலப,மரகத மயில்தோகை வடிவுடைய அங்கவஸ்திரங்களை அணிந்துக் கொள்ளும் விசித்திர இறக்கைகளை அழகிய நவரத்தினதிகளால் அலங்கரித்துக் கொள்ளும். எழுபதனாயிரம் சிறகுகளும் எழுபதனாயிரம் போர்வைகளுமின்றி வெளிக்கிட வேண்டாம். உம்முடன் மீக்காயீல், இஸ்ராபீல், இஜ்ராயீல் அலைஹிமிஸ் ஸலாமென்னும் தேவத் தூதர்களையும் கூட்டிக் கொள்ளும். உங்களில் ஒவ்வொருவருடனும் எழுபதினாயிரம் மலாயிக்கத் அமரர்களையும் தஸ்பீஹ், தஹ்லீல் திருமந்திரத்தை முழக்கினவர்களாய் சேர்த்துக் கொள்ளும்.

இன்னும் சுவனலோகத்தில் சென்று நாற்பதினாயிரம் புராக்கெனும் தெய்வ வாகனங்களிலிருந்து நெற்றியில் "லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ்" என்ற இஸ்லாமிய மூலவாக்கியத்தை பொறிக்கப்பட்ட அழகிய இலட்சணமுடைய ஓர் புராக்கை தெரிந்தெடுத்துக் கொள்ளும். அந்த அமரர்களுடன் தாமதமின்றி பூலோகத்திறங்கி உம்மு ஹானி ரழியல்லாஹுஅன்ஹாவுடைய வீட்டிற்குள் செல்லும். அவ்விடத்தில் அபூதாலிபின் எதீம் அநாதையான அருமைக் குமாரரிருக்கிறார். நீர் அவரிடம் சென்றால் அவருக்கு சங்கை மரியாதைச் செய்யும் அவருடைய பணிவிடையை எப்பொழுதும் பற்றிக் கொள்ளும். அவரிடத்தில் ஊழியக் காரரின் ஒழுங்காய் சேவைப்புரியும். அவர் பேரில் கருணை ஈடேற்றத்தை மிகுதப்படுத்தும். அவருக்கு சொல்லும் போர்வை அங்கவஸ்திரம் அணிந்தவரே ! உமது நாயன் உமக்கு ஸலாமுரைத்தான். உமக்கு நல்ல சன்மானம் அருள வேண்டி உம்மை அழைக்கிறானென கூறி அனுப்பினான்.

ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் தமது வலுப்பமுடைய ஆண்டவனின் விடைப் பெற்று அங்குச் செல்லவே ஓர் அழகிய புராக்கானது ஊண், குடிப்பை விடுத்து, மெலிந்து வதங்கிய திரேகத்தோடு அழுது, சலித்திருக்கக் கண்டு அதன் நாட்டத்தைப் பற்றி வினவினார். அது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திரு

நாமத்தை ஆசை வைத்திருக்கிறேன் எனச் சொல்லவே அதைப் பிடித்தார்கள். அது கழுதையிற் பெரிதாகவும் கோவேறு கழுதையிற் சிறியதாகவும், மனித முகத்தின் வடிவமாகவும், ஒட்டகையின் கால்களுடையதாகவும் இருந்தது. அதில் வாலானது மாட்டின் வால் போலும் நெற்றி இளம் பிறைப் போன்றும், நிறம் மயிலுக்கொப்பாயும் உடல் உயர்ந்த மாணிக்கத்தாலும், சிரசு சுகந்த கஸ்தூரியினாலும், கழுத்து அம்பரினாலுமிருந்தன. அதன் ஒவ்வோர் காலடியின் தூரம் பார்வை எட்டும் தொலையாகவும், இரத்தினங்கள் இழைக்கப்பட்ட பொற் சங்கிலியினால் கட்டப் பட்டிருந்தது. ஆண்டவனே ! அவர்கள் மீது ஸலவாத்து ஸலாம் சொல்வாயாக.

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ	لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ
لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ	مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰه
اَلنَّبِيُّ صَلُّوْا عَلَيْهِ	وَالرَّسُوْلُ صَلُّوْا عَلَيْهِ
اَيُّهَا الْعُشَّاقُ فِيْهِ	دَائِمًا صَلُّوْا عَلَيْهِ
اَلنَّبِيُّ هٰذَا الْكَرِيْمُ	ذَاتُهٗ فَيْضٌ عَمِيْمٌ
خُلُقُهٗ خُلُقٌ عَظِيْمٌ	دَائِمًا صَلُّوْا عَلَيْهِ
اَلنَّبِي السَّامِي الْمَقَامْ	خَيْرُ مَنْ صَلّٰى وَصَامْ
جُوْدُهٗ فِي الْكَوْنِ عَامْ	دَائِمًا صَلُّوْا عَلَيْهِ
اَلنَّبِي الْهَادِي الْبَشِيْر	خَيْرُ دَاعِيْنَا النَّذِيْرْ
نِعْمَ جَارُ الْمُسْتَجِيْرْ	دَائِمًا صَلُّوْا عَلَيْهِ
اَلنَّبِيُّ خَيْرُ الْبَشَرْ	مَنْ لَهُ انْشَقَّ الْقَمَرْ
وَاَتٰى لَهُ الشَّجَرْ	دَائِمًا صَلُّوْا عَلَيْهِ

اَلْغَمَامُ قَدْ اَظَلْ | وَالزُّلَالُ قَدْ هَمَلْ
مِنْ يَمِيْنِهٖ هَطَلْ | دَائِمًا صَلُّوْا عَلَيْهِ
اَلْوُحُوْشُ عَظَّمَتْ | قَدْرَهٗ وَكَلَّمَتْ
وَعَلَيْهِ سَلَّمَتْ | دَائِمًا صَلُّوْا عَلَيْهِ
قَدْ سَرٰى لَيْلًا ظَلِيْلْ | نَحْوَ مَوْلَاهُ الْجَلِيْلْ
وَالْمُنَادِيْ جِبْرَئِيْلْ | دَائِمًا صَلُّوْا عَلَيْهِ
وَرَقٰى فَوْقَ الْبُرَاقْ | وَالْاَمِيْنُ مَعًا وَّسَاقْ
وَعَلَا السَّبْعَ الطِّبَاقْ | دَائِمًا صَلُّوْا عَلَيْهِ
خَيْرَةُ الرُّسُلِ الْكِرَامْ | زُبْدَةُ الْعُرْبِ الْعِظَامْ
صَفْوَةُ الْحَيِّ الْجِسَامْ | دَائِمًا صَلُّوْا عَلَيْهِ
قِبْلَةٌ لِّلْمُؤْمِنِيْنْ | رَحْمَةٌ لِلْعَالَمِيْنْ
نِعْمَةُ الدُّنْيَا وَدِيْنْ | دَائِمًا صَلُّوْا عَلَيْهِ
يَاخَطِيْبَ الْاَنْبِيَا | يَانَقِيْبَ الْاَصْفِيَا
يَاحَبِيْبَ الْاَتْقِيَا | دَائِمًا صَلُّوْا عَلَيْهِ
اَنْتَ سِرُّ الْعَارِفِيْنْ | اَنْتَ رَمْزُ الْعَاشِقِيْنْ

أَنْتَ مَعْنَى الْحَامِدِيْنَ ‎ | ‏ دَائِمًا صَلُّوا عَلَيْهِ

يَاشَفِيْعَ الْمُذْنِبِيْنَ ‎ | ‏ عَبْدُكَ الْعَاصِي الْمَهِيْنْ

فَاقْبَلُوْهُ كُلَّ حِيْنٍ ‎ | ‏ دَائِمًا صَلُّوا عَلَيْهِ

وَلَصَلَّى اللهُ عَلَيْكَ ‎ | ‏ تُحْفَةً بَيْنَ يَدَيْكَ

وَالرِّضَى عَمَّنْ لَدَيْكَ ‎ | ‏ دَائِمًا صَلُّوا عَلَيْهِ

4. பைத்தின் உரை

1) இந்த நபிநாயகர் மீது ஸலவாத்துச் சொல்வீர்களாக ! இந்த ரசூல் நாயகர் மீது ஸலவாத்துச் சொல்வீர்களாக ! அவர்களிடத்தில் ஆசை பூண்டவர்களே ! அவர்கள் பேரில் நித்தியமும் ஸலவாத்துச் சொல்வீர்களாக !

2) இந்த நபியானவர் சங்கை வாய்ந்தவர். இவரது திரு தீர்த்தானது கருணை ஒலிக்கும் சுனையாகும். இவரது குணமோ சாந்த சற்குணம். அவர்கள் பேரில் நித்தியமும் ஸலாவத்துச் சொல்வீர்களாக !

3) இந்த நபியானவர் உயர்பதவியினர். தொழுபவர் நோன்பு பிடிப்பவரில் விசேஷமானவர். இவரது கொடை அகில உலகிலும் ஏக மயமானது. அவர்கள் பேரில் நித்தியமும் ஸலவாத்துச் சொல்வீர்களாக !

4) இந்த நபியானவர் சன்மார்க்க வழிக்காட்டி. தெய்வ அருள்வாக்கி, நம்மை அல்லாஹ்விடத்தில் அழைப்போர், துஷ்டரை அச்சம் பூட்டுகிறவர். சார்ந்தோருக்கு தக்க சகாயமளிப்பவர். அவர்கள் பேரில் நித்தியமும் ஸலவாத்துச் சொல்வீர்களாக !

5) இந்த நபி மனுஷரில் நல்லவர். அவருக்காக பிறை இரு பிளவாயது. அவரிடம் விருட்ஷம் ஊர்ந்து வந்தது. நித்தியமும் அவர்கள் பேரில் ஸலவாத்து சொல்வீர்களாக !

6) மேகம் அவருக்கு நிழலிட்டது. அவரின் வலக்கரத்திலிருந்து

மதுரமான ஜலம் பொங்கி ஒலித்தது. அவர்கள் பேரில் நித்தியமும் ஸலவாத்தும் சொல்வீர்களாக !

7) விலங்கினங்கள் அவர் தகுதியை மதித்து அவரோடு பேசி ஸலாமுரைத்தது. அவர்கள் போல் நித்தியமும் ஸலவாத்து சொல்வீர்களாக !

8) காரிரவில் வல்ல நாயனிடம் ஜிப்ரீல் அழைத்தேகச் சென்றார்கள். அவர்கள் பேரில் நித்தியமும் ஸலவாத்து சொல்வீர்களாக.

9) ஜிப்ரீல் இழுத்துப் போகும்படி புராக்கின் மீதேறி, ஏழுவான்களுக்கு மேல் உயர்ந்தார்கள். அவர்கள் பேரில் நித்தியமும் ஸலவாத்து சொல்வீர்களாக.

10) சங்கை வாய்ந்த ரசூல்மார்களில் ஹைரானவர். மகிமைக்குரிய அரபிகளில் தெரியப்பட்டவர். வலுப்பமான கிளையினரில் தெளிந்தவர். அவர்கள் பேரில் நித்தியமும் ஸலவாத்துச் சொல்வீர்களாக.

11) முஃமினானவர்கட்கு முன்னிலையானவர்கள். ஆலத்தாருக்கு ரஹ்மத்தானவர். தீன், துன்யாவின் நிஃமத்தானவர். அவர்கள் பேரில் நித்தியமும் ஸலவாத்து சொல்வீர்களாக.

12) அன்பியாக்களின் போதகரே ! அஸ்பியாக்களின் நாயகரே ! தக்வா உடையவரின் நண்பரே. அவர்கள் பேரில் நித்தியமும் ஸலவாத்துச் சொல்வீர்களாக !

13) தாங்களே ஆரிஃபீன்களின் அகமியம், தாங்களே ஆஷிக்கீன்களின் அந்தரங்கம். தாங்களே புகழ்பாடுவோரின் இலட்சியம். அவர்கள் பேரில் நித்தியமும் ஸலவாத்துச் சொல்வீர்களாக.

14) பாவிகளை மன்றாடும் இரட்சகரே ! இதோ கேவலம் தங்களின் பாவியான அடியேன். தாங்கள் அவனை சதாவும் அங்கீகரித் தருள்வீர்களாக. அவர்கள் பேரில் நித்தியமும் ஸலவாத்து சொல்வீர்களாக !

15) அல்லாஹ் தஆலா தங்கள் பேரில் ஸலவாத்தை சமுக காணிக்கை வைப்பானாக ! தங்களைச் சார்ந்தோர்களைத் தொட்டும் அவனது திருவுளப் பொருத்தம் உண்டாவதாக ! அவர்கள் பேரில் நித்தியமும் ஸலவாத்துச் சொல்வீர்களாக.

فَلَمَّا نَزَلَ بِهٖ جِبْرِيْلُ اِلَى الدُّنْيَا قَرَعَ حَلْقَةَ الْبَابِ
وَاقِفًا لَدَى الْاَعْتَابِ، وَقَالَ قُمْ يَا يَتِيْمَ اَبِيْ طَالِبٍ
قَدْ هُيِّئَتْ لَكَ الْمَطَالِبُ، قُمْ يَا مُحَمَّدُ اللَّيْلَةُ لَيْلَتُكَ
وَالدَّوْلَةُ دَوْلَتُكَ، قُمْ يَا حَبِيْبِيْ فَاِنَّ الْبَابَ مَفْتُوْحٌ
وَالْعَطَا عَلَيْكَ مَمْنُوْحٌ، قُمْ يَا سَيِّدِيْ وَتَاَهَّبْ، وَ
عَلٰى ظَهْرِ الْبُرَاقِ فَارْكَبْ، فَسَمِعَهٗ صَلَّى اللّٰهُ عَلَيْهِ
وَسَلَّمَ، فَقَالَ يَا جِبْرِيْلُ جِئْتَنِيْ بِاٰيَةِ رَحْمَةٍ اَمْ بِاٰيَةِ
نِقْمَةٍ، فَقَالَ اِنَّ اللّٰهَ يُقْرِئُكَ السَّلَامَ وَيَدْعُوْكَ
لِحَضْرَةِ الْعِزِّ وَالْاِكْرَامِ، لِمَا بَيْنَكَ وَبَيْنَهٗ مِنَ الْاَسْرَارِ
الْعِظَامِ، فَقَالَ يَا اَخِيْ جِبْرِيْلُ الْكَرِيْمُ يَدْعُوْنِيْ فَمَاذَا
يَصْنَعُ بِيْ، فَقَالَ لِيَغْفِرَ لَكَ اللّٰهُ مَا تَقَدَّمَ مِنْ
ذَنْبِكَ وَمَا تَاَخَّرَ، قَالَ هٰذَا لِيْ، فَمَا لِاُمَّتِيْ فَقَالَ
وَلَسَوْفَ يُعْطِيْكَ رَبُّكَ، اَيِ الشَّفَاعَةَ الْكُبْرٰى
خُصُوْصًا فِيْ اُمَّتِكَ فِي الْقِيٰمَةِ فَتَرْضٰى قَالَ مَهْلًا
حَتّٰى اَتَوَضَّاَ، فَاَتٰى جِبْرِيْلُ وَمِيْكَائِيْلُ بِمَاءِ زَمْزَمَ

فِیْ طَسْتٍ اَوْ بِمَاءِ السَّلْسَبِیْلِ، مَعَ حُلَّةٍ مِّنْ سُنْدُسٍ اَخْضَرَ وَعِمَامَةٍ مِّنْ نُوْرٍ اَسْفَرَ، مَکْتُوْبٌ عَلَیْهَا اَرْبَعَةُ اَسْطُرٍ، اَلْاَوَّلُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ، اَلثَّانِیْ مُحَمَّدٌ نَبِیُّ اللّٰهِ، اَلثَّالِثُ مُحَمَّدٌ حَبِیْبُ اللّٰهِ، اَلرَّابِعُ مُحَمَّدٌ خَلِیْلُ اللّٰهِ، فَلَمَّا اَتَمَّ طُهْرَهٗ، شَقَّا صَدْرَهٗ، وَاَخْرَجَا قَلْبَهٗ، وَغَسَلَا لُبَّهٗ، وَاَزَاحَا عَنْهُ حَظَّ الشَّیْطَانِ وَاَفْرَغَا فِیْ صَدْرِهِ الْحِکْمَةَ وَالْاِیْمَانَ، وَمَلَاٰ قَلْبَهٗ عِلْمًا وَّیَقِیْنًا فَخَاطَاهٗ، وَخَتَمَا بَیْنَ کَتِفَیْهِ بِخَاتِمِ النُّبُوَّةِ مَا اَتَمَّ وَاَجْلَاهٗ،

شعر

خَتَمَتْهُ یُمْنَ الْاَمِیْنِ فَقَدْ اُوْ | دِعَ مَا لَمْ تُذَعْ لَهُ الْاَنْبَاءُ
صَانَ اَسْرَارَهُ الْخِتَامُ فَلَا الْفَـضُّ مُلِمٌّ بِهٖ وَلَا الْاِفْضَاءُ

وَیَالَهٗ مِنْ نُوْرٍ بِحَارٍ دُوْنَهُ النَّاظِرُ اِلٰی اَشِعَّةِ لَاْلَاْئِهٖ، وَکَانَ ذٰلِکَ فِی الشَّقَّةِ الرَّابِعَةِ الْخَاصَّةِ لِهٰذَا النَّبِیِّ الْعَاشِرِ الْکَرِیْمِ مُحَیَّاهُ، ثُمَّ قَدَّمَ

جِبْرِيْلُ الْبُرَاقَ اِلَيْهِ، فَتَاَهَّبَ النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ
وَسَلَّمَ لِلرُّكُوْبِ عَلَيْهِ، فَاَدْبَرَ الْبُرَاقُ نَافِرًا، فَقَرَعَهٗ
جِبْرِيْلُ بِسَوْطِ التَّاْدِيْبِ بَاسِرًا، وَقَالَ اَمَا تَسْتَحْيِ
مِنْهُ، فَوَالَّذِيْ نَفْسِيْ بِيَدِهٖ مَا عَلَا ظَهْرَكَ اَفْضَلُ
مِنْهُ، فَقَالَ الْبُرَاقُ هٰذَا النَّبِيُّ الْمَسْعُوْدُ، هٰذَا
صَاحِبُ اللِّوَاءِ الْمَعْقُوْدِ، وَالْحَوْضِ الْمَوْرُوْدِ، وَ
الْمَقَامِ الْمَحْمُوْدِ، قَالَ نَعَمْ، فَعِنْدَ ذٰلِكَ خَضَعَ لَهٗ
وَقَالَ ارْكَبْ يَا نَبِيَّ الرَّحْمَةِ، يَا شَفِيْعَ الْاُمَّةِ، وَلَا تَنْسَ
نَصِيْبِيْ مِنْ شَفَاعَتِكَ يَوْمَ الْقِيٰمَةِ ○ اَللّٰهُمَّ صَلِّ وَ
سَلِّمْ وَبَارِكْ عَلَيْهِ ○

5. ஹிகாயத்தின் வரலாறு

பின்பு ஜிப்ரீலானவர் புராக்கைக் கொண்டு உலகத்திலிறங்கி நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வீட்டு வாயலிற்றியப் பட்டவராய் கதவை தட்டிச் சொன்னதாவது அபூதாலிபின் அநாதையாகிய அருமை மகனே ! எழுந்திரும். உமக்குள்ள நாட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. முஹம்மதே ! எழுங்கள் இன்றிரவானது உமது இரவும், இந்த வாழ்வானது உமது வாழ்வுமாகும். எழுந்தருளும். எனது நண்பரே ! நிஜமாக வாயல் திறக்கப்பட்டிருக்கிறது. நன்கொடை உமக்கு அருளப்பட்டு இருக்கிறது. எழும் எனது நாயகரே ! ஆயத்தமாகும். இதோ புராக்கின் முதுகிலேறுமென்றார்.

அதுக்கேட்டு நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஜிப்ரீலே ! நீர் என்னிடம் ரஹ்மத் கருணையுடைய ஆயத்து திருஷ்டாந்தத்தைக் கொண்டோ, அல்லது வேதனையின் ஆயத்து திருஷ்டாந்தத்தை கொண்டோ வந்தீரெனக் கேட்டார்கள். அதற்கு ஜிப்ரீல் திட்டமாக அல்லாஹ்தஆலா உமக்கு ஸலாம் சொன்னான் அவனுக்கும் உமக்குமிடையில் வலுப்பமான இரகசியங்களிருப் பதற்காக அவனது சிறந்த சங்கையான சன்னிதானத்திற்கு உம்மை அழைத்துவரச் சொன்னான் என்றார்.

அப்பொழுது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் எனது சகோதரரே ! மாட்சிமைக்குரிய ஆண்டவன் என்னை அழைக்கிறான் என்னைக் கொண்டு என்னச் செய்வான் என்றார்கள். அதற்கு ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அல்லாஹ் தஆலா உங்கள் முந்தியோர் பிந்தியோர் பாவங்களைப் பொறுப்பதற்காக வென்றார்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இது எனக்காக ஆனால் எனது உம்மத் சமூகத்திற்கென்னவிருக்கிறதென்றார்கள். ஜிப்ரில் அலைஹிஸ்ஸலாம் உமது நாயன் கியாமத் உலக முடிவு நாளில் உமக்கு “ஷபாஅத்துல் குபுரா” வென்னும் பெரிய மன்றாட்டத்தை தருவான். முக்கியமாக உமது சமூகத்தினரில் விசேஷ மன்றாட்டத்தை நீர் பொருந்தும் படி தந்தருள்வா வென்றார்கள். நாயகமவர்கள் ஒளுவு நியம சுத்தி செய்யும் வரை பொருத்திருமென்றார்கள். உடனே ஜிப்ரீல், மீக்காயிலென்னும் தெய்வத்துவ தலைவர்கள் ஜம்ஜம் கிணற்று தண்ணீர் அல்லது ஸல்ஸபீலென்னும் சுவர்க்கத்தின் ஆற்று தண்ணீரை அழகிய ஓர் கெண்டீ கொண்டு அதனுடன் பசிய வருண சுன்துஸீ பட்டும் வெண்மையான ஒளியினால் ஓர் தலைப்பாகையும் கொண்டு வந்தனர்.

அதன் பேரில் நான்கு வரிகளிருந்தன. முதல் வரியில் முஹம்மதுர் ரசூலுல்லாஹி அல்லாஹ்வின் திருத்தூதர். இரண்டாம் வரியில் முஹம்மதுன் நபியுல்லாஹ் அல்லாஹ்வின் தீர்க்கதரிசி மூன்றாம் வரியில் முஹம்மதுன் ஹபீபுல்லாஹ் அல்லாஹ்வின் நண்பர். நான்காம் வரியில் முஹம்மதுன் கலீலுல்லாஹ். அல்லாஹ்வின் தோழர் என்று எழுதப்பட்டிருந்தன. நாயகமவர்கள் ஒளுவை நிரப்பமாக்கி முடித்தவுடன் அவர்களிருவரும் நாயகமவர்களின் நெஞ்சைப் பிளந்து கல்பு மனதை வெளியிலெடுத்து அகத்தைச் சுத்தி

செய்து அதில் நின்றும் ஷைத்தானின் அம்சத்தைக் களைந்து ஹிருதயத்தில் ஹிக்மத் பூராயத்தையும் ஈமான் நம்பிக்கையையும் சொறிந்து மனதில் அறிவையும் யகீன் விசுவாசத்தையும் நிரப்பிவித்து அதைத் தைத்து இரு புயங்களுக்குமிடையில் "நுபுவ்வத்" நபித்துவத்தின் முத்திரையாகிய இலாஞ்சனை தரிபித்தார்கள். அதன் பரிபூரண அலங்காரங்களாகிய வர்ணிக்க எவரால் முடியாத அற்புதமாயும் அதன் ஒளியின் பிறப்பையை பார்ப்போர் பிரமிக்க தக்க ஜோதியுமாயிருந்தது.

நபி நாயகமவர்கட்கு ஜிப்ரீலின் வலக்கரத்தால் முத்திரை தரிப்பிக்கப்பட்டு நபிமார்களின் அறிவிற்குமெட்டாத அகமியங்களதிற் புதையலாக்கப் பட்டன. அந்த முத்திரையானது தங்கள் இரகசியப் பொருள்களை பாதுகாத்துக் கொண்டமையால் அதைப் பொலித்து. பிரசித்தப்படுதலறிதலாயிட்டது. இன்னும் அந்த முத்திரையானது இந்த சங்கையான கடைசி நபிக்கு சொந்தமான நான்காம் பிளப்பில் தரிப்பிக்கப்பட்டது. பின்பு ஜிப்ரீல் புராக்கை முற்படுத்தவே நபி நாயகம் அதன் மீது ஏற பிரயத்தமானப் போது புராக் விரண்டு பின்னடைவதைக் கண்ட ஜிப்ரீல் தமது கைக் கசையினால் அதை வற்புறுத்தி, புத்திவருத்தி, புராக்கே ! நீ இவரில் நின்றும் வெட்கிக்கவில்லையா? எவனுடைய தத்துவத்தில் என்னுடைய உயிரிருக்கிறதோ அந்த நாயன் பேரில் சத்தியமாக ! இவரினும் பெரிய மகான் உன் முதுகின் மீதேறுவதில்லை என்றார்கள்.

உடனே புராக்கானது இவரே மோட்சத்துக்குரிய நபியா? இவரே புகழ்பெற்ற லிவாவுல்ஹம்து கொடியுடையவரா? இவரே ஹவ்ழுல் கவ்தரென்னும் சுவன லோகத்தின் ஆற்றின் அதிபரா? இவரே மகாமுல் மஹ்மூதென்னும் துத்தியஸ்தானத்தில் மன்றாடும் தாயகரா? வென வினவியதற்கு ஜிப்ரீல் ஆமாம். இவர் தானென்றவுடன் புராக்கானது அடி பணிந்து, தாட்சி செய்து கிருபையுடைய நபியே ! தங்கள் உம்மத்து சமூகத்தினரை மன்றாடி கடைத்தேறும் இரட்சகரே ! என் முதுகிலேறு வீர்களாக. கியாமத் மறுமைநாளில் மன்றாட்டத்தின் போது என்னுடைய பங்கை மறவாதிருப்பீர்களாகவென வேண்டிக் கொண்டது. ஆண்டவனே ! அவர்கள் மீது ஸலவாத் சொல்வாயாக.

١ صَلُّوْا عَلٰى هٰـذَا النَّبِيِّ وَاٰلِـهٖ
هٰـذَا الرَّسُوْلُ حَوَى الْعُلَا بِكَمَالِهٖ
هٰذَا الَّذِىْ حُمِدَتْ جَمِيْعُ خِصَالِهٖ
فَبِحُبِّهٖ صَلُّوْا عَلَيْـهِ وَاٰلِــهٖ

٢ هٰذَا الْحَبِيْبُ الْمُصْطَفَى الْمُكَرَّمُ
هٰذَا الْخَلِيْلُ الْمُجْتَبَى الْمُعَظَّمُ
فَرْضٌ عَلَيْنَا حُبُّهٗ وَمُحَتَّمُ
فَبِحُبِّـهٖ صَلُّوْا عَلَيْـهِ وَاٰلِـــهٖ

٣ هٰذَا الصَّفِيُّ الْهَاشِمِيُّ الْمُطَّلِبِيُّ
هٰذَا النَّجِيُّ الْحَرَمِيُّ الْعَرَبِيُّ
هٰذَا الزَّكِيُّ الْاَبْطَحِيُّ الْيَـثْرِبِيُّ
فَبِحُبِّـهٖ صَلُّوْا عَلَيْـهِ وَاٰلِــهٖ

٤ هٰذَا الشَّرِيْفُ السَّيِّدُ الْمُفَضَّلُ
هٰذَا الظَّرِيْفُ الطَّيِّبُ الْمُبَجَّلُ
هٰذَا هُوَ الْمُدَّثِّرُ الْمُزَّمِّـلُ

فَبِحُبِّهٖ صَلُّوْا عَلَيْهِ وَاٰلِـهٖ

۵ هٰذَا الْمُنَزَّهُ عَنْ شَوَائِبِ شَيْنِهٖ
فِيْ ذَاتِهٖ وَصِفَاتِهٖ اَوْ حُسْنِهٖ
فَالْحُسْنُ مِنْهُ مُقَسَّمٌ فِيْ كَوْنِهٖ
فَبِحُبِّهٖ صَلُّوْا عَلَيْهِ وَاٰلِـهٖ

۶ هٰذَا الَّذِيْ خُلِقَتْ لَهُ الْاَفْلَاكُ وَالْ
اَمْلَاكُ وَالْاَشْيَا الْعَوَالِيْ وَالسُّفُلْ
فَالْكُلُّ اَجْزَا نُوْرِهٖ بَلْ وَهُوَ كُلْ
فَبِحُبِّهٖ صَلُّوْا عَلَيْهِ وَاٰلِـهٖ

۷ هٰذَا الَّذِيْ طَابَ الْوُجُوْدُ بِجُوْدِهٖ
وَتَبَاهَتِ الْبَطْحَا بِشَمْسِ وُجُوْدِهٖ
وَتَفَاخَرَتْ طِيْبَةُ بِسَعْدِ سُعُوْدِهٖ
فَبِحُبِّهٖ صَلُّوْا عَلَيْهِ وَاٰلِـهٖ

۸ هٰذَا بِهِ الْبَيْتُ الْعَتِيْقُ مُحَرَّمُ
وَبِهِ الْمُصَلّٰى وَالْمَقَامُ مُعَظَّمُ

وَبِظِلِّهٖ يُحْمَى الْحَطِيْمُ وَزَمْزَمُ
فَبِحُبِّهٖ صَلُّوْا عَلَيْهِ وَاٰلِهٖ
٩ هٰذَا الْمُحَمَّدُنِ الْوَحِيْدُ الْاَوْحَدُ
وَلَيْسَ يُدْرِكُ كُنْهَهٗ اَوْيُقْصَدُ
كَلَّا وَلَا مِثْلٌ لَّهٗ فَسَيُوْجَدُ
فَبِحُبِّهٖ صَلُّوْا عَلَيْهِ وَاٰلِهٖ
١٠ قَدْ اَنْزَلَ الْمَوْلَى الْقُرْاٰنَ بِخُلْقِهٖ
فَالْخَلْقُ اَحْرَى اَنْ يَّحِقَّ بِخَلْقِهٖ
فَكَفٰى بِهٖ فِيْ حَقِّهٖ اَوْصِدْقِهٖ
فَبِحُبِّهٖ صَلُّوْا عَلَيْهِ وَاٰلِهٖ
١١ كَمْ اٰيَةٍ فِيْ سُوْرَةِ الْاِسْرَا جَلَتْ
وَالنَّجْمِ اَسْرَارٌ لِّمَسْرَاهُ عَلَتْ
فَاِذَا تَلَوْتَ تَجِدُ مَعَانِيْهَا انْجَلَتْ
فَبِحُبِّهٖ صَلُّوْا عَلَيْهِ وَاٰلِهٖ
١٢ اَوْكَمْ لَهٗ فِي الْفَتْحِ وَالنَّصْرِ الْعَجِيْبْ

نَصْرٌ مِّنَ اللّٰهِ مَعَ الْفَتْحِ الْقَرِيْب
فَاقْرَأْهُمَا وَاشْكُرْ لِمَوْلَاكَ الْمُجِيْبْ
فَبِحُبِّهٖ صَلُّوْا عَلَيْهِ وَاٰلِهٖ
١٣ مَنْ مِّثْلُ اَحْمَدَ فِيْ جَلَالَةِ شَانِهٖ
اَوْ فِيْ عُلُوِّ مَقَامِهٖ وَمَكَانِهٖ
وَاللّٰهُ اَثْنَاهُ بِنَصِّ قُرَانِهٖ
فَبِحُبِّهٖ صَلُّوْا عَلَيْهِ وَاٰلِهٖ
١٤ وَلَخَصَّهٗ وَحَيَّا بِحَضْرَةِ قُدْسِهٖ
وَالرَّأْيِ فِي الدُّنْيَا بِعَيْنَيْ رَأْسِهٖ
وَالْقُرْبِ وَالزُّلْفٰى بِمَقْعَدِ اُنْسِهٖ
فَبِحُبِّهٖ صَلُّوْا عَلَيْهِ وَاٰلِهٖ
١٥ وَعَلَيْكَ صَلَّى اللّٰهُ يَا غَوْثِيْ كَمَا
حَيَّاكَ اِذْ حَيَّيْتَهٗ فَوْقَ السَّمَا
وَكَذَا الرِّضٰى وَالْعَفْوُ عَنَّا دَائِمًا
فَبِحُبِّهٖ صَلُّوْا عَلَيْهِ وَاٰلِهٖ

6. ஸைத்தின் உரை

1) இந்த நபி மீதும், அவர் சமூகத்தினர் மீதும் ஸலவாத்தோதுங்கள். இந்த ரசூலானவர் சர்வ மேன்மைகளையும் சம்பூரணமாய் பொதிந்தவர். இவர் குணாதிசயங்களில் புகழ் பெற்றவர்.

(2) இவரை உகந்து அவர் மீதும், அவர் சமூகத்தினர் மீதும் ஸலவாத்தோதுங்கள். இவரே தெளிவாக்கப் பெற்ற சங்கைக்குரிய நண்பர். இவரே தெரியப்பட்ட மகிமைக்குரிய தோழர். இவரை உவப்பது நம்மீது விதிக்கப்பட்ட வேதக் கடமையாகும். இவரை உகந்து.

(3) இவரே ஹாஷிமி, முத்தலிபீ வமிசத்தில் தெளிந்தவர். இவரே கஃபத்துல்லாஹ்விலும் அரபிகளிலும் இரட்சகர். இவரே திருமக்கா, மதீனாவில் பரிசுத்தமானவர். இவரை உகந்து

(4) இவரை சிறப்பு வாய்ந்த வரிசைக்குரிய நாயகர் இவரே நன்மதிப்பிற்குரிய மணமான வள்ளலானவர். இவரே திருக்குர்ஆனில் முத்தத்திர், முஜ்ஜமிலென்னும் திருநாமம் தரிக்கப் பெற்றவர் இவரை உகந்து

5) இவரே நுட்பத்திலோ, வர்ணிப்பிலோ, அழகிலோ, மாசற்ற பரிசுத்தவான் அழகானது. இவரிலிருந்தே அகில உலகத்திலும் பங்கு வழங்கப்பட்டது. இவரை உகந்து

(6) இவருக்காகவே ஏழுவான்களும், அமரர்களும் மேல், கீழ் லோகங்களும் சிருஷ்டிக்கப்பட்டன. அவையெல்லாம் இவரது ஒளியின் அம்சங்களும், இவரே முழு ஒளியுமானவர். இவரை உகந்து

(7) இவரது கொடையினாலே உலகம் மணம் பெற்றது. இவரது உள்ளமை சூரியனாலே திருமக்க மாநகரம் பெருமை பேசிற்று. இவரது நற்சகுண நட்சத்திரத்தினால் மதீனமாநகரம் வீர் பெற்றது. இவரை உகந்து

(8) இவர் பொருட்டால், கஃபத்துல்லா சங்கைப் பெற்றது. முஸல்லாவும், மகாமும் வண்ணமையுற்றன. இவரது நிழலிலே ஹதீமும், ஜம்ஜமும் பாதுகாக்கப் பெற்றவை. இவரை உகந்து

(9) இவரே தனி ஒருமைக்குரிய முஹம்மதாயவர். இவரது நுட்பத்தை எவராலும் பெறவோ, கருதவோ முடியாது. நிஜம் தான்

இவருக்கொப்பானவர் உண்டானதுமில்லை. இனி உண்டாவதுமில்லை. இவரை உகந்து

(10) ஹக்கு தஆலா இவரது குண விசேஷத்திற்கிணங்கவே திருக்குர்ஆனை இறக்கினான். இவரது குணமோ, தமது சிருஷ்டி வடிவத்தினாலே மெய்பிக்க தக்கதாலும், இவரது உண்மையிலும் சத்தியத்திலும், தமது உருவத்தோற்றம் தானே முற்றிலும் போதிய அத்தாட்சியாகும். இவரை உகந்து

(11) "இஸ்ராவெனும் மிஃராஜின் சூரத்திலும், வன்னஜ்மி சூரத்திலும், எம்மாத்திரமோ மிஃராஜின் உயரிய நுட்பங்களும், அரிய பெரிய திருஷ்டாந்தங்களும் வெளியாயிருக்கின்றன. அவைகளை நீ ஓதிப்பார்ப்பின் அதன் உட்பொருட்களை இஸ்பஷ்டமாய் காண்பாய் இவரை உகந்து.

(12) இன்னும் பத்ஹ் சூரத்திலும், நஸ்ரு சூரத்திலும், எம்மாத்திரமோ அற்புதங்களாகிய உதவிகளும், வெற்றிமாராயங் களும் அல்லாஹ்தஆலா வினால் அவர்கட்குண்டாயிருக்கின்றன. இவ்விரண்டையும் ஓதி உனது ஆண்டவனுக்கு நன்றி செலுத்திக் கொள். இவரை உகந்து.

(13) அஹ்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை போல் மகத்துவ வன்மையிலும் உயரிய நிலையிலும், சிறந்த உதவியிலும் வேறொருவருமில்லை. அல்லாஹ் தஆலா தனது திவ்விய குர்ஆன் ஷரீபில் அவர்களை போற்றி புகழ்ந்திருக்கிறான். இவரை உகந்து.

(14) திட்டமாக ஆண்டவன் ஹக்கு சுப்ஹானஹு வதஆலா தனது பரிசுத்த சன்னிதானத்தில் வஹீ எனும் பரம இரகசியம் கொண்டு சம்பாஷனைப் புரிவதாலும், துன்யாவிலே தங்கள் முகத்தின் இரு விழிகளால் திருக்காட்சிப் புரிவதாலும், இன்னும் தனது ஐக்கியம், மருவுதல், முடுகுதல் எனும் சமீப சமூக நல்வரவேற்பதுக் கொண்டும் சிறப்பாக்கிவித்தான். இவரை உகந்து.

(15) எனது இரட்சகரே ! அல்லாஹ் தஆலாவுக்கு வானத்தில் தாங்கள் காணிக்கை வைத்த போது அவனுங்களுக்கு ஸலாம் கொண்டு காணிக்கை வைத்ததுப் போல் உங்கள் மீது ஸலவாத்து சொல்வானாக ! அவ்வாறே அவனது திருவுளப் பொருத்தமும், பாவமன்னிப்பும் எங்களுக்கு சதாக்காலமும் உண்டாவதாக ! இவரை உகந்து அவர் மீதும், அவர் சமூகத்தினர் மீதும் ஸலவாத்தோதுங்கள்.

فَلَمَّا رَكِبَ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ عَلَى الْبُرَاقِ تَشَبَّثَ
جِبْرِيْلُ بِرِكَابِهِ، وَاَخَذَ مِيْكَائِيْلُ بِزِمَامِهِ، وَاِسْرَافِيْلُ
يُسَوِّيْ اَطْرَافَ ثِيَابِهِ، وَعَلَا بِهِ الْبُرَاقُ، وَطَارَ عَلٰى
جِبَالِ مَكَّةَ بِالْاِشْتِيَاقِ، فَقَالَ جِبْرِيْلُ يَا مُحَمَّدُ اِنْزِلْ
وَصَلِّ رَكْعَتَيْنِ فَصَلّٰى، فَقَالَ هٰذِهٖ طَيْبَةُ فَسَتُهَاجِرُ
اِلَيْهَا اِنْ شَاءَ اللّٰهُ تَعَالٰى، ثُمَّ سَارَ فَقَالَ صَلِّ هُنَا
تَحِيَّةً لِلّٰهِ وَتَعْظِيْمًا، هٰذَا طُوْرُ سِيْنَا، حَيْثُ كَلَّمَ
اللّٰهُ مُوْسٰى تَكْلِيْمًا، ثُمَّ سَارَ فَقَالَ صَلِّ بِهٰذَا الْمَقَامِ،
هٰذَا بَيْتُ اللَّحْمِ، حَيْثُ وُلِدَ عِيْسٰى وَدَارُ يَحْيٰى
عَلَيْهِمَا السَّلَامُ، فَاِذْ ذَاكَ سَمِعَ نِدَاءً عَنْ يُمْنَاهُ،
وَنِدَاءً عَنْ يُسْرَاهُ، ثُمَّ اسْتَقْبَلَتْهُ امْرَاَةٌ بِكُلِّ
زِيْنَةٍ اِلَيْهِ، فَلَمْ يَعْرُجْ عَلَيْهِ، فَقَالَ جِبْرِيْلُ الْاَوَّلُ
دَاعِيْ الْيَهُوْدِ، لَوْ اَجَبْتَهٗ لَتَهَوَّدَتْ اُمَّتُكَ، وَالثَّانِيْ
دَاعِيْ النَّصَارٰى، لَوْ اَجَبْتَهٗ لَتَنَصَّرَتْ اُمَّتُكَ وَالْمَرْاَةُ
هِيَ الدُّنْيَا، لَوْ اَجَبْتَهَا لَاخْتَارَتْ اُمَّتُكَ الدُّنْيَا، ثُمَّ

رَأَى شَابًّا اَحْسَنَ فَسَلَّمَ عَلَيْهِ فَرَدَّهٗ وَقَبَّلَهٗ بَيْنَ عَيْنَيْهِ، فَقَالَ جِبْرِيْلُ اِبْشِرْ هٰذَا الدِّيْنُ فَاِنَّ اُمَّتَكَ يَعِيْشُوْنَ مُسْلِمِيْنَ وَيُمِيْتُوْنَ مُؤْمِنِيْنَ وَيَدْخُلُوْنَ الْجَنَّةَ اٰمِنِيْنَ ثُمَّ اُتِيَ بِثَلٰثَةِ اَقْدَاحٍ مِنْ مَّاءٍ وَّ خَمْرٍ وَّلَبَنٍ، فَاخْتَارَ مِنْهُنَّ اللَّبَنَ، فَقَالَ قَدْ اَصَبْتَ الْفِطْرَةَ وَالسُّنَنَ لَوْ شَرِبْتَ الْمَاءَ لَغَرِقَتْ اُمَّتُكَ، اَوِ الْخَمْرَ سَفِهَتْ اُمَّتُكَ، فَاِنَّهَا سَتُحَرَّمُ عَلٰى اُمَّتِكَ، فَشَرِبَ بَعْضَ اللَّبَنِ، فَقَالَ لَوْ شَرِبْتَ الْكُلَّ لَمَا كَانَ رِجُ مَّتِكَ فِي النَّارِ دَخَلَ فَقَالَ رُدَّهٗ عَلَيَّ، فَقَالَ هَيْهَاتَ جَرَى الْقَلَمُ، فَلَا رَادَّ لِمَا حَكَمَ، ثُمَّ رَاٰى قَوْمًا يَزْرَعُوْنَ فِيْ يَوْمٍ وَيَحْصُدُوْنَ، فَقِيْلَ هٰؤُلَاءِ الْمُجَاهِدُوْنَ، وَمَرَّ بِقَوْمٍ تُرْضَخُ رُءُوْسُهُمْ بِالْحِجَارَاتِ، فَقِيْلَ هٰؤُلَآءِ الَّذِيْنَ تَتَثَاقَلَتْ رُءُوْسُهُمْ عَنِ الصَّلٰوَاتِ، وَمَرَّ بِقَوْمٍ عَلٰى اَدْبَارِهِمْ وَاَقْبَالِهِمْ رِقَاعٌ يَسْرَحُوْنَ اِلَى الزَّقُّوْمِ كَالْبَهِيْمَاتِ

فَهٰؤُلَآءِ الَّذِيْنَ لَا يُؤَدُّوْنَ الزَّكٰوةَ وَلَا الصَّدَقَاتِ،
وَمَرَّ بِقَوْمٍ مِنَ الزُّنَاةِ بَيْنَ اَيْدِيْهِمْ مِنَ اللَّحْمِ
طَيِّبٌ وَخَبِيْثٌ، يَتْرُكُوْنَ الطَّيِّبَ وَيَأْكُلُوْنَ الْخَبِيْثَ،
وَمَرَّ عَلٰى زَحْمَةٍ عَظِيْمَةٍ بِالْفَضَاءِ، ذَبَحُوْا بَقَرَةً
فَقَسَّمُوْهَا اَرْبَعَةَ اَجْزَاءٍ، فَالْيَهُوْدُ اَخَذُوْا
قُرُوْنَهَا وَاَظْلَافَهَا، وَالنَّصَارٰى عُرُوْقَهَا وَاَعْصَابَهَا،
وَالْمَجُوْسُ رَوْثَهَا وَدِمَائَهَا، وَالْمُسْلِمُوْنَ لَحْمَهَا وَ
اَلْبَانَهَا وَمَرَّ عَلٰى قَوْمٍ تُقْرَضُ شِفَاهُهُمْ وَاَلْسِنَتُهُمْ
بِمَقَارِيْضَ مِنْ حَدِيْدٍ، فَهُمُ الْخُطَبَاءُ لَا يَعْمَلُوْنَ
بِقَوْلِهِمُ السَّدِيْدِ، ثُمَّ رَاٰى امْرَأَةً مُعَلَّقَةً بِثَدْيِهَا
وَالنَّارُ تُوْقَدُ مِنْ تَحْتِهَا، وَهِيَ تَأْكُلُ مِنْ لَحْمِ جَسَدِهَا
فَهِيَ الَّتِيْ تَتَزَيَّنُ لِغَيْرِ زَوْجِهَا، وَمَشٰى عَلٰى وَادٍ
فَوَجَدَ صَوْتًا حَسَنًا وَرِيْحًا طَيِّبًا نَسَمُهَا، فَهِيَ رَائِحَةُ
الْجَنَّةِ وَنَغَمُهَا، تَقُوْلُ رَبِّ ائْتِنِيْ بِمَا وَعَدْتَنِيْ،
قَدْ كَثُرَ غُرَفِيْ وَحُلَلِيْ، وَجَوَاهِرِيْ، وَصَفَا شَرَابِيْ،

وَطَعَامِیْ، وَخَمْرِیْ، وَعَسَلِیْ، وَلَبَنِیْ، وَفَوَاکِھِیْ فَقِیْلَ لَکَ الْمُسْلِمِیْنَ وَالْمُؤْمِنِیْنَ، وَمَنْ لَّا یُشْرِکُ بِاللّٰہِ مِنَ الْعِبَادِ الصَّالِحِیْنَ، ثُمَّ سَمِعَ عَلٰی وَادٍ صَیْحَۃً مُّنْکَرَۃً، مَعَ رَائِحَۃٍ مُّسْتَقْذَرَۃٍ، فَھِیَ جَھَنَّمُ تَقُوْلُ رَبِّ اٰتِنِیْ بِمَا وَعَدْتَّنِیْ، قَدْ کَثُرَ سَلَاسِلِیْ، وَاَغْلَالِیْ وَحَیَّاتِیْ، وَعَقَارِبِیْ، وَاشْتَدَّ نَارِیْ، وَلَھَبِیْ، وَحَرِّیْ وَبَلَائِیْ، وَمَصَائِبِیْ، فَقِیْلَ لَکِ کُلُّ کَافِرٍ وَّ کَافِرَۃٍ مِّنَ الْمُشْرِکِیْنَ وَاَھْلِ الْکِتَابِ، وَمَنْ لَّا یُؤْمِنُ بِیَوْمِ الْحِسَابِ، ثُمَّ وَجَدَ قَوْمًا یَّخْمِشُوْنَ بِاَظْفَارٍ مِّنْ حَدِیْدٍ وُجُوْھَھُمْ وَصُدُوْرَھُمْ، فَھُمُ الْمُغْتَابُوْنَ یُمَزِّقُوْنَ اَعْرَاضَ النَّاسِ وَیَھْتِکُوْنَ سُتُوْرَھُمْ ثُمَّ رَأَی الدَّجَّالَ عَلٰی فِتْنَتِہٖ وَاِغْوَائِہٖ، اَعَاذَنَا اللّٰہُ مِنْ شَرِّہٖ وَبَلَائِہٖ ٥ اَللّٰھُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِکْ عَلَیْہِ ٥

7. ஹிகாயத்தின் வரலாறு

அப்பால் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் புராக்கின் மீது சவாரியானார்கள், ஜிப்ரீல் வாகன காலணியின் மீது தரிபட்டார். மீக்காயில் அதன் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டார். இஸ்ராபீல் அதன் அங்கவஸ்திரத்தின் முந்தானைகளை செவ்வைப் படுத்துகிறவராயிருந்தார். புராக்கானது நாயகமவர்களை சுமந்துக் கொண்டு ஆகாயமார்க்கமாய் உயர்ந்து அதிவேகமாய் கன ஆசையுடன் மக்கமா நகரின் மலைகளுக்கு மேலால் பறந்துச் சென்றது. ஜிப்ரீல் முஹம்மதே ! இவ்விடத்திலிறங்கி இரண்டு ரக்அத் தொழும். இதுதான் மதீனா முனவ்வராவெனும் பட்டணமாகும் இதனளவில்தான் அல்லாஹ் தஆலா நாடினால் நீர் ஹிஜ்ரத் திரு யாத்திரை செல்வீரென்று சொல்லவே நாயகம் அவர்கள் தொழுதுக் கொண்டார்கள்.

பின்பு சிறு தூரம் சென்றதும் ஜிப்ரீல் முஹம்மதே ! இவ்விடத்தில் அல்லாஹ் தஆலாவை மகிமைப்படுத்த வேண்டி இரண்டு ரக்அத் தொழும். இதுதான் அல்லாஹ்தஆலா நபி மூஸா அலைஹிஸ்ஸலாமோடு திருவசனம் புரிந்த தலமாகிய தூர்ஸீன் மலையென்றார்.

பின்னும் கொஞ்சம் சென்றதும் இவ்விடத்திலும் தொழும் இதுதான் நபி ஈஸா அலைஹிஸ்ஸலாமை பிரசவிக்கப்பட்ட பைத்துல் லஹ்மென்ற பட்டணமாகும். நபி யஹ்யா அலைஹிஸ்ஸலாமுடைய வீடும், இதுதானென்றார். அச்சந்தர்ப்பத்தில் தங்களுக்கு வலப்புறத்தாலொரு விழிக்கும் சப்தமும், இடப்புறத்தாலொரு சப்தமும் கேட்டார்கள். இன்னுமொரு சௌந்தரியவதியும் எதிர்பட்டாள். நாயகம் அவ்விடத்தில் தரிபடாது சென்று விட்டார்கள். ஜிப்ரீல் சொன்னார். முந்திய சப்தம் யஹூதியுடையது அதற்கு நீர் விடையளித்தால் உம்முடைய சமூகத்தினர் யூதர்களாயிடுவார்கள். பிந்திய சப்தம் நஸ்ரானி உடையது. அதற்கு நீர் விடையளித்தால் உம்முடைய சமூகத்தினர் கிறிஸ்தவர்களாயிடு வார்கள். அந்தப் பெண்ணானவள் துன்யாவெனும் உலகமாயிருக்கும். அதற்கு நீர் முகங்கொடுத்தால் உமது சமூகத்தினர் பூவுலக மாயையில் சிக்கிக் கொள்வாரென்றார்கள்.

அப்பால் நல்ல முகவிலட்சணத்துடைய ஒரு வாலிபரைக் கண்டார்கள். அவர் நாயகமவர்கட்கு ஸலாம் சொன்னார். நாயகம் பிரதிச் சொன்னவுடன் தங்களின் இரு கண்களுக்கிடையில் முத்தமிட்டார். ஜிப்ரீல் முஹம்மதே ! நன்மாராயம் பெற்றீர் இதுதான் சன்மார்க்கம் இஸ்லாம். உமது சமூகத்தினர் முஸ்லிம்களாய் ஜீவிப்பார்கள். முஃமின்களாய் மரணிப்பார்கள். அச்சமற்றவர்களாய் சுவர்க்கத்தில் புகுவார்களென்றார்.

அதன் பின் மூன்று பாத்திரங்களில் தண்ணீரும், கள்ளும், பாலும் கொண்டு வரப்பட்டன. நாயகமவர்கள் பாலை மட்டில் எடுத்துக் கொண்டார்கள். ஜிப்ரீல் நீங்கள் சன்மார்க்கத்தைக் கைக் கொண்டீர். தண்ணீரைப் பருகினால் உமது சமூகத்தினர் பாவத்தில் அழிந்து போவார்கள். கல்லைக் குடிப்பின் அவர்கள் மதியற்றமூடர்களா யிடுவார்கள். நிச்சயமாக அதை உமது சமூகத்தினர் மீது ஹராம் விலக்கப்பட்டு போவுமென்றார். நாயகமவர்கள் பாலில் சொர்ப்பமே குடித்திருந்தமையால் ஜிப்ரீல் நீர் பால் முழுவதையும் குடித்து மீதி வைய்யாதிருப்பின் உமது சமூகத்தினரில் எவரேனும் நரகத்தில் பிரவேசிப்பதில்லை எனச் சொன்னவுடன் நாயகமவர்கள் அந்த மீதிப் பாலை திரும்பிக் கேட்ட போது ஜிப்ரீல் அது வெகுதூரம் ஊழ், விதியின் படி கலம் எழுதுகோல் நடந்தேறிவிட்டது. அவனுடைய கற்பனை மாற்றப்படுவதில்லை அவனுடைய தீர்ப்பை மறுப்பான் யாருமில்லை என்று சொல்லிவிட்டார்.

பின்பு சில ஜனங்களைக் கண்டார்கள். அவர்கள் ஒரே நாளில் பயிர் விதைத்து கொய்தெடுக்கின்றனர். அவர்கள் அல்லாஹ்வுடைய பாதையில் பீஸபீல் மதப்போர் நடத்தியவர்களென சொல்லப்பட்டது. இன்னும் சில ஜனங்களிடம் சென்றார்கள். அவர்கள் தங்கள் தலைகளை கற்பாறைகளால் தாக்கியுடைத்துக் கொள்கின்றனர். அவர்கள் தொழாதிருந்தோர்களெனப்பட்டது. இன்னும் சிலபேர் தங்கள் முற்புறம் பிற்புறங்களில் அண்டைகள் சேர்க்கப்பட்டு ஜக்கூமென்னும் நரகத்தின் கொடிய நஞ்சையுடைய களிமரங்களில் துஷ்ட மிருகங்களை போல் மேய்ந்திருக்கிறார்கள். அவர்கள் ஸதக்கா, ஜகாத்து தான தருமம் செய்யாத கஞ்சர்களாகும்.

இன்னும் சிலர் ஜினா விபச்சாரம் செய்யும் பேர்வழிகளை அடுத்தார்கள். அவர்கள் பக்கத்தில் நல்ல இறைச்சிகளும், கெட்ட இறைச்சிகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் நல்லதை விடுத்து, கெட்டதைப் புசிக்கின்றனர்.

இன்னுமொரு வெட்ட வெளியில் ஒரு ஜனக்கும்பலை நெருங்கினார்கள். அவர்கள் ஒரு மாட்டை அறுத்து நாலாக பங்கிட்டு யஹுதிகள் அதன் கொம்பு, குளம்புகளையும், நஸாராக்கள் நரம்பு சவ்வுகளையும், மஜுஸிகள் இரத்தம் மலங்களையும் முஸ்லிமானவர்கள் அதன் இறைச்சி, பால்களையும் எடுக்கின்றனர். இன்னும் சிலர் தங்கள் உதடுகள், நாவுகளை இரும்பு, கத்திரிக்கோல்களால் தரிக்கின்றனர். அவர்கள் தாங்கள் நல் அமல் செய்யாமல் மற்றவர்களுக்கு உபதேசிக்கும் கதீபு பிரசங்கிகளாம்.

பின்போர் பெண்ணானவள் தன் மார்பைக் கொழுகப்பட்டவளாய் அவளுக்கு கீழால் நெருப்பெறிக்கப்பட்டு தன் உடலின் இறைச்சியை தானேதின்னும் படிக் கண்டார்கள். அவள் தனது கணவனல்லாதவனுக்கு மினுக்கி சிங்காரித்திருந்தவளாம். இன்னுமொரு ஒடையில் இனிய ஒரு குரலினோசையும், மணமான வாடையும், பொருந்திய குளிர்ந்த காற்றையும் அவை சுவர்க்கத்தின் வாடையும், இராகமுமாயிருக்கும் சுவர்க்கமானது எனது ஆண்டவனே ! நீ எனக்கு செய்த நல்வாக்கைத் தந்தருள். எனக்குரிய மணமாளிகைகளும், ஆடையாபரணாதிகளும், நவரத்தினாதி முதலிய சகல செளபாக்கியங்களும் அதி விமர்ஷையாயிருக்கின்றன. எனது குடிப்பு, ஊன்கள், தீன், பால் முதலிய மதுப்பானங்கள், கனிவர்க்கங்களும் வெகு நேர்த்தியாய் இருக்கின்றனவென்று சொன்ன போது முஸ்லிமானவர்கள் முஃமினானவர்கள், சாலிஹான நல்லடியார் முதலிய, அல்லாஹ் தஆலாவுக்கு இணை வைய்யாதவர்களெல்லோரும் உனக்குண்டாயிருக்கிறார்களெனச் சொல்லப் பட்டது.

இன்னுமொரு ஒடையில் வெறுக்கத்தக்க துர்நாற்றத்தையும், அறுவறுக்கப்பட்ட ஊளை சப்தத்தையும் கேட்டார்கள். அவை ஜஹன்னமெனும் நரகத்தின் அவலட்சணமாகும். நரகமானது எனது

நாயனே ! நீ எனக்கு வார்த்தைப்பாடு செய்ததை தந்தருள். என்னுடைய கொடிய நெருப்பு, சங்கிலிகள் முதலிய அரிகண்டங்களும், கடின நஞ்சையுடைய பாம்பு, தேள் நட்டுவாக் கள்ளிகளும் அதிகரித்திருக்கின்றன. நெருப்பும், ஜுவாலையும் சூடும், பலாமுஸிபத்து, கெட்ட சோதனைகளும் கனகுரூரமாயிருக்கின்றன எனச் சொல்லவே எல்லா காபிர், முஷ்ரிக், யஹூதி, நஸாரா, மஜூஸ் முதலிய அல்லாஹ் தஆலாவுக்கு இணை வைத்தவர்களும், கேள்விக் கணக்கு நாளைக் கொண்டு நம்பிக்கைக் கொள்ளாதவர்களுமான ஆண், பெண், யாவரும் உனக்குண்டெனச் சொல்லப்பட்டது. பின்பு சில ஜனங்கள் இரும்பினாலாகிய தங்கள் நகங்களால் முகங்களையும் நெஞ்சுகளையும் பரண்டுகிறார்கள். அவர்கள் புறம், பேசி மனிதர்களின் மானம், குறைகளை பங்கப்படுத்தி, கீறி கிழிப்பவர்களாம் பின்பு தஜ்ஜாலை அவனுடைய வழிக்கேட்டிலும், அழிச்சாட்டியத்திலும் கெட்ட துஷ்ட நிஷ்டோரங்கள் பேரிலும் கண்டார்கள். அல்லாஹ்தஆலா, அவனுடைய பித்னா, பஸாது தீய, மோச, நாசங்களை விட்டும் நம்மை காத்தருள்வானாக ! ஆமீன்.

۱ اَلَا نَحْمَدُ اللّٰہَ مَوْلَی الْجَلِیْلُ عَلٰی جُوْدِ اِیْجَادِنَا بِالْجَمِیْل
عَلٰی حُسْنِ اِحْسَانِ خَیْرٍ جَزِیْلٍ خُصُوْصًا بِاِرْسَالِ خَیْرِ الرَّسُوْل

۲ نَبِیٌّ کَرِیْمٌ حَلِیْفُ الْوَفَا، شَرِیْفٌ ظَرِیْفٌ نَظِیْفُ الصَّفَا
رَءُوْفٌ رَحِیْمٌ بِنَا مُسْعِفًا کَفَانَا شَفِیْعًا بِخَیْرِ الرَّسُوْل

۳ حَبِیْبٌ وَّمَحْبُوْبُ مَنْ قَدْ عَلَا، حَسِیْبٌ نَسِیْبٌ نَجِیْبُ الْعُلٰی
صَبِیْحُ الْمُحَیَّا مَلِیْحُ الْحُلٰی، فَیَا حُسْنَ اَلْطَافِ خَیْرِ الرَّسُوْل

۴ سِرَاجٌ مُّنِیْرٌ سَمِیُّ السَّمَا، حَمِیْدُ السَّجَایَا مَجِیْدٌ سَمَا
سَمَاءً سَمَاءً لِّمَنْ قَدْ سَمَا، فَنِعْمَ الْمُسَمّٰی بِخَیْرِ الرَّسُوْل

۵ هُوَ الْمُصْطَفَی الْمُرْتَضَی الْمُجْتَبٰی هُوَ الْمُقْتَفَی الْمُنْتَقٰی مَطْلَبَا
هُوَ الْمُقْتَدٰی مَنْ هَدٰی مَذْهَبًا فَیَا حَبَّذَا دِیْنُ خَیْرِ الرَّسُوْل

۶ هُوَ الرَّحْمَةُ الَّتِیْ لَنَا اُرْسِلَتْ مِنَ اللّٰہِ فِیْ اٰیَةٍ اُنْزِلَتْ
وَذَا نِعْمَةُ اللّٰہِ فِیْنَا جَلَتْ فَشُکْرًا لِّاِنْعَامِ خَیْرِ الرَّسُوْل

۷ فَکَمْ مُّعْجِزَاتٍ لَّهٗ قَدْ نَمَتْ، وَعَمَّتْ وَعَنْ حَصْرِهَا قَدْ سَمَتْ
وَکَمْ مِّنْ مَّوَاتٍ لَّهٗ کَلَّمَتْ وَحَیَّتْ بِدَعْوَاتِ خَیْرِ الرَّسُوْل

۸ کَمَا انْشَقَّ بَدْرٌ وَّفَیْضُ النَّمِیْرِ وَاِشْبَاعُ جَیْشٍ بِصَاعِ الشَّعِیْرِ

كَذَا سَاجِدًا قَدْ اَتَاهُ الْبَعِيْرُ كَظَبْيٍ شَكٰى عِنْدَ خَيْرِ الرَّسُوْلْ

9 اَمَا ظَلَّلَ الْغَيْمُ مِنْ اَجْلِهٖ وَخَرَّتْ لَهُ النُّصْبُ فِيْ رِجْلِهٖ
وَذَلَّتْ اَعَادِيْهِ مِنْ رَمْلِهٖ رَمَاهُمْ بِهٖ كَفُّ خَيْرِ الرَّسُوْلْ

10 اَلَيْسَ الْحَصٰى سَبَّحَتْ قُرْبَةً بِيُمْنَاهُ قَدْ اَفْصَحَتْ عُرْبَةً
اَمِ الْوَحْشُ شَهِدَتْ لَهٗ حِسْبَةً وَحَيَّتْ سُجُوْدًا لِخَيْرِ الرَّسُوْلْ

11 اَلَمْ يُبْرِ سُمًّا بِتِرْيَاقِهٖ اَمَا طَبَّ سُقْمًا بِاَرْيَاقِهٖ
وَقَدْ صُبَّ غَيْثٌ بِاَفَاقِهٖ لِجَدْبٍ بِبَرَكَاتِ خَيْرِ الرَّسُوْلْ

12 وَكَمْ لِاسْمِهٖ غَاثَةٌ فِي الْخُطُوْبِ بِهٖ يُسْتَجَابُ الْمُنَاجِي الْغَرِيْب
وَمِنْ وَجْهِهٖ قَدْ كُشِفْنَا الْكُرُوْبُ وَنُسْقٰى بِفَيْضَاتِ خَيْرِ الرَّسُوْلْ

13 فَهَا اِنَّنِيْ وَاقِفٌ عِنْدَ بَابٍ فَمَا جَاءَ مَنْ جَاءَهُ ثُمَّ خَابْ
وَلَوْ كُنْتُ كَلْبًا بِذَاكَ الْجَنَابِ سَاَحْظٰى بِمَدْحِيْ لِخَيْرِ الرَّسُوْلْ

14 وَاِنِّيْ غُلَامٌ ذَمِيْمٌ ذَلِيْلٌ وَلَا خَيْرَ عِنْدِيْ وَلَوْ كَالْفَتِيْلْ
وَلٰكِنَّ لِيْ فِيْهِ ظَنٌّ جَمِيْلٌ لِنَيْلِيْ شَفَاعَةَ خَيْرِ الرَّسُوْلْ

15 وَصَلّٰى سَلَامٌ وَحَيًّا سَلَامٌ عَلٰى خَيْرِ مِفْتَاحِ دَارِ السَّلَامْ
عَلٰى نُوْرِ مِصْبَاحِ ذَاتِ الظَّلَامِ وَمَنْ عِنْدَ حَضْرَتِ خَيْرِ الرَّسُوْلْ

8. ஷைத்தின் உரை

1. மாட்சிமைக்குரிய நாயன் அல்லாஹ்தஆலாவைப் புகழ்வோமாக. அவனது சிருஷ்டிக் கொடையினால் நம்மை அழகாக படைத்ததன் பேரிலும், நமக்கு மிகுதமான நன்கொடை அருளிய அழகின் பேரிலும் சிறப்பாக ஹைரான ரசூல் நாயகத்தை நம்மில் அனுப்பியதற்காகவும் அவனைத் துதிப்போம்.

2. அவர்கள் சங்கை வாய்ந்த நபி, சத்தியவாக்கினர். சிறப்பானவர். வள்ளலானவர், மகாபரிசுத்தவான் தயாள கிருபாகரர், தஞ்சமானவர் நமக்கு சிபாரிசாக ஹைரான ரசூல் நாயகமே போதியவர்.

3. மேலான ஆண்டவனுக்கு நேசர், சிநேகிதர், மிக்க மதிப்பினர். மேல் குலத்தினர், உயர்வமிசத்தினர் திருமுக வடிவினர் ஆபரண அழகினர். ஹைரான ரசூலின் வர்ணிப்புக்களை என்னென்று நாம் கூறி புகழ்வோம்.

4. ஒளிரும் தீபமானவர். திருநாமம் மேலானவர் இயற்கைப் புகழுடையார். தலைமைத் தனமுடையார். ஒவ்வொரு வானிலுமேறி மேலான நாயனின் திருச்சமூகம் சென்றவர். ஹைரான ரசூலென்னும் திருநாமம் தரித்த நாயகமே நல்லவர்.

5. அவரே தெளிவாக்கப் பெற்றவர். பொருந்தப் பெற்றவர் , தெரியப் பெற்றவர், தொடரத் தக்கவர். தேடர்கறிய தூயவர். பின்பற்றத்தக்கவர். சன்மார்க்க முன்னிலையானவர் ஹைரான ரசூலின் மார்க்கமே நன்மார்க்கம்.

6) அல்லாஹ்வின் புறத்தால் திருக்குர்ஆன் ஷரீபில் நமக்காக அனுப்பப் பெற்ற ரஹ்மத்தானவர். நம்மில் வெளியான அல்லாஹ் தஆலாவின் நிஃமத்தானவர். ஹைரான ரசூலின் நிஃமத்துக்கு நற்துதிக் கூறுவோமாக !

7) அவர்கட்குரிய அதியற்புதங்கள் எம்மாத்திரமோ வளர்ந்தோங்கி, மட்டுக்கு மேலிட்டுவிட்டன. எத்தனையோ மைய்யித்துக்கள் ஹைரான ரசூலின் துஆவினால் உயிர்த்தெழுந்து தங்களோடு பேசியிருக்கின்றன.

8) சந்திரன் பிளந்தது போன்றும், தண்ணீர் ஒலித்ததுப் போன்றும் பெரும் சேனையை ஒரு நாளிக்கோதுமையினால் பசித்தீர்த்ததுப்

போன்றும் அவ்வாறே ஹைரான ரசூல் நாயகத்திடம் ஒட்டகை சுஜூது செய்தது. முயல் முறையிட்டுக் கொண்டது.

9) அவர்கட்கு, மேகம் நிழலிடவில்லையா? அவர்கள் பாதையில் விக்கிரகம் அடித்து துவிழவில்லையா? ஹைரான ரசூலின் திருக்கரத்தால் எறியப்பட்ட மணலினால் தங்கள் பகைவர் வீழ்ந்து மடியவில்லையா?

10) கல்லானது தங்கள் வலக்கரத்தில் தஸ்பீஹ் செய்து நாகரீகத்துடன் வணக்கமாய் பேசவில்லையா? காட்டு விலங்கினங்கள் நியாயமாய் சாட்சியம் கூறி ஹைரான ரசூலுக்கு ஸுஜூது செய்து ஸலாம் சொல்லவில்லையா?

11) தங்கள் உமிழ்நீரால் நோய்களை சுகப்படுத்தவில்லையா? தங்கள் துஆவென்னும் செந்தூரத்தால் நஞ்சை நீக்கவில்லையா?

இன்னும் ஹைரான ரசூலின் பரக்கத்தால் தங்கள் தேசத்தில் பஞ்சம் நீங்கும் பொருட்டு மழை வருசிக்கப் பட்டது.

12) இன்னும் தங்கள் திருநாமத்திற்கு எம்மாத்திரமோ சங்கடங்களில் இரட்சிப்புண்டாயிற்று. அந்நாமத்தினால் ஏழை, இறப்போருக்கு நல்லுதவி அளிக்கப்பட்டது. தங்கள் திருமுகத்தினால் நம் துன்பங்கள் ஹைரான ரசூலின் பரக்கத்தினால் நீக்கப்பட்டு மழைப் புகட்டப்படுகிறோம்.

14) இதோ திட்டமாக நான் அந்நாயகத்தின் வாயிலில் காத்திருக்கும் அடியேன். அந்த வாயலில் வரத்தக்க எவனும் வந்து வீண் போவதில்லை. அந்த சன்னதியில் நான் ஒரு நாயாயிருப்பினும் ஹைரான ரசூலைப் புகழ்வதால் நற்பேர் அளிக்கப்படுவேன்.

15) திட்டமாக நானோ கேவலம் பழிக்கப்பட்ட ஓர் பயல் ஆர்ப்பளவேனும்? என்னிடம் ஹைருண்டாயிருக்கவில்லை. எனினும் ஹைரான ரசூலின் மன்றாட்டத்தை நான் பெறுவதில் அழகான நம்பிக்கை எனக்குண்டு.

16) இரட்சகனாகிய ஆண்டவன் இரட்சிப்புடைய சுவனப்பதியின் திறவுகோலும், இருளையகளும் பந்தத்தின் ஜோதியொலிகளுமாகிய ஹைரான ரசூல் நாயகர் மீதும் தங்களைச் சார்ந்த சமூகத்தினர் மீதும், நற்கருணை ஈடேற்றம் புரிந்தருள்வானாக.

ثُمَّ مَرَّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ حَتّٰى وَصَلَ بَيْتِ
الْمُقَدَّسِ فَاِذَاِنِ الْمَلَائِكَةُ الْعِظَامُ، يَتَلَقَّوْنَهُ
بِالْبِشَارَةِ وَالْاِكْرَامُ وَيَقُوْلُوْنَ السَّلَامُ عَلَيْكَ يَا
اَوَّلُ يَا اٰخِرُ، يَا خَاتِمُ يَا حَاشِرُ، اِنَّكَ اَوَّلُ مَنْ تَنْشَقُّ
عَنْهُ الْاَرْضُ، وَ اَوَّلُ شَافِعٍ وَّمُشَفَّعٍ لِّاُمَّتِكَ يَوْمَ
الْحِسَابِ وَالْعَرْضِ، ثُمَّ اَتٰى بَابَ الْمَسْجِدِ الْاَقْصٰى،
وَاَنْزَلَهُ جِبْرِيْلُ عَنِ الْبُرَاقِ، وَرَبَطَهُ بِحَلْقَةِ
الْاِصْطَبْلِ، اَلَّتِيْ تَرْبُطُ الْاَنْبِيَاءُ مِنْ قَبْلُ، ثُمَّ دَخَلَ
الْمَسْجِدَ فَوَجَدَ صُفَّةً قَدِ امْتَلَأَتْ مِنَ الْمَلَائِكَةِ
وَالْاَنْبِيَاءِ الْكِرَامُ وَفِيْهِمْ اِبْرَاهِيْمُ وَمُوْسٰى وَعِيْسٰى
عَلٰى نَبِيِّنَا وَعَلَيْهِمُ السَّلَامُ، فَقَامُوْا وَسَلَّمُوْا عَلَيْهِ
فَجَمَعَهُمْ جِبْرِيْلُ صُفُوْفًا بَيْنَ يَدَيْهِ فَصَلّٰى بِهِمْ فِيْ
مِحْرَابِهٖ فَقَالَ رَافِعًا يَدَيْهِ، اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ جَعَلَنِيْ
خَيْرَ الْاَنْبِيَآءِ مِنْ قَبْلِيْ، وَاُمَّتِيْ خَيْرَ الْاُمَمِ لِاَجْلِيْ،
وَاَرْسَلَنِيْ رَحْمَةً لِّلْعَالَمِيْنَ، وَشَفِيْعًا لِّلْمُذْنِبِيْنَ،

وَاَنْزَلَ عَلَیَّ الْقُرْاٰنْ وَاٰتَانِی الْفُرْقَانْ وَشَرَحَ صَدْرِیْ

وَوَضَعَ وِزْرِیْ وَرَفَعَ ذِکْرِیْ وَسَمَّانِیْ رَؤُفًا رَّحِیْمًا

فَقَالَ اِبْرَاهِیْمُ بِهٰذَا فَضَلَکُمْ مُحَمَّدٌ صَلَّی اللّٰهُ عَلَیْهِ

وَسَلَّمَ تَسْلِیْمًا ، ثُمَّ اَخَذَ جِبْرَئِیْلُ بِیَدِهٖ صَلَّی اللّٰهُ عَلَیْهِ

وَسَلَّمَ وَاِلٰی ظَاهِرِ بَابِ الرَّحْمَةِ تَقَدَّمْ فَاِذَا نِ الْمِعْرَاجُ

قَدْ نُصِبَ مِنْ صَخْرَةِ بَیْتِ الْمُقَدَّسِ اِلَی السَّمَاءِ

الدُّنْیَا ، جَاءَ بِهِ الْمَلَکُ اِسْمَاعِیْلُ مِنَ الْجَنَّةِ الْعُلْیَاءْ

اِحْدٰی شُعْبَتَیْهِ مِنْ یَاقُوْتَةٍ حَمْرَاءْ وَالْاُخْرٰی مِنْ

زُمُرُّدَةٍ خَضْرَاءْ ، مَنْضُوْدٌ مِّنْ دُرَّةٍ بَیْضَاءْ ،

اَحْسَنُ مَاخَلَقَهُ اللّٰهُ مِنَ الْاَشْیَاءْ ، لَهٗ خَمْسَةٌ

وَّخَمْسُوْنَ مِنَ الدَّرَجَاتِ ، کُلُّ مِرْقَاةٍ مَّسِیْرَةُ

اَرْبَعِیْنَ مِنْ سَنَوَاتْ وَعَلٰی کُلِّ دَرَجَةٍ زُمْرَةٌ مِّنَ

الْمَلَائِکَةِ یُهَلِّلُوْنَ اللّٰهَ وَیُسَبِّحُوْنَهٗ بِاَنْوَاعِ اللُّغَاتْ

فَلَمْ یَزَلْ صَلَّی اللّٰهُ عَلَیْهِ وَسَلَّمَ یَصْعَدُ کُلَّ دَرَجَةٍ

وَّهُمْ رَحَّبُوْهُ وَبَشَّرُوْهُ وَسَلَّمُوْا عَلَیْهِ وَشَرَّفُوْهُ ،

وَرَأَى اِسْمَاعِيلَ، وَرُقْيَائِيلَ، وَقَلَائِيلَ مَعَهُمْ اُلُوفٌ

مِنَ الْمَلَائِكَةِ لَهُمْ زَجَلٌ بِالتَّقْدِيْسِ وَالتَّهْلِيْلِ وَسَمِعَ

مَلَكًا مِّنْهُمْ يُنَادِيْ يَا غَفَّارَ الذُّنُوْبِ اِغْفِرْ لِاُمَّةِ مُحَمَّدٍ

الْحَبِيْبِ فَقَالَ رَبَّنَا لَا تُؤَاخِذْنَا اِنْ نَسِيْنَا اَوْ اَخْطَأْنَا،

فَقِيْلَ لِمَنْ هٰذَا الدُّعَاءُ، فَقَالَ لِاُمَّتِيَ الضُّعَفَاءِ وَرَأَى

وَادِيًا مَّمْلُوًّا بِدُخَانٍ فَقِيْلَ ذٰلِكَ سُوْءُ اَفْعَالِهِمْ، وَ

قَبِيْحُ اَعْمَالِهِمْ، فَقَالَ اِلٰهِيْ اعْفُ عَنْهُمْ وَلَا تُوْحِشْ

قَلْبِيْ مِنْهُمْ، فَقِيْلَ قَدْ وَهَبْنَاكَ ثُلُثَهُمْ، قَالَ لَا اَرْضٰى

قِيْلَ فَنِصْفَهُمْ قَالَ لَا اَرْضٰى بِدُوْنِ الْكُلِّ قِيْلَ قَدْ

مَنَنَّا عَلَيْكَ كُلَّ اُمَّتِكَ، وَغَفَرْنَا لَهُمْ بِحُرْمَتِكَ،

وَلَاَرْفَعَنَّ قَدْرَ مَنْ صَلّٰى عَلَيْكَ بِبَرَكَتِكَ ۝ اَللّٰهُمَّ

صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَيْهِ ۝

9. ஹிகாயத்தின் வரலாறு

அப்பால் நாயகமவர்கள் பைத்துல் முகத்தஸென்னும் பரிசுத்த பட்டணத்தளவில் போய் சேர்ந்தார்கள். அங்கு கன வலுப்பம் தங்கிய மலாயிகத்து "அமரர்கள்" மிக்க சங்கை மரியாதையும், சோபன வாழ்த்தும் கூறி, குதூகலத்துடன் நபிநாயகமவர்களை சந்தித்து, ஸலாம் சொல்லி "அன்பியா" தீர்க்க தரிசிகளுக்கு முதலும், முடிவுமானவரே "நுபுவ்வத்" எனும் நபித்துவத்தின் முத்திராங்கமானவரே கடைசி காலத்தின் நபியே ! தாங்களே கியாமத் உலக முடிவு நாளில் கப்ரு ஸமாதி பிளந்து வெளிக்கிளம்பு வோரில் முதன்மையானவர்கள். தாங்களே உம்மத் சமூகத்தினரை கேள்வி . கணக்கு நாளில் மன்றாடி இரட்சிப் போரில் முதன்மையானவரென்றார்கள்.

பின்பு பைத்துல் முகத்தஸென்னும் பள்ளியின் வாயலில் வந்ததும் ஜிப்ரீலெனும் தேவர்கோன், புராக் என்னும் வாகனத்திலிருந்து நாயகமவர்களை இறங்கச் செய்து முன்னுள்ள நபிமார்கள்,தங்கள் வாகனங்களைக் கட்டும் பந்தியினோர், வளையத்தில் புராக்கை கட்டி விட்டு, பள்ளிக்குட் பிரவேசித்தார்கள்.

அங்கு தீர்க்கதரிசிகளாலும், அமரர்களாலும் நிரப்பப் பெற்ற ஒரு "ஸுப்பா" தளவரிசையைக் கண்டார்கள். அதில் தீர்க்கதரிசிகளான இப்ராஹீம், மூஸா ஈஸா அலைஹிமிஸ்ஸலாம் அவர்களுமிருந் தார்கள். இவர்கள் எல்லோரும் நாயகமவர்களைக் கண்டதும் எழுந்து "அதபு ஹுர்மத்" ஒழுக்கம் மரியாதையுடன் ஸலாம் சொன்னார்கள். ஜிப்ரீலெனும் தேவர் கோன் அவர்கள் எல்லோரையும் சேகரித்து நாயகம் அவர்களின் முன்னிலையிற் பல வரிசைகளாய் அணிவகுத்து நிற்கச் செய்தார். நபி நாயகம் மிஹ்ராபிலே இமாமென்னும் முன்னிலையில் நின்று தொழுது முடிந்ததும், தங்களின் வரிசையான இரு கரங்களையும் உயர்த்தினவர்களாய் அல்லாஹ் தஆலாவைப் புகழ்ந்து அவன் என்னை முன்னுண்டான நபிமார்களில் நன்மையாக்கினான். என் பொருட்டு எனது சமூகத்தினரை மற்ற சமூகத்தினரில் வரிசையாக்கினான். என்னை உலகத்தாருக்கு கருணையாகவும், பாவிகளுக்காக மன்றாடுபவராகவும், அனுப்பி

வைத்தான். என் பேரில் குர்ஆன் வேதத்தை இறக்கினான். எனது ஹிருதயத்தை விஸ்தீரணமாக்கினான். எனது பாரத்தை இலேசாக்கினான். என்னை திக்ரு ஸ்தோத்திரம் செய்வதை உயர்த்தினான். இன்னும் எனக்கு கருணையுடைய நபியென்றும், கிருபையான ரசூல் என்றும் நாமம் சூட்டினான் என துஆ பிரார்த்தனைச் செய்தார்கள்.

உடனே இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் எழுந்து முஹம்மதானவர் இந்த ஒரு துஆவைக் கொண்டே உங்கள் எல்லோரினும் வரிசைப் பெற்றார் என்றார்கள். பின்பு ஜிப்ரீல், நபியவர்களின் திருக்கரத்தைப் பிடித்து கொண்டு கருணையுடைய வாயலின் வெளிப்புறத்திற்கு முன் வந்தார். அப்பொழுது மிஃராஜ் என்னும் ஏணிப் படியானது ''பைத்துல் முகத்தஸின்'' பாறைகளிலிருந்து முன் வானம் வரையில் நாட்டப்பட்டிருந்தது. அதை மேலான சுவர்க்கத்திலிருந்து இஸ்மாயீலெனும் மலக்கு கொணர்ந்தார். அதன் இரு பக்கவாட்டுகளில் ஒன்று சிவந்த மாணிக்கத்தாலும், மற்றொன்று பச்சை மரகதத்தாலு மிருந்தன. வெண்மை முத்துக்களாலிழைக்கப்பட்டு அல்லாஹ் தஆலா படைத்த வஸ்துக்களிலெல்லாம் மிக அழகியதாயிருந்தது. அதற்கு ஐம்பத்தைந்து படிகளிருந்தன. ஒவ்வொரு படியும் நாற்பது வருடத் தொலைத் தூரமாகும்.

ஒவ்வொரு படியிலும் மகத்தான மலாயிக்குகளினொரு கூட்டத்தினர் இருந்து பற்பல பாஷைகளாலும் அல்லாஹ் தஆலாவை தஸ்பீஹ், தஹ்லீல் பரிசுத்தப்படுத்தி ஸ்தோத்திரம் செய்துக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு படியிலும் நாயகம் ஏறிச் செல்லுகையில் அவர்கள் எல்லோரும் தங்களுக்கு மங்கள வாழ்த்தும், சுபச் சோபனம் கூறி சங்கை மரியாதையுடன் ஸலாமுரைத்தனர். இவ்விடத்தில் இஸ்மாயீல், ருக்யாயீல், கலாயீல் என்னும் அமரர்களைக் கண்டார்கள். அவர்களுடன் பல்லாயிரம் அமரர்கள் தக்தீஸ், தஹ்லீல், பரிசுத்த திரு மந்திரம் கொண்டு அலலாஹ் தஆலாவை துதித்தவர்களாய் ஆர்ப்பரித்து, ஆனந்தக் கூச்சலிட்டார்கள். அவ்வமரர்களிலொருவர் பாவங்களைப் பொறுப்போனே ! முஹம்மது

நபியவர்களின் சமூகத்தினருக்கு பிழைப் பொருத்தருள் என பிரார்த்தித்தவுடன் நாயகம் எங்கள் ஆண்டவனே ! நாங்கள் மறதியாகவோ, பிசகாகவோ, செய்த பாவங்களால் எங்களை குற்றம் பிடியாதேயெனக் கேட்டார்கள். இந்தப் பிரார்த்தனையாருக்கெனக் கேட்கவே எனது சமூகத்தினருக்கென விடையளித்தார்கள்.

இனி இவ்விடத்தில் துர்நாற்றப் புகையினால் நிரப்பப் பெற்ற ஓர் ஓடையைக் கண்டு வினவ அது அவர்களின் தீயச் செய்கைகள் எனப் பட்டது. உடனே எனது நாயனே ! அவர்களைத் தொட்டும் மன்னித்தருள் – அவர்கள் விஷயத்தில் எனது ஹிருதயத்தை பரிதவிக்கச் செய்யாதே எனப் பிரார்த்தித்தார்கள். உடனே ஆண்டவனின் திருச் சமூகத்திலிருந்து உமக்காக அவர்களில், மூன்றிலோர் பாகத்தை நன்கொடை அருளினோம் எனச் சொல்லப்பட்டது. அதற்கு நான் பொருந்தவில்லை என்கவே பாதிப்பேரை தந்தோமெனக் கூறப்பட்டது. அதற்கு நான் முழுப் பெயர்களையுமன்றி சம்மதியேன் எனச் சொன்னவுடன் உம்முடைய சமூகத்தினரெல்லோரையும் உமக்கு தத்தம் பண்ணினோம். உமது மகிமையின் பொருட்டால் அவர்கட்கு பிழைப் பொறுத்தோம் உமது பரக்கத் வரிசையின் பலனாக அவர்களில் உம்மீது ஸலவாத்து சொன்னவரின் தகுதியை உயர்த்தினோமென அல்லாஹ்தஆலா திருவுளம் புரிந்தான். ஆண்டவனே ! அவர்கள் மீது ஸலவாத்தும், ஸலாமும் சொல்வாயாக !

نَشْكُرُ الْقَيُّوْمَ مَنْ جَلَّ ثَنَاهُ ‖ اِذْ هَدَنَا خَيْرَ دِيْنٍ ارْتَضَاهُ

بِالنَّبِيِّ الْخَاتَمِ الَّذِى اصْطَفَاهُ ‖ فَوْقَ كُلِّ الْاَنْبِيَا ثُمَّ اجْتَبَاهُ

قَدْ بَدَا الْاَشْيَا الْبَدِيْعُ بِسَمَاهُ ‖ ثُمَّ اَنْشَا الْخَلْقَ مِنْ نُوْرِ ضِيَاهُ

وَلَقَدْ قَامَ نَبِيًّا فِي ابْتِدَاهُ ‖ وَالصَّفِيُّ لَا طِيْنَهُ اسْتَوٰى وَمَاهُ

وَاَضَاءَ الْعَرْشَ مِنْ نَّصْبِ لِوَاهُ ‖ وَالنَّبِيُّ مَا ثَمَّ مِنْ فِطْرِ شَذَاهُ

بَلْ وَلَا الرُّسُلُ عَلَوْا مَا قَدْ عَلَاهُ ‏ ‏ حَيْثُ كَانَ الْقَابُ قَوْسَيْنِ ذُرَاهُ

حَيْثُ صَلَّوْا وَالْمَلَائِكُ مِنْ وَرَاهُ ‏ ‏ وَاحْتَبَوْا فِي خِدْمَةٍ فَوْقَ سَمَاهُ

قَدْ رَأَى الْمَوْلَى رَآهُ وَرَآهُ ‏ ‏ جَهْرَةً مِنْ حَيْثُ مَا رَأَى سِوَاهُ

وَأَتَى بِالسَّعْدِ مِنْ نُورِ لِقَاهُ ‏ ‏ فَانْجَلَى عَنَّا الشَّقَا قَطْعًا عُرَاهُ

وَأَقَامَ الْحَقَّ فِينَا مِنْ هُدَاهُ ‏ ‏ فَاسْتَبَانَ الْكُفْرُ عَنْ أُسِّ بِنَاهُ

وَجَلَا التَّوْحِيدُ عَنْ كَشْفِ غِطَاهُ ‏ ‏ فَاضْمَحَلَّ الشِّرْكُ مِنْ نَزْعِ خِبَاهُ

فَلَكُمْ حُجَّاتِهِ قَهَرَتْ عِدَاهُ ‏ ‏ مُدْحِضَاتِ الْخَصْمِ عَنْ شَرِّ اعْتِدَاهُ

يَا رَسُولَ اللهِ يَا مَنْ قَدْ حَبَاهُ ‏ ‏ رَبُّهُ مِنْ قُدْرَةٍ مَا ذَا يَشَاهُ

هَلْ لَكُمْ أَنْ تُنْجِدُوا عَبْدًا مُنَاهُ ‏ ‏ أَوْ تُمِدُّوهُ لِعَفْوٍ عَنْ خَطَاهُ

وَعَلَيْكَ اللهُ صَلَّى فِي مَلَاهُ ‏ ‏ مَا تَجَلَّى نُورُكُمْ فِيمَا بَرَاهُ

10. பைத்தின் உரை

1) என்றும் தரிபாடான நற்புகழுடைய நாயனை துதிப்போமாக ! அவன் பொருந்தத்தக்க நன்மார்க்கத்தில் நம்மை நேர்வழிக் காட்டினான்.

2) எல்லா நபிமாரினும் தெளித்து, வடித்து, திருமணியாக்கப் பட்ட முத்திராங்கமான நபியை நமக்கருளினான்.

3) அற்புதமுடைய நாயன் சகல வஸ்துக்களையும் அவர்களின் திருநாமத்தினால் அமைக்கத் தொடங்கி அவர்களின் பிரகாச ஒளியினால் படைப்புக்களை படைத்தான்.

4) ஆதமானவர் தமது களிமண்ணையும், தண்ணீரையும் பூர்த்தி

செய்யாதிருந்த துவக்கத்திலேயே தாங்கள் நபியாய் எழுந்தருளினார்கள்.

5) நூஹானவர் தமது சிருஷ்டியின் வாயை முகவாதிருக்கையிலேயே தாங்கள் தங்கள் கொடியை நாட்டுவதால் அர்ஷை பிரகாசிக்கச் செய்தார்கள்.

6) ஆயினும் தங்கள் மிஃராஜ் என்னும் திரு யாத்திரை காப கவ்ஸைன் என்னும் சமீப சமூகமாயிருக்கையிலே தாங்களேறிய உச்சஸ்தானத்திற்கு மற்றும் ரசூல்மார் எவருமே உயர்ந்ததில்லை.

7) அன்பியாக்களும், அமரர்களும் தங்களுக்கு பின்னின்று தொழுது வானலோகத்தில் தங்களின் பணிவிடையில் மும்முரமாக முனைந்திருந்தனர்.

8) நாயகம் ஆண்டவனைக் கண்டார்கள். இன்னும் கண்டார்கள். மேலும் தாங்களன்றி மற்றொருவருமே காணாதிருக்கையில் பிரதியட்சமாக ! அவனை தாங்கள் தரிசித்தார்கள்.

9) தங்கள் திருக்காட்சியின் ஒளியினால் நற்கதி மோட்சத்தை கொணர்ந்ததன் பயனாக துற்கதியானது நம்மை விட்டும் வேறற களைந்துப் போயிற்று.

10) தங்கள் நேர்வழியினால் நம்மில் உண்மையை நிலை நாட்டினார்கள். அதனால் குஃப்ரானது அதன் அஸ்திவாரத்தை விட்டு அகன்றுப் போயிற்று.

11) இன்னும் தவ்ஹீதென்னும் ஏகாந்த உண்மையை அதன் திரையை நீக்கி, பிரகாசிக்கச் செய்தார்கள். எனவே ஷிர்க்கானது அதன் அடிமூலமே சிதைந்து நிர்மூலமாயிற்று.

12) எம்மாத்திரமோ தங்களின் அத்தாட்சிகள் எதிரிகளின் விதண்டா வாதங்களை தகர்த்தெறிந்து பகைவரை அடக்கி மடக்கிவிட்டன.

13) அல்லாஹ்வுடைய ரசூலே ! ஆண்டவன் தங்களுக்கு வேண்டிய அளவு தத்துவத்தை அளித்த நாயகரே !

14) தங்களுக்கு அடியான் ஆசைக்கு உதவி செய்ய மனமுண்டா? அவனது குற்ற மன்னிப்புக்கு ஒத்தாசைப்புரிய சித்தமுண்டா?

15) அல்லாஹ் தஆலா தான் படைத்த வஸ்த்துக்களில் தங்கள் ஒளிவிலங்கும் காலமெல்லாம் அவனுடைய மேலான மலக்குகளின் கூட்டத்துடன் தங்கள் மீது ஸலவாத்து சொல்வானாக.

ثُمَّ قَالَ جِبْرِيْلُ سِرْ يَا مُحَمَّدُ يَا حَبِيْبَ اللّٰهِ يَا أَكْرَمَ
الْخَلْقِ عَلَى اللّٰهِ، فَسَارَ حَتّٰى انْتَهٰى إِلَى السَّمَاءِ الدُّنْيَا
فَتَقَدَّمَ جِبْرِيْلُ الْبَابَ، فَقَرَعَهُ فَقِيْلَ مَنْ لَدَى الْأَعْتَابِ،
قَالَ أَنَا جِبْرِيْلُ وَهٰذَا مُحَمَّدٌ سَيِّدُ الرُّسُلِ وَالْمَلَإِ الْأَعْلٰى
قِيْلَ مَرْحَبًا بِهٖ أَهْلًا وَّسَهْلًا، وَفُتِحَ الْبَابُ فَدَخَلَ
صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ فَلَقِيَهُ الْمَلَكُ إِسْمَاعِيْلُ، فَسَلَّمَ
عَلَيْهِ فَرَدَّهٗ بِأَحْسَنِ تَبْجِيْلٍ، وَقَالَ الْخَيْرُ فِيْكَ وَفِيْ
أُمَّتِكَ، قَدْ شَرَّفْتَنَا بِخِدْمَتِكَ، وَرَأٰى هُنَاكَ قُبَّةً مِّنْ
دُرَّةٍ بَيْضَاءَ، وَفِيْ دَاخِلِهَا اٰدَمُ وَحَوَّاءُ، وَإِذَا نَظَرَ إِلَى
الْيَمِيْنِ ضَحِكَ بِمَا رَأَى الْجَنَّةَ وَذُرِّيَّتَهُ فِيْهَا، وَإِذَا نَظَرَ
إِلَى الْيَسَارِ بَكٰى بِمَا رَأَى النَّارَ وَذُرِّيَّتَهُ فِيْهَا، فَسَلَّمَ
عَلَيْهِ، فَرَدَّ السَّلَامَ وَقَبَّلَهُ بَيْنَ عَيْنَيْهِ، وَقَالَ مَرْحَبًا
بِالْاِبْنِ الصَّالِحِ، وَالنَّبِيِّ النَّاصِحِ، ثُمَّ سَارَ إِلَى السَّمَاءِ
الثَّانِيَةِ فَاسْتَفْتَحَهَا جِبْرِيْلُ، فَأَقْبَلَ جُرْجَائِيْلُ وَ
رُقْيَائِيْلُ، فِيْ أَلْفِ مَوْكِبٍ مِّنَ الْمَلٰئِكَةِ وَتَلَقَّوْهُ

بِالتَّشْرِيْفِ وَالتَّبْجِيْلِ، فَرَأٰى يَحْيٰى وَعِيْسٰى عَلَيْهِمَا
السَّلَامُ، فَسَلَّمَ عَلَيْهِمَا فَرَدَّا عَلَيْهِ وَدَعَوَا لَهٗ بِالْخَيْرِ
وَالْاِنْعَامِ، ثُمَّ سَارَ اِلَى السَّمَاءِ الثَّالِثَةِ فَرَأٰى يُوْسُفَ
وَيَعْقُوْبَ، وَرَأٰى سُلَيْمَانَ وَدَاوُدَ الْمُنِيْبَ، فَسَلَّمَ عَلَيْهِمْ
فَرَدُّوْا عَلَيْهِ بِالتَّبْشِيْرِ وَالتَّرْحِيْبِ، ثُمَّ عَلَا السَّمَاءَ
الرَّابِعَةَ فَرَأٰى فِيْهَا اِدْرِيْسَ فَسَلَّمَ عَلَيْهِ فَرَدَّ السَّلَامَ
بِالتَّهْنِئَةِ وَالْاِكْرَامِ، وَرَأٰى فِيْهَا مَلَكَ الْمَوْتِ عَلٰى
كُرْسِيٍّ مِّنْ نُوْرٍ، وَحَوْلَهٗ مِنَ الْمَلَائِكَةِ جَمٌّ غَفِيْرٌ،
وَهُوَ يُطِيْلُ النَّظَرَ عَلٰى لَوْحٍ بِيَمِيْنِهٖ بِلَا فُتُوْرٍ، وَعَنْ
يَسَارِهٖ شَجَرَةٌ بِسِعَةِ مَا بَيْنَ الْمَغَارِبِ وَالْمَشَارِقِ،
لَهَا اَوْرَاقٌ وَّاَثْمَارٌ عَلٰى عَدَدِ اَرْوَاحِ الْخَلَائِقِ،
مَكْتُوْبٌ فِيْهَا اَسْمَاءُ الْجِنِّ وَالْاَبْشَارِ مَعَ مَا لَهُمْ مِّنَ
الْاَرْزَاقِ وَالْاَنْفَاسِ وَالْاَعْمَارِ، فَسَلَّمَ عَلَيْهِ فَرَدَّ
التَّحِيَّةَ بِغَيْرِ تَبَسُّمٍ وَّلَا سُرُوْرٍ، قَالَ جِبْرِيْلُ هٰكَذَا
خَلَقَهُ اللّٰهُ اِلٰى يَوْمِ النُّشُوْرِ، فَسَأَلَهٗ عَنْ قَبْضِ الْاَرْوَاحِ

فَقَالَ اِذَا اسْتَوْفَى الْعَبْدُ رِزْقَهُ وَاَجَلَهُ اَقْبِضُ رُوْحَهُ
مِنَ الْاَشْبَاحِ، فَاِذَا كَانَتْ رُوْحًا مُؤْمِنَةً طَيِّبَةً رَفَعْتُهَا
اِلٰى عِلِّيِّيْنَ، وَاِذَا كَانَتْ خَبِيْثَةً عَاصِيَةً اَرْمِيْهَا اِلٰى
سِجِّيْنٍ، ثُمَّ عَلَا الْخَامِسَةَ فَرَأٰى هٰرُوْنَ اَبْيَضَ
الرَّأْسِ طَوِيْلَ اللِّحْيَةِ، فَسَلَّمَ عَلَيْهِ فَرَدَّ التَّحِيَّةَ،
وَدَعَا لَهُ بِدَعَوَاتٍ هَنِيَّةٍ، ثُمَّ ارْتَقٰى اِلَى السَّمَاءِ
السَّادِسَةِ فَرَأٰى فِيْهَا خَلْقًا كَثِيْرًا مِّنَ الْكَرُّوْبِيِّيْنَ
جُنْدَ اللّٰهِ الْاَعْظَمِ، يَبْكُوْنَ وَيَسْتَغْفِرُوْنَ لِاُمَّةِ مُحَمَّدٍ
صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ، وَوَجَدَ هُنَاكَ مُوْسٰى جَالِسًا
عَلٰى كُرْسِيَّةٍ مِّنْ نُّوْرٍ مُّتَّكِأً عَلٰى عَصَاهُ مُتَلَبِّسًا بِاَخْضَرِ
جُبَّتِهِ وَعَبَاهُ، قَدْ خَرَجَ الشَّعْرُ مِنْ رِدَائِهٖ اِلٰى مَا
وَرَاهُ، وَالْمَلَائِكَةُ يَزُوْرُوْنَهُ وَيَتَبَرَّكُوْنَ بِدُعَاهُ فَسَلَّمَ
عَلَيْهِ فَرَدَّ سَلَامَهُ مُنَكِّسًا لِّرَأْسِهٖ، فَقَالَ يَا حَبِيْبِيْ
هَلَّا تَرْفَعُ رَأْسَكَ فَقَامَ بِطِيْبِ نَفْسِهٖ، وَقَالَ يَا مُحَمَّدُ
اَنَا اَسْتَحِيْ مِنْكَ، لِاَنَّ الْيَهُوْدَ قَالُوْا اِنِّيْ خَيْرٌ مِّنْكَ

بَلْ اَنْتَ خَيْرٌ مِّنِّيْ وَاَكْرَمُ، وَاُمَّتُكَ خَيْرُ الْاُمَمِ،
ثُمَّ عَلَا السَّمَاءَ السَّابِعَةَ فَسَمِعَ الْمَلَكَ الرُّوْحَ وَ
الرُّوْحَانِيِّيْنَ، يَسْتَغْفِرُوْنَ لِاُمَّتِهِ الْمُذْنِبِيْنَ وَرَأَى
فِيْهَا مِنْ عَجَائِبِ خَلْقِ رَبِّهٖ، مَا لَمْ يُؤْذَنْ اَنْ يُّحَدِّثَكُمْ
بِهٖ، ثُمَّ وَجَدَ فِيْهَا بَيْتًا مُّرَبَّعًا مِّنَ النُّوْرِ، فَقِيْلَ هُوَ
الْبَيْتُ الْمَعْمُوْرُ، وَتَحُجُّهٗ فِيْ كُلِّ يَوْمٍ سَبْعُ مِائَةِ
اَلْفٍ مِّنَ الْمَلٰئِكَةِ وَيَطُوْفُوْنَ، ثُمَّ يَدْخُلُوْنَهٗ اِلٰى
يَوْمِ الْقِيٰمَةِ وَلَا يَعُوْدُوْنَ، فَاِذَا كَانَ يَوْمُ الْجُمُعَةِ
يَخْطُبُ فِيْهِ عِيْسٰى عَلَيْهِ السَّلَامُ، وَيَجْتَمِعُ فِيْهِ
الْمَلٰئِكَةُ وَالْاَنْبِيَاءُ وَالرُّسُلُ الْكِرَامُ، وَيُصَلُّوْنَ
وَيَدْعُوْنَ لِاُمَّةِ مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ الَّذِيْنَ
يُقِيْمُوْنَ الْجُمُعَةَ، فِيْ مَسَاجِدِ الْاَرْضِ مِنْ كُلِّ الْبُقْعَةِ
وَرَأٰى فِيْهَا شَيْخًا حَسَنَ الشَّيْبَةِ، عَظِيْمَ الْهَيْبَةِ،
يُشْبِهُ نَفْسَهُ الشَّرِيْفَةَ، جَالِسًا عَلٰى كُرْسِيٍّ مِّنْ نُّوْرٍ
عِنْدَ بَابِ الْجَنَّةِ، وَقَدْ اَسْنَدَ ظَهْرَهٗ اِلَى الْبَيْتِ الْمَعْمُوْرِ

وَعَلٰى جَانِبِهٖ جَارِيَةٌ كَالْحُوْرِ فَاسْتَخْبَرَ عَنْهُمَا
بِإِرْشَارَةٍ فَقِيْلَ هُمَا إِبْرَاهِيْمُ وَزَوْجَتُهٗ سَارَةُ
فَسَلَّمَ عَلَيْهِمَا فَرَدَّا السَّلَامَ وَقَالَ مَرْحَبًا بِالْوَلَدِ
الصَّالِحِ وَالنَّبِيِّ النَّاصِحِ وَعَانَقَاهُ بِالتَّقْبِيْلِ وَدَعَوَا لَهٗ
بِالْخَيْرِ الْجَزِيْلِ ۝ اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَيْهِ ۝

11. ஹிகாயத் வரலாறு

பின்பு ஜிப்ரீலானவர் முஹம்மதே ! அல்லாஹ்வின் நண்பரே ! அல்லாஹ் தஆலாவிடத்தில் சிருஷ்டிகளில் மிகச் சங்கை வாய்ந்தவரே ! நடங்களென்றார். நாயகம் முன் வானம் வரையிற் சென்றதும், ஜிப்ரீல் கதவைத் தட்டினார். யாரென சப்தம் வந்தது. நான் ஜிப்ரீல் இதோ ரசூல்மார்களுக்கு நாயகரும், மேலான அமரர்களுக்கு எஜமானருமாகிய முஹம்மதென்றவுடன் அவருக்கே சுபசோபனம். நல்மாராயம் நல்வரவென்ற வாழ்த்துடன் வாயல் திறக்கப்பட்டது.

உட்பிரவேசிக்கவே அங்கு இஸ்மாயீலென்னும் அமரரை சந்தித்து, அவர் மீது ஸலாம் கூறினார்கள். அவர் மரியாதையோடு மறுமொழி கூறி நலவெல்லாம் உம்மிலும், உமது சமூகத்தினரிலுமாகும். தங்கள் பணிவிடையினால் எங்களைச் சிறப்பித்தீர் என்று சொன்னார். அவ்விடத்தில் வெண்மை நிறமுடைய ஆன முத்தாலொரு குப்பா மாளிகை இருந்தது. அதில் ஆதம், ஹவ்வா அலைஹிமஸ்ஸலாம் இருவரும் இருந்தனர். ஆதம் வலது பக்கத்தைப் பார்த்தால் சுவர்க்கத்தையும், அதிலிருக்கும் தமது சந்ததிகளையும் கண்டு சிரிப்பதும், இடது பக்கம் பார்த்தால் நரகத்தையும், அதிலிருக்கும் தமது சந்ததிகளையும் பார்த்து அழுவதுமாயிருக்கிறார்கள். அவர்களிருவர் மீதும் நாயகம் ஸலாமுரைக்க அவர்கள்

மரியாதையுடன் ஜவாபுக் கூறி, தங்களிரு கண்களுக்கு மிடையில் முத்தமிட்டு, எங்கள் அருமை மகனுக்கே சோபனம். நற்குணமான நபிக்கே நன்மாராயம் என வாழ்த்திப் போற்றி, ஆசீர்வதித்தனர்.

பின்பு இரண்டாம் வானம் வரையிற்சென்று ஜிப்ரீல் அதன் வாயிலை திறக்கச் செய்தார். ஜிர்ஜாயில், ருக்யாயீல் என்னும் இரு அமரர்களும் ஆயிரம் சவாரியான அமரர்கள் புடைச் சூழ, வெகு குதூகலத்துடன் அதிக விமர்சையாய் எதிர் கொண்டழைத்தனர். அங்கு யஹ்யா, ஈஸா அலைஹிமஸ்ஸலாமெனும் தீர்க்கதரிசிகள் இருவரையும் தரிசித்து அவர்கள் மீது ஸலாம் சொல்லவே, அவர்கள் வெகுப்பரிவுடன் பதிலுரைத்து, நன்மை, நன்கொடைக் கொண்டு பிரார்த்தித்தனர்.

அப்பால் மூன்றாம் வானம் சென்றதும் யஃகூப், யூசுப் சுலைமான் தாவூது அலைஹிமிஸ்ஸலாமென்னும் தீர்க்கதரிசிகளை கண்டு ஸலாமுரைக்கவே அவர்கள் அன்போடு ஜவாபுரைத்து, சுபசோபனம், நன்மாராயம் கொண்டு ஆசிர்வதித்தனர்கள். பின்பு நான்காம் வானத்திற்குயர்ந்து அங்கு இத்ரீஸ் நபியைக் கண்டு ஸலாம் சொன்னவுடன் அவர்கள் சங்கையுடனும், மங்கள வாழ்த்துடனும், மறுமொழி கூறினார்கள். அவ்விடத்தில் ஒளியினாலொரு நாற்காலி மீது மலக்குல் மௌத்தென்னும் எமனைக் கண்டார்கள். அவரைச் சூழ்ந்து நிறைய மலக்குகள் கும்பலிருந்தனர். அவர் தமது வலக்கையிலிருக்கும் ஓர் பலகையில் ஓயாது நோட்டத்தை செலுத்தினவராயிருக்கிறார். அவரின் இடது பாகத்தில் எழுவான், படுவானை அடைக்கத்தக்க பிரமாண்டமான ஓர் விருட்சமிருக்கிறது. அதற்கு படைப்புகளின் உயிர்களது எண்ணிக்கைப்படி இலைகளும், பழங்களுமுண்டு. அவைகளில் மனு, ஜின்களின் பெயர்கள் எழுதப்பட்டிருப்பதுடன் அவர்களுக்குள்ள இரணங்கள், சுவாசங்கள், ஆயுட்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

அவருக்கு நாயகம் ஸலாம் சொன்ன போது அவர் யாதொரு சந்தோஷமின்றி ஜவாபு சொன்னார். ஜிப்ரீல் அவரை இவ்விதமாகவே கியாமத் உலக முடிவு நாள் பரியந்தம் அல்லாஹ் படைத்திருக்கிறானென்றார். நாயகம் அவரிடம் உயிர்களை

கைப்பற்றும் விதத்தைப் பற்றிக் கேட்டார்கள். அவர் ஒரு அடியான் தன்னுடைய ஆகாரத்தையும், குறிப்பிட்ட தவணையையும், சரிவர பூர்த்தி செய்துக் கொள்வானாயின் அவனுடைய ஜடத்திலிருந்து உயிரைப்பறி வாங்குவேன். அது முஃமின் நல்லடியானின் உயிராயின் அதை "இல்லியீன்" என்னும் சுவர்க்கத்தளவில் உயர்த்துவேன். கெட்ட பாவி உடைய உயிராயின் அதை "சிஜ்ஜீன்" எனும் நரகத்தளவில் எறிந்து விடுவேனென்று சொன்னார்.

பின்பு ஐந்தாம் வானத்திற்கு உயர்ந்து அங்கு ஹாரூன் நபியவர்களை தலை நரைத்த, வெண்மையான நீண்ட தாடியுடையவராய் கண்டு அவருக்கு ஸலாம் சொல்ல அவர் ஜவாபு கூறி, நற்சுக வாழ்வுக் கொண்டு பிரார்த்தித்தார்.

பின்பு ஆறாம் வானம் சென்று அங்கு அல்லாஹ் தஆலாவின் பெரும் சேனைகளான "கர்ரூபிய்யீன்" என்னும் அமரர்களில் அநேகரை தரிசித்தார்கள். அவர்கள் எல்லோரும் நபியவர்களின் சமூகத்தினருக்காக, பிழை பொறுக்கத் தேடினவர்களாய் அழுதுக் கொண்டிருக்கின்றனர். இன்னும் அதில் மூஸா நபியவர்கள் அழகிய சுத்த ஒளியினாலான ஓர் நாற்காலியிலிருக்கக் கண்டார்கள். அவர் பச்சை நிறத்தையுடைய குப்பாயம் போர்வை அணிந்தவராயும் தமது "அஸா" ஊன்று கோலின் பேரிலாகம் பெற்றவராயுமிருந்தார். அவருடைய உரோமங்கள் குப்பாயத்தை தொலைத்து பிற்புறமாய் வெளிப்பட்டிருந்தன. அமரர்கள் அவரை சந்தித்து அவருடைய பிரார்த்தனைக் கொண்டு பரக்கத் வரிசைப் பெற்றுக் கொள்கின்றனர். நாயகம் அவர்மீது ஸலாம் சொல்ல அவர் தலையைக் குனிந்தவராய் ஜவாபுரைத்தார். நாயகம் எனது நண்பரே ! உம்முடைய தலையை உயர்த்தக் கூடாதாவென்ற போது மனமகிழ்ச்சியுடன் முஹம்மதே ! நான் உம்மில் நின்றும் வெட்கிக்கிறேன். ஏனெனில் யஹூதிகள் நான் உங்களை விட சிறந்தவரென சொல்லி விட்டனர். ஆயினும் தாங்களே என்னிலும் சிறந்தவரும், மிகச் சங்கை வாய்ந்தவரும், தங்கள் சமூகத்தினர் அவ்விதமே சிரேஷ்டமானவர்களென்றும் சொன்னார்.

பின்பு ஏழாம் வானத்தில் சென்று அங்கு ரூஹ் ரூஹானிய்யின் என்னும் அமரர்களை சந்தித்தார்கள். அவர்கள் நாயகமவர்களின்

சமூகத்தில் பாவியானவர்களுக்கு பிழை பொறுக்கத் தேடுவதையும் கேட்டார்கள். இன்னுமதில் ஆண்டவனுடைய பற்பல படைப்புக்களின் அற்புதங்களிலும், அதிசயங்களிலும், அவைகளை பிரஸ்தாபிக்க அனுமதிக்கப்படாத, விபரித்துக் கூறமுடியாத, அனந்தங் காரணங்களை கண்ணாறக் கண்டு களிக்கூர்ந்தார்கள். பின்பு அவ்விடத்தில் அந்த ஒளியினால் சதுர வடிவத்தில் பிரகாசிக்கத் தக்க "பைத்துல் மஃமூர்" என்னும் பள்ளியை தரிசித்தார்கள். அதில் ஒவ்வொரு நாளிலும் எழுபதனாயிரம் மலாயிக்கத்துக்கள் ஹஜ் என்னும் வணக்கமும், தவாஃபும் செய்தபின் அதன் உள்ளே புகுவார்கள்.

மறுபடி உலகமுடிவு நாள் பரியந்தம் அவர்கள் திரும்புகிறவர்களல்லர் ஜும்ஆ வெள்ளி கிழமையில் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அதில் குத்பா ஓதி உபதேசம் செய்வார்கள். அமரர்களும், தீர்க்கத்தரிசிகளும் அதிற் சேகரமாய் ஜும்ஆ தொழுத பின் முஹம்மது நபியின் சமூகத்தினரில் பூலோகத்தில் நாலா கோணங்களிலுமுள்ள பள்ளியில் வெள்ளி நாள் தொழுகையை நிலைநாட்டிய நல்லோர்களுக்காக பிரார்த்தனை செய்வார்கள். இன்னுமதில் கவுரவமிக்க தக்க மதிப்பு வாய்ந்த, அழகிய நரை இலங்கிய ஓர் விருத்தாளியை கண்ணுற்றார்கள்.

அவர் தமது சிறப்பான சரீர வடிவத்திற்கப்பானவராய் சுவர்க்கத்தின் வாயிலிடத்தில் ஒளியினால் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து தமது முதுகை பைத்துல் மஃமூர் பள்ளியிற் சேர்த்த வராயிருந்தார். அவர் பக்கத்தில் சுவர்க்க லோகத்தின் கன்னிஸ் திரிக்கொப்பாகிய, சுந்தரவடிவுடைய, ஓர் பெண்ணரசியுமிருந்தார். அவ்விருவரையும் குறித்து விசாரித்ததில் அவர்களுமது பிதா இப்ராஹீமும், அவருடைய ஸ்தீரி சாராவுமெனச் சொல்லப்பட்டது. நாயகம் அவர்கள் மீது ஸலாமுரைக்க அவர்கள் முக மலர்ந்து மகிழ்ச்சியுடன் ஜவாபுக் கூறி, நட்புடைய பிள்ளைக்கே சோபனம். சற்குண நபிக்கே நன்மாராயம் எனச் சொல்லி நாயகமவர்களை மார்போடணைத்து கட்டித் தழுவி, முத்தமிட்டு, மிகுந்த நன்மைக் கொண்டு பிரார்த்தித்து ஆசீர்வதித்தார்கள். ஆண்டவனே ! அவர்கள் மீது ஸலவாத்து, ஸலாம் சொல்வாயாக !

تَعَالَوْا نَتْلُ تَسْلِيمَ التَّحِيَّةْ | عَلٰى خَيْرِ الْمُحَيَّا بِالتَّحِيَّةْ

وَنُهْدِيْ مِنْ غَوَالِيْ تَصْلِيَاتٍ | تُعَطِّرُ خَيْرَ ذَاتِ الْاَحْمَدِيَّةْ

وَنُثْنِيْ كُلَّ خَيْرٍ فِيْهِ جَمْعًا | بِحَسَنَاتِ الدُّنَا وَالْاُخْرَوِيَّةْ

هُوَ النُّوْرُ الْمُنِيْرُ بِنُوْرِ ذَاتٍ | تُضِيْئُ بِهِ السَّمٰوَاتُ الْعَلِيَّةْ

هُوَ الْبَحْرُ الْمُفِيْضُ لِكُلِّ عِلْمٍ | فَكُتْبُ اللهِ مِنْهُ غَدَتْ مَلِيَّةْ

لَهٗ ذَاتُ الْفَضَائِلِ كُلُّ رُسْلٍ | فَمِنْ فَضْلَاتِهٖ حَازُوا الْمَزِيَّةْ

لَهٗ اَسْرُ الْفَخَارِ وَاَصْلُ مَجْدٍ | فَهُمْ مِنْ سُوْرِهٖ ذَاقُوْا شُوَيَّةْ

بِهٖ بَاهَى الصَّفِيُّ مِمَّنْ وَرَاهُ | بِهٖ فَاقَ الْخَلِيْلُ عَلَى الْبَقِيَّةْ

فَهُمْ فِيْ حَدِّ حِيْطَتِهٖ بِحُكْمٍ | بِرَعْيِ حُقُوْقِهٖ عِنْدَ الْقَضِيَّةْ

وَهُمْ فِيْ فَصِّ خَاتَمِهٖ رُقُوْمٌ | هُوَ الْمَعْنَى الْمُتَمِّمُ الْفَائِدِيَّةْ

فَكَمْ عِزٍّ وَّكَمْ شَرَفٍ وَّظَرْفٍ | فَخُصَّ بِهٖ بِحَيْثُ اللَّامِعِيَّةْ

فَخَلْقُ اللهِ يُحْمٰى فِيْ حِمَاهُ | وَيُرْعٰى دُوْنَ رَوْضَتِهِ النَّدِيَّةْ

فَمَنْ يَّسْتَنْجِدَنْهُ بِاَيِّ خَطْبٍ | عَلَيْهِ بِهٖ فَثَمَّ لَهُ الْعَطِيَّةْ

فَهَا اَنَا مِنْ طُفَيْلِ قِرَاكَ فَامْنُنْ | عَلَيَّ بِصَفْحِ ذَنْبِيْ وَالْخَطِيَّةْ

عَلَيْكَ صَلٰوةُ رَبِّيْ مَعْ سَلَامٍ | دَوَامًا فِي الْبُكُوْرِ وَفِي الْعَشِيَّةْ

12. பைத்தின் உரை

1. தோழர்களே ! வாருங்கள். நாம் ஸலாம் கொண்டு காணிக்கை அருளப் பெற்ற நாயகரின் திருமுகத்திற்கு காணிக்கையாக ஸலாமை ஓதுவோம்.

2. இன்னும் அஹ்மது நாயகரின் திருமேனியை மன்னிப்பிக்கத்தக்க ஸலவாத்தென்னும் நறுமணங்களை அவர்களுக்கு பரிசளிப்போம்.

3. இன்னும் இகலோக, பரலோக, நல உரிமைகள் முதலிய எல்லா நன்மைகளையும், ஒருங்குத்திரட்டி, அவர்களிலேயே வைத்து புகழ்பாடுவோம்.

4. அவர்கள் தங்கள் திருமேனியின் ஒளியினால் மேலேழுவான்களையும் ஒளிரச் செய்யும் ஒளியானவர்கள்.

5. அவர்கள் சகல கலைக்கியானங்களையும், ஒலிப்பிக்கத் தக்க மகா சமுத்திரம், தங்கள் இல்மு அறிவினால் அல்லாஹ்வின் வேதங்கள் நிரம்பி இருக்கின்றன.

6. சர்வ நல் வரிசைகளின் ஸ்தூலமே அவர்களுக்குரியது. ரசூல்மார் அனைவரும் தங்கள் மீதிலிருந்தே வரிசைப் பெற்றார்கள்.

7. சகல பெருமையின் மூலாதாரமும் கீர்த்தி, கியாதியின் அடிப்படையும் அவர்களுக்கே உரியன மற்றவர்களெல்லாம் தங்கள் எஞ்சியதிலிருந்தே அற்ப சொற்பத்தை அனுபவக்கின்றனர்.

8) இன்னும் அவர்களைக் கொண்டே ஆதமானவர் தமக்கு பின்னோரில் பெருமை பேசினார். இப்ராஹீம் மற்றவர்களில் மேம்பாடு பெற்றார்.

9) அவர்களெல்லோரும் சகல விவகாரங்களிலும் கடமைகளை பேணுவதில் நாயகத்தின் தீர்ப்பின் வரையறைக்கு உட்பட்டவர்களே.

10) இன்னுமவர்கள் நாயகத்தின் முத்திரை. மோதிரத்தில் சித்தரிக்கப்பட்ட அட்சரங்களும் தாங்களே அவற்றின் பயனை பூர்த்தி செய்யத்தக்க உட்பொருளுமாயிருக்கும்.

11) எத்தனை, எத்தனையோ சீரும், சிறப்பும், கியாதியும், கௌரவமும், மற்ற எவரேனும் உடந்தையின்றி தங்களுக்கே சொந்தமாக்கப் பட்டிருக்கின்றன.

12) அல்லாஹ் தஆலாவின் சிருஷ்டிகோடிகள் நாயகத்தின் கோட்டைக்குள் காக்கப்படும். தங்கள் நலம் பொருந்திய தோட்டத்தில் மியக்கப்பட்டும் வருகின்றனர்.

13) எவனாவது, எந்த சங்கடத்திலாவது தங்களின் ஆதரிப்பை நாடினால் அவன் அவர்களையே பற்றிப்பிடித்துக் கொள்ளட்டும். அங்கேயே அவனுக்கு தரும நிவாரணை உபகரிக்கப்படுவான்.

14) நாயகமே ! இதோ தங்களின் அழையா விருந்தினனாகிய ஏழை அடியேன் நான் ஆசையினாலே எனது குற்றம், குறைகளை மன்னிப்பதுக் கொண்டு எனக்கு பிச்சைக் கொடுங்கள்.

15) எனது ஆண்டவனின் நற்கிருபை ஈடேற்றம் தங்கள் மீது சதா காலம் காலையிலும், மாலையிலும் உண்டாகுக !

ثُمَّ رَأٰى مَلَكًا مَّخْلُوْقًا مِّنْ نَارٍ، جَالِسًا عَلٰى كُرْسِيٍّ مِّنْ شِرَارٍ، فِيْ مَسِيْرَةِ اَلْفِ سَنَةٍ مِّنَ الْبِعَادِ، وَلَهٗ اَعْوَانٌ وَّ خُدَّامٌ غِلَاظٌ شِدَادٌ، فَقِيْلَ هٰذَا مَالِكٌ خَازِنُ النَّارِ فَسَلَّمَ عَلَيْهِ، فَرَدَّ السَّلَامَ وَرَفَعَ رَأْسَهٗ وَنَظَرَ نَظْرَةً اِلَيْهِ، فَاِذَا هُوَ اَعْظَمُ هَيْبَةً اَكْبَرُ خِلْقَةً، اَشَدُّ بَطْشَةً عَظِيْمُ الصَّوْلَةِ، ظَاهِرُ الْغَضَبِ، غَلِيْظُ الْقَلْبِ، لَيْسَ فِيْ قَلْبِهٖ رَحْمَةٌ قَطُّ، لَوْ اَشْرَفَ عَلَى الدُّنْيَا لَحْظَةً لَهَلَكُوْا بِشِدَّةِ الضَّغْطِ، فَقَالَ جِبْرِيْلُ يَا مَالِكُ لَا تَنْظُرْ اِلٰى حَبِيْبِ اللّٰهِ، فَوَلّٰى وَجْهَهٗ وَرَاهُ، فَسَأَلَ اَنْ يُّرِيَهُ النَّارَ، فَقَالَ لَا تَسْتَطِيْعُ النَّظَرَ اِلٰى مَسَاوِيْ تِلْكَ الدَّارِ، فَاِذَا بِهَاتِفٍ، يَا مَالِكُ اَطِعْ حَبِيْبِيْ وَلَا تُخَالِفْ، فَكُشِفَ عَنْهُ الْحِجَابُ، فَفُتِحَ مِقْدَارُ خَرْمَةِ اُبْرَةٍ مِّنَ الْبَابِ، فَخَرَجَ مِنْهَا وَهْجٌ سَاطِعٌ، وَدُخَانٌ مُّنْتِنٌ قَاطِعٌ، وَفَارَتِ النَّارُ، وَغَلَتْ بِمَسَاوِيْهَا مِنَ الشِّرَارِ وَالْبَوَارِ، فَاِذَا فِيْهَا سَبْعُ طَبَقَاتٍ بِقَدْرِ

مَابَيْنَ الْمَشَارِقِ وَالْمَغَارِبِ، مَحْبُوسٌ فِيْهِنَّ
الرِّجَالُ وَالنِّسَاءُ مَعَ الْحَيَّاتِ وَالْعَقَارِبِ، وَهُمْ
يَتَصَارَخُوْنَ مِنْ تِلْكَ الْمَصَائِبِ، فَقَالَ يَامَالِكُ
مَاكَانَ لَهُمْ مِّنَ الْخَطِيَّةِ، فِيْ حَيٰوتِهِمُ الدُّنْيَوِيَّةِ،
قَالَ كَانُوْا يَظْلِمُوْنَ الْخَلْقَ وَيَأْكُلُوْنَ اَمْوَالَهُمْ
بِغَيْرِالْحَقِّ، وَنَظَرَ فَاِذَا قَوْمٌ يَبْتَلِعُوْنَ النَّارَ،
فَتَخْرُجُ مِنَ الْاَدْبَارِ، فَقِيْلَ هٰؤُلَاءِ اَكَلَةُ
اَمْوَالِ الْاَيْتَامِ، بِالظُّلْمِ وَالْحَرَامِ، وَقَوْمٌ بُطُوْنُهُمْ
كَالْجِبَالِ الْكِبَارِ، فِيْهَا حَيَّاتٌ وَّعَقَارِبُ مِنَ النَّارِ،
فَهٰؤُلَاءِ اَكَلَةُ الرِّبٰو وَالْاَقْذَارِ، وَوَجَدَ قَوْمًا يَّطْحَنُوْنَ
رُؤُسَهُمْ بِحِجَارَةٍ مِّنْ نَارٍ، فَهُمْ حُكَّامٌ يَّرْتَشُوْنَ
فِى الْحُكْمِ مِنَ الْاَبْشَارِ، وَقَوْمًا يَّعْطَشُوْنَ اِلَى الْمَاءِ
وَيَسْتَغِيْثُوْنَ، فَتَسْقِيْهِمُ الزَّبَانِيَةُ بِمَاءٍ كَالْمُهْلِ
تَغْلِىْ فِى الْبُطُوْنِ، فَتَسْقُطُ لُحُوْمُ اَوْجُهِهِمْ وَتَقَطَّعُ
اَمْعَاءَهُمْ مِنَ الْحَرِّ، ثُمَّ تَخْرُجُ مِنْ وَّرَاءِ الدُّبُرِ،

فَهٰؤُلَاءِ شَارِبُوا الْخَمْرِ، وَقَوْمًا اَجْسَامُهُمْ وَوُجُوهُهُمْ
كَالْخَنَازِيْرِ، تَنْهَشُ لُحُوْمَهُمُ الْحَيَّاتُ وَالْعَقَارِبُ
مِنَ السَّعِيْرِ، فَهٰؤُلَاءِ قَوْمٌ لَّا يَغْتَسِلُوْنَ مِنَ الْجَنَابَةِ
بِالتَّطْهِيْرِ، فَقَالَ يَاجِبْرِيْلُ حَسْبِيْ حَسْبِيْ هٰذَا
الْقَدْرُ، فَاَغْلَقَ مَالِكٌ بَابَ جَهَنَّمَ فِي الْفَوْرِ، ثُمَّ وَاجَهَهُ
الْخِطَابُ، فَقَالَ يَا مُحَمَّدُ حَذِّرْ اُمَّتَكَ اَنْ لَّا يَقَعُوْا فِيْ
مِثْلِ هٰذَا الْعَذَابِ، اَعَاذَنَا اللّٰهُ مِنْ تِلْكَ النَّارِ
وَالْعِقَابِ، ثُمَّ سَارَ حَتّٰى وَصَلَ اِلٰى بَابِ الْجَنَّةِ فَقَرَعَهُ
فَاَتٰى رِضْوَانُ خَازِنُ الْجَنَّةِ، فَفَتَحَهُ وَقَالَ مَرْحَبًا بِكَ
اَهْلًا وَّسَهْلًا، حَيَّاكَ اللّٰهُ قُرْبًا وَّوَصْلًا، فَاِذَا اَرْضُهَا
النُّقْرَةُ، وَرِيَاضُهَا الدُّرَّةُ، وَجِبَالُهَا الْعَنْبَرُ، وَ
شُرَّفَاتُهَا الْيَاقُوْتُ الْاَحْمَرُ، وَالْفِضَّةُ وَالذَّهَبُ
مَقَاصِيْرُهَا، وَغُرَفُهَا وَالْمِسْكُ وَالزَّعْفَرَانُ تُرَابُهَا،
وَحَشِيْشُهَا وَنَبْتُهَا، فَاَدْخَلَهُ فِيْهَا جِبْرِيْلُ، ثُمَّ
مَشْيًا فِيْ بُسْتَانِهَا الظَّلِيْلِ، فَرَاٰى اَنْهَارًا مِنْ مَّاءٍ

غَيْرِ اٰسِنٍ، وَخَمْرٍ لَذَّةٍ لِّلشَّارِبِيْنَ، وَلَبَنٍ لَّمْ يَتَغَيَّرْ
طَعْمُهُ وَعَسَلٍ مُّصَفًّى، وَعِنْدَ الْاَنْهَارِ قِبَابٌ وَّ
وَّخِيَامٌ مِّنَ الْاَنْوَارِ، فِيْهَا حُوْرٌ عِيْنٌ اَتْرَابٌ وَّ اَبْكَارٌ،
وَغِلْمَانٌ حِسَانُ الْوُجُوْهِ كَالْاَقْمَارِ، ثُمَّ وَجَدَ نَهَرًا
عَظِيْمًا يُقَالُ لَهُ الْحَوْضُ الْكَوْثَرُ، اَلَّذِيْ اَعْطَاهُ اللّٰهُ
تَعَالٰى فِي الْمَحْشَرِ، وَعَلٰى اَطْرَافِهٖ خِيَامٌ مِّنَ الدُّرَرِ
وَقِبَابٌ مِّنْ زُمُرُّدٍ اَخْضَرَ، وَحَافَّتُهَا الْمِسْكُ الْاَذْفَرُ،
وَحَصْبَاءُهَا الْيَوَاقِيْتُ وَالْجَوْهَرُ، وَلِكُلِّ قُبَّةٍ اَرْبَعَةُ
اَبْوَابٍ وَقُدَّامَ كُلِّ بَابٍ شَجَرَةٌ مِّنَ الدُّرَّةِ، قُضْبَانُهَا
مِنَ الْفِضَّةِ وَالنُّقْرَةِ، وَاَوْرَاقُهَا مِنَ الْعَسْجَدِ الْاَصْفَرِ،
وَاَزْهَارُهَا اَحْسَنُ مِنَ الْقَمَرِ، وَاَثْمَارُهَا اَبْيَضُ مِنَ
الثَّلْجِ، وَاَحْلٰى مِنَ الْعَسَلِ، وَاَلْيَنُ مِنَ الزُّبْدِ وَعَلٰى
شَاطِئِ النَّهْرِ، اَكْوَابٌ وَّ اَبَارِيْقُ وَكُؤُوْسٌ اَكْثَرُ،
مِنْ قَطَرَاتِ الْمَطَرِ، وَاَقْدَاحٌ مِثْلُ نُجُوْمِ السَّمَاءِ
عَدَدًا، مَنْ شَرِبَ مِنْهَا شَرْبَةً لَّا يَظْمَأُ بَعْدَهَا

أَبَدًا، وَقَدِ انْشَقَّ مِنْهُ عَيْنٌ أُخْرٰى يُقَالُ لَهَا نَهْرُ
الرَّحْمَةِ فَشَرِبَ مِنْهُمَا وَاغْتَسَلَ وَتَطَهَّرَ، فَغَفَرَ
اللّٰهُ لَهٗ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِهٖ وَمَا تَأَخَّرَ، وَرَأٰى فِيْهَا
مِنْ عَجَائِبِ أَنْوَاعِ النِّعَمِ مَا لَا عَيْنٌ رَأَتْ، وَلَا أُذُنٌ
سَمِعَتْ، وَلَا يَخْطُرُ قَطُّ بِبَالِ الْبَشَرِ، فَقَالَ لِوَجْهِ
رَبِّيَ الْحَمْدُ وَالشُّكْرُ، بِلَا حَدٍّ وَّلَا حَصْرٍ ه اَللّٰهُمَّ
صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَيْهِ ه

13. ஹிகாயத்தின் வரலாறு

பின்பு நெருப்பினாற் படைக்கப்பட்ட ஓர் மலக்கை செந்தழலின் ஓர் நாற்காலியில் உட்கார்ந்தவராய் ஆயிரம் வருட தொலைத்தூர விஸ்தீரணத்திலிருக்க கண்டார்கள். அவரைச் சூழ்ந்து பல குரூர சிந்தையும், முரட்டு சுபாவமும் பொருந்திய ஊழியரும் சேவகரும் இருந்தனர். இவர்தான் நரகத்தின் அதிபதி மாலிக் என சொல்லப்பட்டது. அவர் பேரில் ஸலாம் சொல்ல, அவர் பிரதி சொல்லி தலையை நிமிர்த்தி ஓர் பார்வை பார்த்தார். அவர் கடின அச்சத்திற்குரியவர். பெரும் படைப்பினர். கொடிய அழுத்தம் பிடித்தவர். வெகு தத்துவம் படைத்தவர். கோபம் மேலிட்டவர். வன்னெஞ்சுடையவர். அவரது இருதயத்தில் அறவே இரக்கமற்றவர்.

அவருடைய ஓர் பார்வை துன்யா உலகத்தின் பேரில் விழுந்தால் அதன் கொடும் துன்பத்தினால் உலகத்துடைய ஜீவ கோடிகள் மாண்டு ஹலாக் நாசமாகிவிடுவர். ஜிப்ரீல் அவரை நோக்கி மாலிக்கே நீர் அல்லாஹ் தஆலாவின் நண்பரளவிற் பாராதீர் என்றார். உடனே அவர் முகத்தை திருப்பிக் கொண்டார். நாயகம் நரகத்தை காண்பிக்கும் படி அவரைக்கேட்ட போது அவர் தாங்கள்

நரகத்தின் கொடிய தீவினைகளை நோக்க சக்திப் பெற மாட்டீர்களென்றார். உடனே ஓர் அசரீரி மாலிக்கே எனது நண்பருக்கு வழிப்படும் மறுக்க வேண்டாம் என உண்டானவுடன் திரை நீக்கப்பட்டு, ஓர் ஊசித்துவாரப் பிரமாணம் நரகவாயல் திறக்கப்பட்டது. அதனின்றும் பற்றி எரியும் அக்கினி ஜுவாலையும் சகிக்கமுடியாத துர்நாற்றமும், புறப்பட்டன. நரகம் தனது கொடிய பாலும் கணற்பொறிகளோடு கொதித்தெழுந்தது. அதில் எடுவான், படுவான் தொலைத்தூரம் கொண்ட ஏழு அடுக்கு தட்டுகளுண்டு.

அவைகளில் ஆண்களும், பெண்களும் , பாம்பு, தேள் முதலிய விஷப் பிராணிகளுடன் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் அந்த கோரங்களை பொறுக்க முடியாமல் அட்டாளித்து இரட்சிப்புக் கேட்கின்றனர். நாயகம் மாலிக்கே அவர்களுடைய பூலோக வாழ்க்கையில் உண்டான பாவ தோசங்களென்ன வெனக் கேட்டதற்கு அவர்கள் மனிதர்களை ஹிம்சித்து அவர்களின் சொத்துக்களை அனாவசியமாயும், அநியாயமாயும் பறித்து தின்றவர்கள் என்றார். இன்னும் சில ஜனங்கள் நெருப்புக் கட்டியை விழுங்க அது அவர்களின் பின் துவாரத்தினால் புறப்படுகின்றது. அவர்கள் யதீம் அநாதை மக்களின் முதல்களை அபகரித்து ஹராமாய் தின்றவர்கள். இன்னும் சில ஜனங்களின் வயறுகள், பிரமாண்டமான மலைகளைப் போல் விம்மிப் பெருத்து, அவைகளில் நெருப்பினாலாகிய பாம்பு, தேள்கள் நிரம்பிக் கிடக்கின்றன.

அவர்கள் வட்டி, பொலிசை முதலிய அசுத்த பொருட்களைத் தின்றவர்கள். இன்னும் சில பேர் தங்கள் தலைகளை நெருப்புக் கற்களில் மோதியுடைக்கின்றனர். அவர்கள் மனிதருக்கு நீதி வழங்குவதில் லஞ்சம் வாங்கினவர்கள். இன்னும் சிலர் தாகித்து இரட்சிப்புத் தேடி தண்ணீரைக் கேட்க நரகத்தின் "ஜபானிய்யாத்" ஊழியர்கள் வயிறெறியத்தக்க நரக வாசிகளின் சீழ், சலம் இவைகளை அவர்கட்கு புகட்டுவதும், அதன் கொடிய வெப்பினால் அவர்களுடைய முகத்தின் தசைகள் கழன்று விழுவதும், குடல்கள் கறிந்து கண்ட துண் மாக்கப் பட்டு, பின் துவாரத்தால் வெளிப்படுகின்றன. அவர்கள் கள்ளு, சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களை உபயோகித்தவர்கள்.

இன்னும் சிலர் தேகமும், முகங்களும் பன்றிகளைப் போன்றிருக்கின்றனர். இவர்களின் இறைச்சிகளை நரகத்தின் பாம்பு, தேள்கள் கொத்திப் பிடுங்கி தின்கின்றன. அவர்கள் பெருந்தொடக்கை விட்டு சுத்தமாகாமலும் குளிக்காமலும் இருந்தவர்கள். அதன் பின் ஜிப்ரீலை நோக்கி இதுவரையில் பார்த்தது போதுமென்றார்கள். உடனே மாலிக் நரகத்தின் வாயிலை அடைத்து விட்டார். பின்பு அல்லாஹ் தஆலாவின் புறத்தால் முஹம்மதே ! உம்முடைய சமூகத்தினரை இத்தகைய கொடிய வேதனையிற் சிக்குண்டு வருந்தாமல் தப்பித்துக் கொள்ளும்படி அச்சமுறுத்துமென திருவுளம் வந்தது. அல்லாஹ் தஆலா அந்நரக வேதனையை விட்டும் நம்மைக் காப்பாற்றியருள்வானாக !

அப்பால் நாயகமவர்கள் சுவர்க்கத்திற்கு போய் சேர்ந்து வாயலைத் தட்ட, சுவர்க்கதின் அதிபராகிய ரிழ்வானென்னும் மலக்கு வந்து கதவை திறந்து தங்களுக்கே சுபசோபனம், நன்மாராயம் நற்சுக வாழ்வு அல்லாஹ் தஆலா தங்களுக்கு தனது சமீப சாயுட்சயத்தை அருள்புரிவானாக வென்ற உபசார வாக்கியங்களோடு வெகு குதூகலமாய் நல்வரவேற்றார். இனி சுவர்க்கத்தின் பூமியானது வெற்றி பாலங்களாலும், அதன் தோப்புக்கள் வெண்முத்தினாலும், மலைகள் அம்பரினாலும், கோபுரங்கள் சிவந்த மாணிக்கத்தாலும், மாட மண்டபங்கள் பொன், வெள்ளியினாலும், அதன் மணல் புற்பட முதலிய விருட்சாதிகளும், கஸ்தூரி குங்குமத்தாலும் அமைக்கப் பட்டிருந்தன. ஜிப்ரீல் நாயகமவர்களை உள்ளே அழைத்துச் சென்றார்.

இருவரும் அதன் நளின சிங்கார பூங்கா வனங்களில் வெகு சல்லாபமாக உல்லாச, ஒய்யார திருநடனமுலாவி வந்தனர். அவ்விடத்தில் கலங்கமற்ற நீராறு குடிப்பவருக்கு ருசிகரமான மதுவாறு, சுவை மாறாத பாலாறு, கலப்பற்ற தெளிவான தேனாறு, என நான்கு நதிகளிலொழித்து பாய்வதை கண்டார்கள். அந்த நதிகளினோரங்களில் பசும்பொன், வெள்ளியினாலாகிய பல குடிசைகளும், கூடாரங்களுமிருந்தன. அவைகளில் சுவர்க்கப் பதியின் "ஹுருல்ஈன்" தேவ கன்னிகைகளும் இளம் பிறைபோன்ற அழகு ஜொலிக்கத் தக்க சொகுசான, முக வசீகரத்துடைய ஆண்

குழந்தைகளும் இருந்தனர். பின்பு இன்னுமொரு மகா வலுப்பமான பாரிய நதியை தரிசித்தார்கள்.

அதற்கு "ஹவ்லுல் கவ்தர்" என நாமம் சொல்லப்படும். அல்லாஹ் தஆலா அதை மஹ்ஷர் மறுமையில் நபி நாயகம் அவர்களுக்கு நன்கொடை அருளியிருக்கிறான். அந்நதியின் நான்கு பாரிசங்களிலும், வெண்முத்தால் பல குடிசைகளும், பச்சை மரகதத்தினால் கூடாரங்களுமுண்டு. அதன் சுற்று தோவளங்கள், சுகந்த கஸ்தூரியினாலும், அதன் சரளகற்கள் சிவந்த மாணிக்கம் முதலிய இரத்தினங்களாகவும் இருக்கின்றன. ஒவ்வோர் கூடாரத்திற்கும் நான்கு வாயல்களுண்டு. ஒவ்வொரு வாயலிலும் வெண்முத்தினாலொரு விருட்சமுண்டு. அதன் கொம்புகள், பொன் வெள்ளியினாலும், இலைகள் கனக புஷ்பராகத்தாலுமாகும். அதன் புஷ்பங்கள் சந்திரனிலும் அழகு. கனிகள் பனியிலும் வெண்மை. தேனினும் இனிமை. வெண்ணெயினும் நொன்மை.

அந்நதிக்கரையில் மழைத்துளிகளிலும், அதிகமாகிய கெண்டிகள், குவளை, கூஜாக்களும், ஆகாய நட்சத்திரங்களின் எண்ணிக்கைக்கு கலசங்களும் வைக்கப்பட்டிருந்தன. எவனொருவன் அதிலிருந்து ஒரு மிடர் குடிப்பானாயின் அதன் பின்னால் எக்காலமும் அவன் தாகிக்கப் போறதில்லை. இன்னுமதில் வெறொரு அருவியும், பிறந்து ஒளிக்கக் கண்டார்கள். அதன் பேர் ரஹ்மத் எனப்படும். அவ்விரு நதிகளிலுமிருந்தும் நபி நாயகமவர்கள் குளித்தும், குடித்தும் சுத்தமானார்கள். ஆகவே அல்லாஹ்தஆலா அவர்களின் முன்பின்னோர்யாவரின் பாவங்களை பொருத்தான். இன்னும் சுவர்க்கத்தில் பற்பல நூதன சம்பத்துக்கள் பௌஜ் பாக்கியங்களிலும், செல்வச் சிறப்புகளிலும் மனிதரின் கண்களாற் காணவொண்ணாத, காதுகளால் கேட்க முடியாத, மனதுகளால் நினைக்க முடியாத அத்தனை வகை வகையான அற்புதங்களையும், தொகை, தொகையான அதிசயங்களையும் கண்ணாற்கண்டு களித்து, அதியந்த பரமானந்தமடைந்தவர்களாய், உன்னுடைய ஆண்டவனாகிய அல்லாஹ் தஆலாவுக்கே அளவற்ற மட்டராத புகழும், புகட்சியுமென்று துதிக் கூறி, நன்றி செலுத்தினார்கள். ஆண்டவனே ! அவர்கள் மீது ஸலவாத் ஸலாம் சொல்வாயாக!

اَلصَّلٰوةُ عَلَى النَّبِيِّ الْحَرَمِيِّ ، وَالسَّلَامُ عَلٰى هٰدِي الْاُمَمِ

اَلْاِمَامُ الْحَقُّ بِدِيْنِ هُدًى ، لِتَمَامِ الْخَلْقِ مِنَ النَّسَمِ

قُطْبُ الْاَفْلَاكِ لَمَا خُلِقَتْ ، لَوْلَاهُ وَاَمْلَاكُ الْعِظَمِ

فَالْعَرْشُ مَعَ الْكُرْسِيِّ لَهٗ ، خُلِقَا وَاللَّوْحُ مَعَ الْقَلَمِ

غَوْثُ الثَّقَلَيْنِ وَغَيْثُهُمَا ، فَرْدٌ عِنْدَ الْفَرْدِ الْحَكَمِ

اَلرُّسُلُ مَعَ الْمَلَاِ الْاَعْلٰى ، فَبِحِيْطَتِهٖ وَمِنَ الْخَدَمِ

طَلَعَتْ اَنْوَارُ مُقَدَّسِهٖ ، بِمَنَارَةِ اَسْرَارِ الْقِدَمِ

وَزَهَتْ اٰيَاتُ طَوَالِعِهٖ ، بِمَنَصَّةِ رَايَاتِ الْعَلَمِ

نُسِخَتْ بِنُصُوْصِ شَرِيْعَتِهٖ ، شِرْعَةُ الْكُفَّارِ مَعَ الصَّنَمِ

وَمُحِتْ سُبُحَاتُ جَلَالَتِهٖ ، صَفَحَاتُ الشِّرْكِ مِنَ الرَّقَمِ

وَسُعُوْدُ مُحَيَّاهُ انْبَلَجَتْ ، فَابْتَعَدَتْ نَحِصَاتُ الظُّلَمِ

وَخَسَا اِبْلِيْسُ وَحَشَمَتُهٗ ، بِثُبُوْرِ الْوَيْلِ مَعَ النَّدَمِ

وَلَصُدَّ مَصَاعِدُهُمْ لِسَمَا ، رَجْمًا بِالْقَبَسِ مِنَ النُّجُمِ

فِيْهِ سُدْنَا الْاَقْوَامَ عُلًا ، وَبِهٖ كُنَّا خَيْرَ الْاُمَمِ

رَبِّ صَلِّ عَلَيْهِ وَعِتْرَتِهٖ ، وَجَمِيْعِ الْاُمَّةِ كُلِّهِمِ

14. பைத்தின் உரை

1) சங்கையாகிய ஹரமென்னும் கஃபதுல்லாவின் நபி மீது ஸலவாத் உண்டாகுக. சமூகத்தினர்களை நேர்வழிக் காட்டுகிற நாயகர் மீது ஸலாமுண்டாகுக.

2) அவர்கள் சன்மார்க்கத்தில் சகல படைப்புகளுக்கும் உண்மையான முன்னிலையானவர்கள்.

3) வானலோகத்தில் நடுநாயகமானவர்கள். தாங்களே இல்லாதிருக்கில் வான்களும், வலுப்பமான மலாயிக்கத்துகளும், படைக்கப்படுவதில்லை.

4) அர்ஷ், குர்ஸீ, லவ்ஹு, கலம் முதலியனவெல்லாம் தங்கள் பொருட்டே சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன.

5) தாங்களே மனு, ஜின்களுக்கு இரட்சகரும், கருணைப் பொழியும், மழைமாரியும், தனித்த நீதி, நெறி நாயகனிடத்தில் தனி நாயகமுமாவார்.

6) ரசூல்மாரும், மேலான தேவர்களும், நம் நாயகரின் வரையறை நிபந்தனைக்குட்பட்டு கைங்கரியம் செய்யும் ஊழியரும், தொண்டர்களுமாவார்.

7) தங்கள் பரிசுத்த ஒளிகள் பூர்வீக அகமியக் கோபுரத்தில் உதயமாகி ஜோதிமயமாய் ஜொலித்துக் கொண்டிருக்கின்றன.

8) தங்களின் பிரகாசிக்கத்தக்க திருஷ்டாந்தங்கள் மலைமேல் ஸ்தம்பத்தின் துவஜங்களாகிய வான மண்டபத்தில் பற்றி இலங்குகின்றன.

9) தங்கள் சன்மார்க்க திட்டவட்டமான சட்ட திட்டங்களால் குப்பார்களின் மார்க்கமும், விக்கிரஹ ஆராதனையும், மாற்றப்பட்டுப் போயின.

10) தங்கள் மாட்சிமிக்க ஜக ஜோதிகள் ஷிர்க்கெனும் பலகைகளை அச்சமற்ற அழித்தொழித்து விட்டன.

11) தங்கள் திருமுக சகுண நட்சத்திரம் வெளியானதும், துற்குறியின் இருட்கள் துலைந்து போயின.

12) இப்லீசும் தனது ஜனக்கட்டும், கைசேத நாசக் கூக்குரலிட்டு கெட்டழிந்து போயினர்.

13) அந்த ஷைத்தான்கள் வானுலகேரும் வழிகள், நட்சத்திரத்தின் எரி கொல்லிகளால் எரியப்பட்டு தொடுக்கப்பட்டன.

14) அவர்கள் பொருட்டே நாம் ஏனைய சமூகத்தினருக்கு மேலான நாயகங்களானோம். அவர்களைக் கொண்டே ஹைரான உம்மத்துக்களானோம்.

15) ஆண்டவனே ! அவர்கள் மீதும், அவர்களின் குடும்பத்தினர்மீதும், உம்மத்துக்கள் அனைவர் மீதும் நல்லனுக்கிரகம் புரிந்தருள்வாயாக !

ثُمَّ سَارَ مَا شَاءَ اللّٰهُ مِنَ الْجَنَّةِ حَتّٰى وَصَلَ اِلٰى سِدْرَةِ الْمُنْتَهٰى، فَاِذَا هِيَ الشَّجَرَةُ الْعُظْمٰى تَحْتَ الْكُرْسِيِّ الْمُلْتَصِقَةُ بِالْعَرْشِ، لَهَا اَلْفُ اَلْفِ غُصْنٍ وَّاَلْفُ اَلْفِ وَرَقٍ مُّنْتَشِرَةٌ اِلَى الْفَرْشِ، وَلَهَا اَثْمَارٌ لَوِ اجْتَمَعَتِ الْخَلَائِقُ عَلٰى ثَمَرَةٍ، لَبَقِيَتْ بِاِذْنِ اللّٰهِ وَالْقُدْرَةِ وَغَشِيَهَا مَا غَشِيَ مِنْ اَنْوَارِ الْجَلَالَاتِ، وَاَسْرَارِ التَّجَلِّيَاتِ، وَوَجَدَ مِحْرَابَ جِبْرِيْلَ هُنَالِكَ، وَاجْتَمَعَتْ فِيْهَا الْمَلَائِكُ، وَاَذَّنَ جِبْرِيْلُ وَاَقَامَ الصَّلٰوةَ، وَقَدَّمَهُ فَصَلّٰى بِهِمْ رَكْعَتَيْنِ تَحِيَّةً لِّلّٰهِ، ثُمَّ انْطَلَقَ بِهٖ جِبْرِيْلُ اِلَى الْحِجَابِ الْاَكْبَرِ، فَقَالَ يَا جِبْرِيْلُ مَا هٰذَا الْمَقَامُ، فَقَالَ وَاللّٰهِ مَا رَاَيْتُهُ قَبْلَ سَاعَتِيْ هٰذِهٖ مِنَ الدَّوَامِ فَتَقَدَّمَ اِلَيْهِ فَالْتَفَتَ فَلَمْ يَرَ جِبْرِيْلَ وَرَاهُ، فَتَعَاظَمَهُ ذٰلِكَ وَاسْتَوْحَشَ حَشَاهُ، فَنَادٰى يَا اَخِيْ جِبْرِيْلُ اَفِيْ مِثْلِ هٰذَا الْمَكَانِ يُفَارِقُ الْاَخُ اَخَاهُ، اَوْ يَتَخَلَّفُ الْخَلِيْلُ عَنِ الْخَلِيْلِ، فَنَادٰى يَا مُحَمَّدُ وَالَّذِيْ

بَعَثَكَ بِالْحَقِّ نَبِيًّا، لَوْ تَجَاوَزْتُ أُنْمُلَةً لَاحْتَرَقْتُ
مِنْ نُوْرِ رَبِّيْ، وَلَمْ اُطِقْ رُقِيًّا، فَلَمَّا اسْتَعْظَمَ وَحْشَتَهُ
بِفِرَاقِهٖ، ضَمَّهُ وَكَنَفَهُ بِجَنَاحِهٖ، وَقَالَ يَا مُحَمَّدُ لَا تَخَفْ
اِنَّمَا يُعَرِّجُ بِكَ الرَّبُّ الصَّمَدُ وَهُوَ يُكْرِمُكَ وَيُعَظِّمُكَ
وَيَرْفَعُ قَدْرَكَ، عَلٰى جَمِيْعِ الْاَنْبِيَآءِ وَالْمُرْسَلِيْنَ،
وَيَجْعَلُكَ رَحْمَةً لِّلْعَالَمِيْنَ، فَعِنْدَ ذٰلِكَ سَكَنَ
رَوْعُهُ، وَهَدَأَ خَاطِرُهُ، فَإِذَا ابْتِدَاءٌ مِّنْ قِبَلِ اللّٰهِ
الْعَظِيْمِ، يَا جِبْرِيْلُ زُجَّ حَبِيْبِيَ الْكَرِيْمَ، فَاَخَذَ جِبْرِيْلُ
بِعَضُدِهٖ، وَزَجَّهُ زَجَّةً فِيْ بَحْرِ النُّوْرِ بِيَدِهٖ، فَخَرَقَ
بِذَالِكَ سَبْعِيْنَ اَلْفَ حِجَابٍ كُلُّ حِجَابٍ خَمْسُ مِائَةِ
عَامٍ فِيْ بُعْدِهٖ، فَإِذَا قُدِّمَ لَهُ رَفْرَفٌ اَخْضَرُ مِنْ هُنَالِكَ
تَحْمِلُهُ اَرْبَعَةٌ مِّنْ عُظَمَاءِ الْمَلَائِكِ، فَاسْتَوٰى عَلَيْهِ
كَالْعُرْسِ، فَسَارَ بِهٖ كَنَشَابَةٍ مِّنْ كَبِدِ الْقَوْسِ، حَتّٰى
اَنْتَهٰى اِلٰى بَحْرِ النُّوْرِ الْاَبْيَضِ، ثُمَّ اَخْرَجَهُ مِنْهُ اِلٰى
بَحْرٍ اَحْمَرَ، ثُمَّ اِلٰى بَحْرٍ اَصْفَرَ، ثُمَّ اِلٰى بَحْرٍ اَسْوَدَ،

فَخَرَّ عَلَى الرَّفْرَفِ وَسَجَدَ وَنَادٰى يَا غِيَاثَ الْمُسْتَغِيْثِيْنَ
وَيَا صَرِيْخَ الْمُسْتَصْرِخِيْنَ، اٰنِسْ وَحْشَتِیْ، وَاٰمِنْ
رَوْعَتِیْ، فَمَا تَمَّ الدُّعَاءُ، اِلَّا سَمِعَ مِنْ سَاحِلِهِ النِّدَاءَ،
اَقْبِلْ يَا مُحَمَّدُ فَاِذَا هُوَ مِيْكَائِيْلُ وَقَدِ اشْتَغَلَ بِمِكْيَالِ
الْبِحَارِ، وَاِنْزَالِ الْاَمْطَارِ، فِیْ سَائِرِ الْاَقْطَارِ، فَسَلَّمَ
عَلَيْهِ فَرَدَّ السَّلَامَ بِمَزِيْدِ التَّحِيَّةِ وَالْاِحْتِرَامِ، وَقَالَ
هٰذَا مَقَامِیْ لَوْ جَاوَزْتُهٗ لَخَرَمْتُ اُبْرَةً، لَاحْتَرَقْتُ
بِنُوْرِ الْقُدْرَةِ، ثُمَّ اخْتَرَقَ صُفُوْفَ الْمَلٰئِكَةِ الْمُقَرَّبِيْنَ
حَتّٰى اِلٰى اِسْرَافِيْلُ، فَسَلَّمَ عَلَيْهِ فَرَدَّ التَّحِيَّةَ بِالْاِكْرَامِ
وَالتَّبْجِيْلِ، وَقَالَ هٰذَا مَقَامِیْ لَوْ تَقَدَّمْتُ قَدْرَ
شِبْرٍ، لَاحْتَرَقْتُ بِنُوْرِ الْقَهْرِ، وَقَدْ حَمَلَ الْعَرْشَ
بِكَاهِلِهٖ، وَالْتَقَمَ الصُّوْرَ فِیْ فَمِهٖ، وَاللَّوْحُ بَيْنَ عَيْنَيْهِ،
وَهُوَ يُدِيْمُ النَّظَرَ اِلَيْهِ، وَقَالَ يَا مُحَمَّدُ اَمَامَكَ،
وَارْفَعْ رَأْسَكَ، فَرَفَعَ فَاِذَا بِعَرْشِ رَبِّ الْعَالَمِيْنَ،
اَعْظَمِ كُلِّ شَيْءٍ خَلَقَهُ اللّٰهُ اَحْسَنُ الْخَالِقِيْنَ ۝

15. ஹிகாயத்தின் வரலாறு

அப்பால் அல்லாஹுதஆலா நாடிய அளவு நடந்து சுவர்க்கத்தின் கடைசி தீர்ச்சையான எல்லையாகிய மகாம் "சித்ரத்துல் முன்தஹா" வென்னும் இலந்தைமரம் வரையில் சேர்ந்தார்கள். அந்த மரமானது மகா வலுப்பம் தங்கியது. குர்ஸியின் கீழிருந்து அர்ஸென்னும் சுவனலோகத்தையளா வியதாய் இருக்கிறது. அதற்கு ஆயிரமாயிரம் பனர்களும், ஆயிரமாயிரம் இலைகளும், விரிந்து பாதாளம் வரையில் பரந்திருக்கின்றன.

இன்னும் அதற்கு அநேக கனிகளுமுண்டு. அதிலொரு கனியின் பேரில் எல்லா படைப்புகளும் கூடி புசித்த போதிலும் அல்லாஹுதஆலாவின் உத்திரவினாலும், தத்துவத்தினாலும், ஆர்ப்பழுவும் குறையாது மிய்ந்திருக்கும். அதை பற்பல மகத்துவ ஒளிகளும், பரஞ்ஜோதி அகமிய திருஷ்டாந்தங்களும் பொதிந்திருக்கின்றன.

அவ்விடத்தில் ஜிப்ரீலெனும் தேவர் கோனுக்குரிய மிஹ்ராப் ஸ்தானத்தை கண்டார்கள். சகல அமரர்களும் அதில் சேகரமாயினர். ஜிப்ரீல் தொழுகைக்காக பாங்கும், இகாமத்தும் சொல்லி நாயகத்தை முற்படுத்தினார்கள். தாங்கள் அவர்களுக்கு முன்னிலையாக நின்று அல்லாஹ் தஆலாவுக்காக இரண்டு ரக்அத்து தொழுதார்கள். பின்பு ஜிப்ரீல் நாயகத்தை அழைத்துக் கொண்டு "ஹிஜாபுல் அக்பர்" என்னும் பெரிய திரையளவில் சென்றார் நாயகம் ஜிப்ரீலே ! இதென்ன மகாம் ஸ்தாபனமெனக் கேட்க அவர் அல்லாஹ்வின் மீது சத்தியமாக ! இந்த ஸ்தானத்தை இதற்கு முன் எக்காலத்திலும் நான் கண்டேறியேனென்றார்.

நாயகம் அதனருகில் முன்னோக்கிச் சென்றதும், தங்களுக்குப் பின்னால் ஜிப்ரீலைக் காணவில்லை. அதனால் தங்களுக்கு கஷ்டம் ஏற்பட்டு, மனது திகிலடைந்து, எனது சகோதரரே ! ஜிப்ரீலே ! இவ்விதமான விடத்திலா ஒரு சகோதரன் தன் சகோதரனையும் ஒரு துணைவன் தன் துணைவனையும் விட்டு பிரிவதெனக் கூறினார்கள்.

ஜிப்ரீல் முஹம்மதே ! உம்மை ஹக்கு உண்மையைக் கொண்டு நபியாக அனுப்பின நாயன் பேரில் சத்தியமாக ! இவ்விடத்தை விட்டு ஓர் அங்குலமாவது நான் கடந்தேனாகில் என்னுடைய ஆண்டவனின் ஒளியினால் கறிந்து போயிடுவேன். மேலே ஏறுவதற்கு சக்திப் பெற மாட்டேனென்றார். நாயகம் ஜிப்ரீலை ! பிரிவதாலான வெருட்சி தங்களுக்கு அதிகரிக்கவே ஜிப்ரீல் தமது அழகிய இறகினால், நாயகத்தை நெஞ்சுடன் சேர்த்து கட்டியணைத்து முஹம்மதே ! பயப்படாதீர். உம்மைக் கொண்டு ஏற்றி செல்பவன், பரிபூரண காருண்ய நாயகன் அவனே உம்மை சங்கையாக்குகிறான். அவனே உம்மை மகிமைப் படுத்துகிறான். உம்முடைய தகுதியை எல்லா நபிமார்களுக்கு மேலால் கண்ணியப்படுத்துகிறேன்.

இன்னும் உம்மை உலகத்தாருக்கு கருணையாக்கியிருக்கிறான் எனக் கூறினார். உடனே தங்கள் திடுக்கமும் அடங்கி, மனதும் சாந்தமாயிற்று. அந்நேரம் அல்லாஹ் தஆலாவின் சன்னிதியிலிருந்து ஜிப்ரிலே ! சங்கையாகிய எனது நண்பரே ! வாருங்கள் என ஒரு திருவுளம் வெளியாயிற்று உடனே ஜிப்ரில் நாயகத்தின் திருக்கரத்தைப் பிடித்து, அய்ப் மறைவான ஒளியின் கடலில் ஒரேடியாய் அமிழ்த்தினார். அதன் பயனாக நாயகம் எழுபதுனாயிரம் திரைகளை ஊருடுவிச் சென்றார்கள். ஒவ்வொரு திரையும் ஐநூறு வருடத் தொலையாகும்.

அந்நேரத்தில் அவ்விடம் ரஃப்ரஃபெனும் ஒளிப் பிரகாசிக்கத்தக்க பசும் பொருட்டில் வெளியாயிற்று. அதை வலுப்பமாகிய நான்கு பாரிய மலக்குகள் சுமந்து வந்து நாயகத்தின் சமூகத்தில் வைக்கவே அவர்கள் அதில் செவ்வையாய் உட்கார்ந்துக் கொண்டார்கள். அது அவர்களைச் சுமந்துக் கொண்டு அம்புவிசையாய்ப் பறந்துச் சென்று, வெண்மையான ஒளியின் கடலிற் கொண்டு சேர்த்தது. பின்பு அங்கிருந்து சிவந்த கடலிலும் பின்பு மஞ்சள் கடலிலும் பின்பு கருங்கடலிலும் கொண்டு சேர்த்தது. அப்பொழுது நாயகம் அத்தொட்டிலில் விழுந்து ஸுஜூது சாஸ்டாங்கம் செய்தவர்களாய் ஆண்டவனே ! இரட்சிப்பு தேடினோர்க்கு இரட்சகனே ! கார்மானம்

கேட்போரின் காவலனே ! எனது விருட்சியை ஆதரித்தருள். திடுக்கத்தை அகற்றியருள் என பிரார்த்தனை செய்யவே அக்கரையிலிருந்து மறுமொழியாக முஹம்மதே ! முன் செல்லுமென ஒரு சப்தம் கேட்டது. அங்கு பார்க்கவே மீக்காயிலென்னும் அமரரை கண்ணுற்றார்கள். அவர் கடலை அளந்து சகல கோணங்களிலும், மழை வரிசிப்பதுக் கொண்டு பராக்குப் பூண்டவராயிருக்கிறார்.

அவர் மீது ஸலாமுரைக்கவே அவர் மிக மரியாதை செய்து ஸலாமுக்கு பிரதிக் கூறி, இதுவே எனக்கு குறிப்பிட்ட ஸ்தானம் இங்கிருந்து ஓர் ஊசித்துவாரத்தின் அளவேனும் நான் கடப்பின் குத்ரத்து தத்துவத்தினொளியால் கரிந்துப் போவேனன்றார். பின்பு நாயகம் மகத்தான முகர்ரபாகிய மலக்குகளின் அனந்தம் அணிவரிசைகளை ஊடுருவிச் சென்று இஸ்ராபீல் அலைஹிஸ்ஸலாமை கண்டு அவருக்கு ஸலாம் கூறவே, அவர் வெகு சங்கையோடு ஜவாபுரைத்து இதுவே எனக்கு குறிப்பிட்ட மகாம் ஸ்தலம் இதைவிட்டு ஒரு ஒட்டை (ஜாண்) யாவது நான் முந்துவேனாயின் மகா வலுப்பத்தின் ஒளியினால் கறிந்துப் போவேனென்றார்.

அவர் தமது தோள் புயத்தால் அர்ஷை சுமந்துக் கொண்டு சூர் என்னும் குழலை வாயில் கவ்வினவராய் அவருடைய இரு கண்களுக்குமிடையிலிருக்கும் "லவ்ஹுல் மஹ்பூல்" என்னும் பலகையை ஓயாது கூர்ந்து நோக்கியவராயிருக்கிறார். அவர் முஹம்மதே ! முன்னுக்கு போய் நும் தலையை உயர்த்துமென்றார் நாயகம் உயர்த்திப் பார்க்கவே சகல சிருஷ்டிகளிலும் மகா அழகான உலகத்தாருக்கு நாயகனான அல்லாஹ் தஆலா படைத்த வஸ்துக்களிலெல்லாம் மகா வலுப்பமான தெய்வீக அரசியல் குழு அர்ஷை தரிசித்தார்கள். ஆண்டவனே ! அவர்கள் மீது ஸலவாத்து, ஸலாம் சொல்வாயாக !

اَلْحَمْدُ لِمَوْلَی الصَّمَدِ الْفَرْدِ تَعَالٰی
وَالشُّکْرُ دَوَامًا لَّہٗ قَوْلًا وَّ فِعَالًا

۲ مَنْ عَمَّ عَلَی الْخَلْقِ نَوَالًا وَّکَمَالًا
بِالْفَیْضِ وَ بِالْفَضْلِ مِنَ النِّعَمِ وَ اٰلَا

۳ قَدْ خَصَّ مِنَ الْخَلْقِ کَمَا اخْتَارَ رِجَالًا
وَقَدَّرَ لِلْکُلِّ مَقَامًا وَّ مَآلًا

۴ وَ فَضَّلَ بَعْضًا عَلٰی بَعْضٍ بِخِصَالٍ
فِی الرُّسُلِ بِمَنْ شَاءَ کَمَا قَالَ تَعَالٰی

۵ فَالْبَعْضُ صَفِیًّا وَّکَذَا الْبَعْضَ نَجِیًّا
وَالْبَعْضَ خَلِیْلًا وَّ کَلِیْمًا اِکْمَالًا

۶ بَلْ اَحْمَدَ سَمَّاہُ حَبِیْبًا فَسَمَاھُمْ
مِنْ کُلِّ اَسَامٍ وَّ عَلَاھُمْ مُفْضَالًا

۷ وَاللہِ وَ اِنْ رُسُلَہٗ نَادٰی بِسُمَاھُمْ
لَا اَحْمَدَ نَادٰی بِسُمَاہُ اِجْلَالًا

۸ فَالطُّوْرُ لِمُوْسٰی وَلِعِیْسٰی فَسَمَاءٌ

وَالْعَرْشُ لِطَاهَا فَمَقَامُ وَّمَجَالاَ

٩ وَالْعَرْشُ وَالْكُرْسِيُّ لَهٗ تَحْتَ خُطَاهُ

وَالشَّمْسُ وَذَا الْبَدْرُ مِنْ اَضْوَاهُ تَلَالَا

١٠ فَكَيْفَ وَذَا الرُّوْحُ لَدَى السِّدْرَةِ قَالَا

لَاطَاقَةَ لِيْ مَعَكَ وَلَا قِيْلَ وَقَالَا

١١ ثُمَّ اخْتَرَقَ الْحُجُبَ مِنَ اَنْوَارِ جَلَالِ

حَتّٰى بَلَغَ الْحَضْرَةَ عِزًّا وَّجَلَالَا

١٢ مِنْ حَضْرَةِ قُدْسٍ فَتَدَلّٰى وَلِقَابَ

قَوْسَيْنِ اَوْ اَدْنٰى دَنَا قُرْبًا وَّوِصَالَا

١٣ فَالرَّبُّ لَهٗ قَالَ تَقَدَّمْ وَلَا تَخَفْ

وَتَدَلَّ حَبِيْبِيْ لِجَنَابِيْ وَتَعَالَا

١٤ صَلّٰى عَلَيْهِ اللّٰهُ صَلٰوةً تَغْشَاهُ

وَالْاٰلَ وَالْاَصْحَابَ وَاَهْلًا وَّعِيَالَا

١٥ وَبِخَيْرِ سَلَامٍ لِّمُحَيَّاهُ نُحَيِّيْ

كَيْمَا نَرٰى مِنْ وَجْهِهٖ نُوْرًا وَّجَمَالَا

16. ஸைபத்தின் உரை

1. அதி மேலான, தனித்த, பரிபூரண நாயகனுக்கே எல்லாப் புகழுமுண்டாகுக ! இன்னும் சொல், செயல்களால் ஆகிய நன்றியும், துதியும் சதா அவனுக்கே உரியன.

2. அவன் ஏகமயமாய் சர்வ சிருஷ்டிகளின் பேரிலும், பற்பல நிஃமத்துக்களின் வரிசைப் பொலிவினால் நிரம்ப கொடை கொடுத்தான்.

3. அவன் ஹல்க்குகளிலிருந்து சிலபுன்ளிய புருஷர்களை தேர்ந்தெடுத்து ஒவ்வொருவருக்கும் தானத்தையும் பதவியையும் நிர்ணயித்தான்.

4. அவன் திருக்குர்ஆனில் திருவுளமானது போல், ரசூல்மாரின் சிலரைசிலர் பேரில் சிற்சில நல்லம்சங்களில் தான் நாடிய படி வரிசையாக்கினான்

5. சிலரை சபிய்யாகவும், சிலை நஜிய்யாகவும் இன்னும் சிற்சிலரை கலீலென்றும், கலீமென்றும், தெரிந்து நிரப்பமாக்கினான்.

6. ஆயினும் நமது நாயகம் அஹ்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமுக்கு ஹபீபென்னும் திருநாமத்தைச் சூட்டியதால் எல்லா பெயரினும் மேலிட்டு, வரிசையிலும் மிகைத்துக் கொண்டார்கள்.

7. அல்லாஹ்வின் ஆணை ! அவன் தனது ரசூல்மாரை அவரவரின் பெயரைச்சொல்லி அழைத்திருப்பினும் நம் அஹ்மது நாயகத்தை கண்ணியப் படுத்தியதற்காக அவர்களின் பேரைச் சொல்லி அழைக்கவில்லை.

8. இனி தூர்ஸீனா மலையானது மூஸாவுக்கும், வானம் ஈஸாவுக்கும், அர்ஷானது நமது தாஹா நபி அவர்களுக்கு தானமும், தஹ்துமாகும்,

9.அர்ஷும் , குர்ஸியும் தங்கள் திருவடியின் கீழும் சூரியனும், சந்திரனும் ஒளியின் பிரபைகளாலும் இலங்கித் துலங்கி நிற்கின்றன.

10. ஏனென்றால் இதோ ஜிப்ரீலானவர் "சித்ரத்துல் முன்தஹா" வில் தரித்தவராய் தங்களுடன் செல்ல எனக்கு கிஞ்சித்தும் சக்தியில்லை யெனக் கூறினார்.

11. பின்னர் நாயகம் மகத்தான ஒளிகளின் திரைகளை கீறி, கிழித்தவர்களாய் ஹக்கு தஆலாவின் மகிமை மாட்சிமைக்குரிய சன்னிதானமளவும் எட்டினார்கள்.

12. அதாவது ஹழ்ரத்துல் குத்ஸென்னும் பரிசுத்த சன்னிதியிலிருந்து மிக நெருங்கிய "காபகவ்ஸைனி" அவ் அத்னா" வென்னும் சமீப சாயுட்சிய ஸ்தானத்தில் முடுகி, சமீபித்து சேர்ந்தார்கள்.

13. ஆகவே ஹக்கு சுப்ஹானஹூ வ தஆலா அவர்களை நோக்கி முந்தும், பயப்படாதீர். எனது சமூகம் வருக ! வருக ! ஹபீபே ! அடுத்து வாரும் என கூறியழைத்தான்.

14. அல்லாஹ்தஆலா அந்நாயகர் மீது தங்களையும், தங்கள் குடும்ப சந்தான சகாக்களையும், சமூக சமேதரையும், பொதியத்தக்க, ஸலவாத்து, ஸலாமை சொரிவாயாக !

15. இன்னும் நாமும் அந்நாயகரின் திருமுக அலங்கார ஒளியை தரிசிப்பதன் பொருட்டு, அத்திருமுக வதனத்திற்கு ஹைரான ஸலாமை காணிக்கை வைப்போமாக !

ثُمَّ لَمَّا وَصَلَ إِلَى الْعَرْشِ نَظَرَ فَإِذَا جَمِيعُ مَا فِي
السَّمٰوَاتِ وَالْأَرَضِيْنَ ، كَحَلْقَةٍ مُّلْقَاةٍ فِي الْمَيَادِيْنَ
قَدْ خَلَقَ اللّٰهُ الْعَرْشَ عَلَى قَوَائِمَ ثَلٰثِمِائَةٍ وَّسِتِّيْنَ
كُلُّ قَائِمَةٍ مِّثْلُ الدُّنْيَا فِي دَوْرِهَا ، بَيْنَ كُلِّ قَائِمَةٍ
خَمْسُ مِائَةِ عَامٍ فِي سَيْرِهَا ، وَيُكْسَى الْعَرْشُ فِي
كُلِّ يَوْمٍ وَّلَيْلَةٍ ، بِسَبْعِيْنَ أَلْفَ لَوْنٍ مِّنَ الْحُلَّةِ ، وَ
وَجَدَ فِيْهَا حَمَلَةَ الْعَرْشِ يَسَعُ كَفُّ أَحَدِهِمُ السَّمٰوٰتِ

وَالْاَرَضِيْنَ فَسَلَّمَ عَلَيْهِمْ تَحِيَّةً فَرَدُّوْا سَلَامَهُ
بِالتَّهْنِيَةِ، وَسَمِعَ نِدَاءً مِّنْ فَوْقِ الْعَرْشِ، فَإِذَا
هُوَ مَلَكٌ يَتَلَمَّعُ مِنْ نُوْرِهِ الْعَرْشِ، اِلَى الْفَرْشِ
وَمَعَهُ سَبْعُوْنَ اَلْفِ مَلَكٍ عَلٰى هَيْئَتِهِ فَسَلَّمَ
عَلَيْهِ، فَرَدَّ السَّلَامَ وَقَدِ اعْتَنَقَهُ بِعَضُدَيْهِ،
وَقَبَّلَهُ بَيْنَ عَيْنَيْهِ، وَقَالَ سِرْمَعِيْ فَسَارَ مَعَهُمْ
حَتّٰى اخْتَرَقُوْا سَبْعِيْنَ اَلْفِ حِجَابٍ مِّنَ الدُّرَّةِ
وَسَبْعِيْنَ اَلْفِ حِجَابٍ مِّنِ اسْتَبْرَقٍ، وَسَبْعِيْنَ اَلْفِ
حِجَابٍ مِّنَ الْجَوْهَرِ، ثُمَّ انْتَهَوْا اِلٰى حِجَابِ الثَّلْجِ،
ثُمَّ اِلٰى حِجَابِ الْجَلَالِ، ثُمَّ اِلٰى حِجَابِ الْقُدْرَةِ، ثُمَّ
اِلٰى حِجَابِ الْفَرْدَانِيَّةِ، ثُمَّ اِلٰى حِجَابِ الصَّمَدَانِيَّةِ
ثُمَّ اِلٰى حِجَابِ الْعِزِّ، ثُمَّ اِلٰى حِجَابِ الْوَحْدَانِيَّةِ
فَنَظَرَ اِلٰى سَبْعِيْنَ اَلْفِ صَفٍّ مِّنَ الْمَلَائِكَةِ
النُّوْرَانِيَّةِ، لَمْ يَسْمَعْ لَهُمْ حِسًّا وَلَا حَرَكَةً

الرُّوْحَانِيَّةِ، ثُمَّ نَادٰى مُنَادٍ اِرْفَعُوا الْحِجَابَ
الْاَعْظَمْ، فَرُفِعَ الْحِجَابُ بَيْنَهُ وَبَيْنَ مُحَمَّدٍ
صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ، ثُمَّ نُوْدِيَ يَا اَحْمَدُ اَمَامَكْ
اُدْنُ مِنْ رَبِّكَ، فَدَنٰى خُطْوَةً وَّالْخُطْوَةُ خَمْسُ
مِائَةِ عَامٍ، ثُمَّ نُوْدِيَ ثَانِيًا يَا مُحَمَّدُ اُدْنُ مِنَ اللّٰهِ
اِلٰهِكَ، فَدَنٰى خُطْوَةً فَوَقَفَ، فَدَخَلَهُ الرُّعْبُ
وَالْخَوْفُ، ثُمَّ نُوْدِيَ ثَالِثًا يَا خَيْرَ الْخَلْقِ لَا رَوْعَ
وَلَا خَوْفَ، اُدْنُ مِنَ اللّٰهِ عَزَّ وَجَلْ، فَدَنٰى مِنْ رَّبِّهٖ
وَسَيِّدِهِ الْاَجَلْ، ثُمَّ تَدَلّٰى لَهُ قَطْرَةٌ مِّنَ الْعَرْشِ
فَوَقَعَتْ عَلٰى لِسَانِهٖ فَاَطْلَقَ لَهُ اللّٰهُ اللِّسَانْ،
بَعْدَ مَا كَانَ مُتَعَلِّقًا مِنْ هَيْبَةِ الرَّحْمٰنْ، وَشَرَحَ
صَدْرَهُ، وَنَوَّرَ قَلْبَهُ وَعَلَّمَهُ عِلْمَ الْاَوَّلِيْنَ
وَالْاٰخِرِيْنَ، وَجَمَعَ فِيْ قَلْبِهٖ عُلُوْمَ جَمِيْعِ
الْعَالَمِيْنَ ۝ اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَيْهِ ۝

17. ஹிகாயத்தின் வரலாறு

அப்பால் அர்ஷினிடத்தில் சென்று நோக்குகையில் வானம் பூமிகளிலுள்ள வஸ்துக்களடங்கலும் வெட்ட வெளியில் போடப்பட்ட ஓர் மோதிரம் போல் காணப்பட்டன. அல்லாஹ் தஆலா அந்த அர்ஷை முன்னூற்றறுபது தூண்களுடைய தாய் சிருஷ்டித்தான். ஒவ்வொரு தூணும் சுற்றளவில் உலகத்தைப் போன்று ஒவ்வொரு தூணுக்குமிடையில் ஐநூறு வருடத் தொலைத் தூரமுண்டு. அவ்வர்ஷை எல்லா ஒவ்வொரு நாளிலும் எழுபதுனாயிரம் வர்ணங்களுடைய ஆடை ஆபரணங்களால் அலங்கரிக்கப் படுகின்றது.

அங்கு அந்த அர்ஷை சுமந்திருக்கும் எட்டு மலாயிக்கத்துகளையும் தரிசித்தார்கள். அவர்களில் ஒருவருடைய அகங்கையானது வானம், பூமிகளை அடைக்கத்தக்க விசாலமுடையது. அவர்களை நெருங்கிய நாயகம் ஸலாம் சொன்ன போது அவர்கள் மிகுந்த சோபன வாழ்த்துடன் மறுமொழி பகர்ந்தார்கள். பின்பு அந்த அர்ஷுக்கு மேலாலிருந்து ஒரு கூப்பிடும் ஓசைக் கேட்டது. பார்க்கையில் அவர் மகத்தான ஒரு மலக்கு. அவரது ஒலியின் பிரகாசத்தால் அர்ஷ் முதல் பாதாளம் வரையில் இலங்குகின்றன. அவருடன் அவருடைய கோலத்தில் இன்னும் எழுபதுனாயிரம் மலக்குகள் இருந்தனர்.

நாயகம் அவர்மீது ஸலாம் சொல்ல. அவர் ஜவாபு கூறி, நாயகத்தினிரு புயங்களோடு கட்டித் தழுவி, முத்தமிட்டு நாயகமே ! என்னோடு நடங்களென அழைத்தார். நாயகம் அவருடன் நடந்துப் போகையில் வெண்முத்தினால் எழுபதுனாயிரம் திரைகளையும், பசும்பட்டினால் எழுபதுனாயிரம் திரைகளையும், நவரத்தினங்களால் எழுபதுனாயிரம் திரைகளையும் ஊடுருவிச் சென்றார்கள். பின்பு பனிக்கட்டியின் திரைகள் ஜலாலிய்யத் என்னும் மகத்துவ திரைகள், குத்ரத்தென்னும் தத்துவ திரைகள், பர்தானியாத்தென்னும் தனித்துவ திரைகள், சமதானியத் என்னும் பரிபூரண தத்துவ திரைகள் இஜ்ஜத் என்னும் மகிமைத் திரைகள்,

வஹ்தானியத்தென்னும் ஏகாந்தத்துவத்திரைகள் இவ்வண்ணமாக பல்லாயிரம் திரைகளெல்லாம் கடந்து அப்பாலும் ஏகினார்கள். அங்கே ஏகமயமாய் ஜொலித்திலங்கும் "நூரானிய்யத்" என்னும் சுயஞ்ஜோதியின் மலாயிக்கத்துக்கள் எழுபதுனாயிரம் பந்தி, வாசிகளை தரிசித்தார்கள். அவர்களால் ஜீவராசிகளின் யாதொரு உணர்ச்சியாவது, ஊசாட்டமாவது கேளாமல் அடங்கியொடுங் கியிருந்தன. பின்பு ஒரு கூப்பிடுகிறவர் "ஹிஜாபுல் அஃளமென்னும்" மகா வலுப்பத்தின் திரையை உயர்த்துங்களென திருவுளம் பற்றினார்.

உடனே அல்லாஹ் தஆலாவுக்கும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குமிடையில் திரையை நீக்கப்பட்டு அஹ்மதே ! முந்தும், முடுகும் என அழைக்கப்பட்டது. ஒரு அடிமுடுகினார்கள். இந்த ஒரு அடியும் ஐநூறு வருட அடிப்பாடு கொண்டது. பின்பு இரண்டாவது முஹம்மதே உமது நாயன் அல்லாஹ் தஆலாவினிடத்தில் முந்தும் நெருங்குமென கூப்பிடப்படவே ஒரெட்டு முடுகி நிறுத்திக் கொண்டார்கள். தங்களுக்கு பயமும், திடுக்கமும், உதிக்கவே மூன்றாம் முறையும் சிருஷ்டிகளில் நலவானவரே ! திடுக்கம் வேண்டாம். பயமில்லை, சிறப்பும், வலுப்பமும் உள்ள அல்லாஹ் தஆலாவிடத்தில் அடுத்து முடுகி வாருமெனச் சொல்லப்பட்டது. தங்கள் மாட்சிமைக்குரிய நாயனிடம் சமீபித்தார்கள். பின்பு அர்ஷின் ஒளியிலிரு துளியானது நாயகமவர்களை யடுத்து, தங்கள் நாவின் பேரில் விழுந்தது. அல்லாஹ் தஆலா தங்கள் நாவை, அது ரஹ்மானுடைய ஹைபத்து பயபக்தியினால் கொழுகப்பட்டிருக்கையில் கட்டவிழ்த்திட்டான். அவர்களின் நெஞ்சை விரிவாக்கினான். கல்பு, ஹிருதயத்தை வெளிச்சமாக்கினான்.

முன்னுள்ளோர், பின்னுள்ளோருடைய இல்மு அறிவுகளை அவர்கட்கு அறிவித்தான். அவர்களுடைய கல்பில் உலகத்தார் அடங்களுடைய அறிவுகளையெல்லாம் சேகரமாக்கி விட்டான். ஆண்டவனே ! அவர்கள் மீது ஸலவாத்து, ஸலாம் சொல்வாயாக !

١ أَهْلاً بِخَيْرِ الْمُصَلّٰى، أَلَافُ سَعْدٍ وَّسَهْلاً

٢ مَحْبُوْبِ مَوْلَى الْمَوَالِيْ مَعْشُوْقِ مَنْ عَزَّ جَلَّا

٣ قَلْبِيْ يَحِنُّ اشْتِيَاقًا، لِذِى الْمَثَانِي الْمُعَلّٰى

٤ مِنْ سِرِّ سَبْعِ الْمَثَانِيْ مِنْ نُوْرِ مَعْنَاهُ تُمْلٰى

٥ مِنْ شَرْحِ لُطْفِ الْمَعَانِيْ مِمَّا جَلَاهُ تَمَلّٰى

٦ مِنْ وَصْفِ حُسْنٰى اِجْلَاهُ مِمَّا حَشَاهُ تَحَلّٰى

٧ مِنْ عِلْمِ غَيْبٍ مَّصُوْنٍ عَنْ كُلِّ مَنْ لَيْسَ أَهْلاً

٨ كَمْ مِّنْ جَلَالَاتِ قُدْسٍ أَوْ وَارِدَاتٍ تَلَالَا

٩ أَوْ مِنْ وِصَالَاتِ أُنْسٍ فِيْ حَضْرَةٍ إِذْ تَخَلّٰى

١٠ فِيْ خَلْوَةٍ مَّعْ حَبِيْبٍ فِيْ جَلْوَةٍ قَدْ تَجَلّٰى

١١ فِيْ قُرْبِهٖ فَسَقَاهُ مَوْلَاهُ عَلًّا وَّنَهْلاً

١٢ وَقَالَ سَلْ تُعْطَ عِنْدِيْ مَنْ فَوْقَ مَا شِئْتَ فَضْلاً

١٣ يَا سَيِّدِيْ اِقْبَلْ غُلَامَكْ رِقًّا وَّكُنْ أَنْتَ مَوْلٰى

١٤ حَاشَا لَكُمْ أَنْ تُخَيِّبُوْا عَبْدًا وَّحَاشَا وَكَلَّا

١٥ وَسَلَّمَ اللّٰهُ رَبِّيْ، عَلَيْكَ دَوْمًا وَّصَلّٰى

18. ஷைத்தின் உரை

1) ஹைறரான ஸலவாத்து சொல்லப்பட்ட நாயகத்துக்கே சோபனம். ஆயிரமாயிரம் வந்தனம். நல்மாராயம்.

2) நாயகருக்கெல்லாம் நாயகனாகிய அல்லாஹ்தஆலாவுக்கு உகக்கப்பட்டவர்கள் அஜ்ஜ வஜல்லாவாகிய ஆண்டவனால் ஆஷிக்கப்பட்டவர்கள்.

3) எனது கல்பானது மேலான குர்ஆன் ஷரீபுடைய நாயகரின் ஆசையினால் இராகம் பாடுகிறது.

4) அவர்கள் தங்கள் உண்மைப் பொருளின் ஒளியினால் நிரப்பப்பட்ட ஏழு ஆயத்துடைய சூரா பாத்திஹாவின் சிர்ரானவர்கள்.

5) தங்கள் திவ்விய மணம்பூண்டிருக்கும் அழகிய பூஷைஞர்மென்னும் நற்குண விசேஷ வர்ணிப்புடையார்.

7) அருகதையில்லாதவர்களை விட்டும் காக்கப்பட்ட மறைவான இல்முடையார்.

8) எம்மாத்திரமோ, பரிசுத்த மகத்தான சுயஞ்ஜோதிகளும் மனதிலுத்திலங்கும் பரமயான தோத்திரங்களும் அவர்களுக்குண்டு.

9) மேலும் தங்கள் ஹபீபுடன் தனித்த, தனி நிஷ்டயிலும்

10) பகிரங்க துறைகளிலும், சாமீப சமூகத்திலும் மறுவிய சேர்மானமும், அவர்களுக்குண்டு.

11) ஆகவே ஹக்குதஆலா அவர்களுக்கு தனது பேரானந்தமென்னும் தெய்வாமிர்த பானங்களை புகட்டினார்கள்.

12) இன்னும் அவர்களை நோக்கி நீர் கேளும். என்னிடத்தில் நீர் நாடியதற்கு மேலதிகமாக என்னால் அருளப்பெறுவீர் என்றான்.

13) எனது நாயகரே ! தங்களின் இப்பயலை அடிமையெனக் கைக் கொண்டு தாங்கள் அவனுக்கு எஜமானாய் இருங்கள்.

14) தங்கள் அடிமையை பேர் கெடுப்பதை விட்டும் துப்புரவானவர்கள். மெய்தான். மகா பரிசுத்தமானவர்கள். அப்படியே செய்யுங்கள்.

15) எனதாண்டவன் அல்லாஹ் தஆலா தங்கள் மீது எக்காலமும் ஸலாமும், ஸலவாத்தும் சொல்வானாக !

ثُمَّ نَادَاهُ حَبِيْبُهُ عَزَّ وَجَلَّ يَا اَحْمَدُ اَقْبِلْ يَا مُحَمَّدُ
اَمَامَكَ، اُدْنُ مِنِّيْ اَنَا اللّٰهُ رَبُّكَ، فَدَنٰى وَتَدَلّٰى،
فَلَمَّا بَلَغَ قَابَ قَوْسَيْنِ اَوْ اَدْنٰى، وَسَمِعَ صَرِيْفَ
الْقَلَمِ الْاَعْلٰى، تَدَلّٰى عَلَيْهِ ثَلَاثُ قَطَرَاتٍ قَطْرَةٌ عَلٰى
كَتِفِهِ فَاَوْرَثَتْهُ الْهَيْبَةَ، وَقَطْرَةٌ عَلٰى قَلْبِهٖ
فَاَوْرَثَتْهُ الْمَحَبَّةَ، وَقَطْرَةٌ عَلٰى لِسَانِهٖ فَاَوْرَثَتْهُ
الْفَصَاحَةَ، فَمِنْ هُنَا ظَنَّ اَنَّ كُلَّ مَنْ فِي السَّمٰوٰتِ
وَالْاَرْضِ قَدْ مَاتَ، لِاَنَّهُ لَمْ يَسْمَعْ لِلْمَلٰٓئِكَةِ
شَيْئًا مِّنَ الْاَصْوَاتِ، فَانْقَطَعَ عَنْهُ حِسُّهُ، وَغَابَ
عَنْهُ كُلُّ شَيْءٍ حَتّٰى نَفْسُهُ، فَقَوَّ اللّٰهُ نُوْرَ عَيْنَيْهِ
وَبَصَرِهٖ بِالْقَوْلِ السَّدِيْدِ فَكَشَفْنَا عَنْكَ غِطَاءَكَ
فَبَصَرُكَ الْيَوْمَ حَدِيْدٌ، فَرَاٰى صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَ
سَلَّمَ رَبَّهُ عَزَّ وَجَلَّ بِعَيْنَيْ رَاْسِهٖ عَلَى الْقَوْلِ الصَّحِيْحِ
بِلَا رَيْبٍ وَّلَا شَكٍّ وَّلَا جُحُوْدٍ، فَخَرَّ سَاجِدًا لِّلّٰهِ
الْعَزِيْزِ الْحَمِيْدِ، وَقَالَ فِيْ ذٰلِكَ جَدُّنَا الشَّيْخُ

صَدَقَةُ اللّٰهِ الْقَاهِرِيْ رَحِمَهُ اللّٰهُ فِيْ قَصِيْدَةِ
الْوِتْرِيَّةِ،

رَأَى اللّٰهَ فِي الْمِعْرَاجِ يَقْظَانَ سُهْرَةً،
مَعَ النَّفْسِ وَالْجِسْمِ الْمُطَهَّرِ طُهْرَةً،
لِعَائِشَةٍ خُلْفٌ وَإِنْ صَحَّ شُهْرَةً،
عَلٰى رَأْيِ قَوْمٍ عَايَنَ اللّٰهَ جَهْرَةً،
بِهٰذَا ابْنُ عَبَّاسٍ يَّدِيْنُ وَيَقْطَعُ،

ثُمَّ قَدْ غَشِيَتْهُ سَحَابَةُ تَجَلِّيَاتِ الرَّحْمَانِيَّةِ، وَ
حَفَّتْهُ أَنْوَارُ سُبُحَاتِ النُّوْرَانِيَّةِ، فَنَادَاهُ جِبْرِيْلُ مِنْ
خَلْفِهِ فَهَا أَنْتَ يَا مُحَمَّدُ وَرَبُّكَ، إِنَّ اللّٰهَ يُثْنِيْ عَلَيْكَ
وَيُكَلِّمُكَ، فَاسْمَعْ كَلَامَهُ، وَأَطِعْ أَمْرَهُ، وَلَا يَهُوْلَنَّكَ
شَيْئٌ بَعْدَهُ، فَقَالَ رَبُّهُ يَا خَيْرَةَ الْخَلْقِ عَلَيَّ، يَا
صَفْوَةَ الْأَنَامِ لَدَيَّ، اُنْظُرْ كَيْفَ عَظَّمْتُكَ وَكَيْفَ
مَجَّنْتُكَ، وَبِأَيِّ مَقَامٍ رَفَعْتُكَ، فَهَاتِ مَا عِنْدَكَ
مِنَ الشُّكْرِ وَالثَّنَاءِ فَقَالَ التَّحِيَّاتُ الْمُبَارَكَاتُ

اَلصَّلَوَاتُ الطَّيِّبَاتُ لِلّٰهِ، فَقَالَ اللّٰهُ تَعَالٰى اَلسَّلَامُ
عَلَيْكَ اَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللّٰهِ وَبَرَكَاتُهٗ، فَقَالَ
اَلسَّلَامُ عَلَيْنَا وَعَلٰى عِبَادِ اللّٰهِ الصَّالِحِيْنَ، فَقَالَ
جِبْرِيْلُ اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَاَشْهَدُ اَنَّ
مُحَمَّدًا رَّسُوْلُ اللّٰهِ ثُمَّ قَالَ اللّٰهُ تَعَالٰى يَا حَبِيْبِىْ
يَا اَحْمَدُ اَنْتَ اَكْرَمُ الْخَلْقِ عَلَيْنَا، وَاَحَبُّ اِلَيْنَا، وَاَشْرَفُ
لَدَيْنَا، سَلْ مَا تُرِيْدُ، فَمِنْكَ السُّؤَالُ وَالدُّعَاءُ، وَمِنَّا
الْاِجَابَةُ وَالْعَطَاءُ، فَقَالَ اِلٰهِيْ سَيِّدِىْ اَسْجَدْتَّ
الْمَلٰئِكَةَ لِاٰدَمَ وَاصْطَفَيْتَهٗ، وَفِي الْجَنَّةِ اَسْكَنْتَهٗ
فَقَالَ يَا مُحَمَّدُ لَوْلَا اَنَّهٗ اَشْرَقَ عَلَيْهِ نُوْرُ سِرِّكَ
الَّذِيْ تَقَادَمَ، مَا قُلْنَا لِلْمَلٰئِكَةِ اسْجُدُوْا لِاٰدَمَ،
سَلْ مَا شِئْتَ قَالَ اِلٰهِيْ قَدِ اسْتَجَبْتَ نُوْحًا لِدَعْوَتِهٖ
وَنَجَّيْتَهٗ وَقَوْمَهٗ فِيْ سَفِيْنَتِهٖ، فَاَتَى الْجَوَابُ لَوْلَا
اَنَّهٗ اَقْسَمَ عَلَيْنَا بِجَمَالِكَ، مَا نَجَا هُوَ وَمَنْ مَّعَهٗ
مِنْ طُوْفَانِ الْمَهَالِكِ، اُدْعُ تُجَبْ قَالَ قَدِ اتَّخَذْتَّ

اِبْرَاهِيْمَ خَلِيْلًا وَرَفَعْتَهٗ مَقَامًا ، وَجَعَلْتَ النَّارَ عَلَيْهِ
بَرْدًا وَّسَلَامًا ، فَجَاءَ النِّدَاءُ لَوْلَا اَنَّهٗ دَعَانَا بِاِسْمِكَ
الْمَجِيْدِ ، مَا سَلِمَ مِنْ نَّارِ النَّمْرُوْدِ ، قُلْ تُسْمَعْ قَالَ
يَا مَوْلَائِيْ قَدْ جَعَلْتَ مُوْسٰى كَلِيْمًا ، وَكَلَّمْتَهٗ تَكْلِيْمًا
فَاَتَى الْخِطَابُ ، يَا اَعَزَّ الْاَحْبَابِ ، فَاِنْ هُدِيَ بِالْاِسْرَاءِ
اِلَى النَّارِ ، فَاَنْتَ هُدِيْتَ بِالْاِسْرَاءِ اِلَى الْمَلِكِ الْجَبَّارِ ،
فَاِنْ خُوْطِبَ هُوَ عَلَى الْجَبَلِ ، فَخُوْطِبْتَ اَنْتَ عَلٰى بِسَاطِ
الْمَوْلَى الْاَجَلِّ ، وَقَدْ سَاَلَ الرُّؤْيَةَ فَقِيْلَ لَهٗ لَنْ
تَرَانِيْ ، فَقَدْ عَايَنْتَ اَنْتَ عَظَمَةَ سُلْطَانِيْ ، تَمَنَّ
تُعْطَ قَالَ حَبِيْبِيْ وَمَالِكِيْ قَدْ اَيَّدْتَ عِيْسٰى
بِرُوْحِ قُدْسِكَ ، حَتّٰى يُبْرِئُ الْاَكْمَهَ وَالْاَبْرَصَ
بِاِذْنِكَ ، وَيُحْيِي الْمَوْتٰى بِاِسْمِكَ ، فَجَاءَ الْجَوَابُ
يَا حَبِيْبِيْ يَا مَحْبُوْبِيْ اَنْتَ طَبِيْبُ لِّاَمْرَاضِ الذُّنُوْبِ
وَمُحْيِيْ اَمْوَاتِ الْقُلُوْبِ ، فَقَالَ يَا رَبِّ اقْبَلْ
شَفَاعَتِيْ ، فِيْ عُصَاةِ اُمَّتِيْ ، فَقَالَ اللّٰهُ تَبَارَكَ

وَتَعَالٰی یَا حَبِیْبِیْ قَدْ سَمِعْتُ قَوْلَكَ، وَاَعْطَیْتُكَ
سُوْلَكَ، وَعِزَّتِیْ وَجَلَالِیْ اِنْ عَصَوْنِیْ سَتَرْتُهُمْ،
وَاِنِ اسْتَغْفَرُوْا اِلَیَّ غَفَرْتُ لَهُمْ، وَاِنْ تَابُوْا تُبْتُ
عَلَیْهِمْ وَاِنْ دَعَوْنِیْ اَجَبْتُهُمْ وَلَا سَامَحْتَهُمْ فِیْمَا
مَضٰی، وَلَاجُوْدَنَّ عَلَیْهِمْ بِالرِّضٰی، وَلَسَوْفَ یُعْطِیْكَ
رَبُّكَ فَتَرْضٰی، یَا مُحَمَّدُ وَقَدْ اَعْطَیْتُكَ اسْمًا مِّنْ
اَسْمَائِیْ، وَاَنْتَ حَامِدِیْ، وَاَنَا مَحْمُوْدُكَ، وَاَنْتَ حَبِیْبِیْ
وَاَنَا مُحِبُّكَ، وَقَرَنْتُ اسْمَكَ بِاسْمِیْ، وَرَفَعْتُ ذِكْرَكَ
بِذِكْرِیْ، وَلَا اُذْكَرُ فِیْ سَمَائِیْ وَلَا فِیْ اَرْضِیْ اِلَّا وَ
تُذْكَرُ اَنْتَ مَعِیْ، وَاَنْتَ عَبْدِیْ وَرَسُوْلِیْ قَدْ رَفَعْتُكَ
اِلٰی مَالَا رَفَعْتُ غَیْرَكَ، وَاَعْطَیْتُكَ رُؤْیَتِیْ خَاصَّةً
لَّكَ، دُوْنَ اَحَدٍ غَیْرِكَ، فَقَالَ یَا رَبِّ اغْفِرْ لِاُمَّتِیْ،
فَقَالَ سُبْحَانَهٗ وَتَعَالٰی اَلَا تَرٰی اَنِّیْ قَدْ كَتَبْتُ عَلَیْهِمْ
بِرَحْمَتِیْ اَنَّهُمْ اُمَّةٌ مُّذْنِبَةٌ، وَاَنَا رَبٌّ غَفُوْرٌ، وَقَدْ
غَفَرْتُ لِسَبْعِیْنَ اَلْفٍ مِّنْ اُمَّتِكَ، فَقَالَ رَبِّ زِدْنِیْ

فَقَالَ وَيُشَفَّعُ كُلٌّ مِّنْهُمْ فِىْ سَبْعِيْنَ اَلْفٍ مِّنْ اُمَّتِكَ
فَقَالَ اِلٰهِىْ زِدْنِىْ، فَحَثَا سُبْحَانَهٗ وَتَعَالٰى بِيَدِهِ
الْكَرِيْمَةِ ثَلَاثَ حَثَيَاتٍ، وَالْحَثْيَةُ لَا يُحْصِيْهَا اِلَّا
الْمَلِكُ الْعَلَّامُ، وَقَالَ زِدْتُّكَ يَا مُحَمَّدُ فَقَالَ
لِوَجْهِكَ الْحَمْدُ وَالشُّكْرُ عَلَى الدَّوَامِ ٥ اَللّٰهُمَّ صَلِّ
وَسَلِّمْ وَبَارِكْ عَلَيْهِ ٥

19. ஹிகாயத்தின் வரலாறு

அப்பால் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை தங்கள் ஹபீப் நண்பனாகிய 'அஜ்ஜவஜல்ல' மகத்துவ மாட்சிமைக்குரிய ஆண்டவன் கூப்பிட்டு அஹ்மதே ! நீர் என்னிடம் முன்னோக்கும் முஹம்மதே ! முந்தும். நானுமது நாயன் அல்லாஹ்வாகுமென திருவுளம் புரிந்தான். நாயகம் இன்னும் மிக சமீபித்து "காபகவ்ஸைனி அவ் அத்னா" வென்னும் சமீப சமூகஸ்தானத்தை அடைந்து அல்லாஹ் தஆலாவின் சிருஷ்டிகளில், அவனது கற்பனையை எழுதும் மேலான கலம் எழுது கோலின் ஓசையைக் கேட்குமட்டில் அத்தணை நெருங்கினப் போது ஆண்டவனுடைய திருக்கருணை அமிர்தக் கடலின் மூன்று துளிகள். நாயகவமர்களை நோக்கியொளித்தன.

ஒன்று புயங்களின் சிறந்த புயத்தில் விஷயமாகி அவர்கட்கு பயபக்தியை அளித்தது. மற்றொன்று தங்கள் ஹிருதயத்தில் விழுந்து, உவப்பைக் கொடுத்தது. இன்னுமொன்று தங்கள் நாவில் தரித்து, நாகரீகத்தை உண்டாக்கிற்று. இவ்விடத்தில் அமரர்களின் யாதுமொரு ஓசை, ஊசாட்டங்களையுங் கேளாமல் ஒரே மௌனமாய் இருந்ததன் நிமித்தம் வானம், பூமிகளில்லுள்ளவர்கள் எல்லோரும்

மரணமாகி விட்டார்களோ வென்றெண்ணினார்கள். தங்கள் உணர்ச்சியுமற்று மனது உள்பட உலக வஸ்த்துக்களடங்களும் தங்களை விட்டு மறைந்து போய் விட்டன. எனவே அல்லாஹ் தஆலா தனது சத்திய வாக்கியமாகிய குர்ஆன் ஷரீபில் முஹம்மதே !

உம்மைவிட்டும் உமது திரையை நீக்கினோம். இன்று உமது பார்வையானது மிகக் கூர்மையுடையதாகும் என்ற சொல்லைக் கொண்டு நாயகம் அவர்களின் கண்ணொளியையும் பார்வைத் தெளிவையும் கெட்டிப் படுத்தினான். ஆகவே சரியான சொற்படி தங்கள் ஆண்டவன் அல்லாஹ் தஆலாவை யாதொரு சந்தேகமின்றி தங்கள் சிரசின் இரு கண்களாலும் கண்டு பேரானந்த பரவசமடைந்தவர்களாய் உடனே தங்கள் சிறப்பான புகழ்பெற்ற ஆண்டவனின் திருச் சமூகத்தில் ஸுஜூது சாஸ்டாங்கம் செய்தார்கள். இன்னும் இதற்கு அத்தாட்சியாக எங்கள் பாட்டனார். காயல்பட்டணம் மாதிஹுர் ரசூல் 'அஷ்ஷைகு ஸதக்கத்துல்லாஹ் ரஹுமஹுல்லாஹ் நாயகமவர்கள் தங்களது "கஸீதத்துல் வித்ரிய்யா" வெனும் கிரந்தத்தில் கூறிய பைத்தின் அர்த்தமாவது நாயகம் அவர்கள் மிஃராஜில் தங்கள் பரிசுத்த தேகமும், ஆன்மாவும் உடந்தையாய் கண் விழித்திருக்கையிலே அல்லாஹ் தஆலாவைக் கண்டார்கள். நாயகி ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு இதில் பிரசித்தமான பேதமிருப்பினும் பல இமாம் மகான்களின் மத்ஹபு மத்த சித்தாந்தத்தின் படி நாயகம் அல்லாஹ் தஆலாவை பிரதீட்சமாய் கண்டார்களென்பதே, இவ்வாறே இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு கண்டிப்பாக வற்புறுத்தி பேசி வந்திருக்கிறார்கள். இனி நாயகமவர்களை "ரஹ்மானியத்தின் தஜல்லியாத்" கருணா கடாட்சத்தின் பிறவைகளென்னும் மேகமானது பொதிந்துக் கொண்டது நூரானிய்யத்தென்னும் ஜோதியொளிகள் அவர்களைக் சூழ்ந்துக் கொண்டன.

தங்களுக்கு பின்னாலிருந்து ஜிப்ரீலானவர் முஹம்மதே ! இதோ நீரும் உமது நாயனும், திட்டமாக அல்லாஹ் தஆலா உமது பேரில் நற்துதி செலுத்துகிறான். உம்முடன் திருவசனம் புரிகிறான். நீர் அவனது திருவாக்கியத்தை செவிசாய்த்துக் கேளும். அவனுடைய கற்பனைக்கு வழிப்படும். அதன் பின்னால் யாதொரு கருமமும்

உம்மை அச்சமுறுத்தா திருக்குமாக வென கூறினார். அல்லாஹ் தஆலா நபி நாயகத்தை நோக்கி எம்மிடம் சிருஷ்டிகளில் மிக சிரேஷ்டமானவரே ! மனிதரின் தெளிவானவரே ! நீர் பாரும். நான் உம்மை எப்படி மகிமைப் படுத்தினேன். எவ்விதம் கண்ணிய மாக்கினேன். எமது சமஸ்தானத்திற்கு உம்மை உயர்த்தினேன். ஆகவே எனக்காக உம்மிடமிருக்கப்பட்ட புகட்சி, நன்றி, துதி, முதலிய காணிக்கைகளை சமர்ப்பியும் என்றருளினான்.

உடனே நாயகமவர்கள் "அத்தஹிய்யாத்துல் முபாரக்காத்துஸ் ஸலவாத்துத் தையி பாத்து லில்லாஹி" இந்த வரிசையான வணக்கங்களும் மணமான தொழுகைகளும் அல்லாஹ்விற்கே உரியன வென்றோதினார்கள். அல்லாஹ் தஆலா "அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்னபிய்யு வரஹ்மத்துல்லாஹி வபராக்கத்துஹு" நபியே உம்மீது அல்லாஹ்வின் ஸலாம் ஈடேற்றமும், ரஹ்மத்து கருணையும், பரக்கத்து பொலிவு முண்டாவதாகவென்றருளினான். நாயகமவர்கள் "அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன்" உனது ஸலாமானது எங்கள் மீதும், ஸாலிஹான நல்லடியார் மீதுமுண்டாகுகவென்றார்கள். ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் "அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் ரசூலுல்லாஹி" திட்டமாக வணக்கத்திற்குரிய நாயன் அல்லாஹ் தஆலாவை யல்லாது வேறில்லை. முஹம்மதானவர் அல்லாஹ் தஆலாவுடைய திருத்தூதரென சாட்சி சொல்லுகிறேன் என்றோதினார்கள். பின்பு அல்லாஹ் தஆலா நாயகத்தை நோக்கி எனது நண்பரே ! நீர் நம்மிடத்தில் எல்லாப் படைப்புக்களிலும் மிக்க சிலாக்கியமானவர், நம்மளவில் மிக்க உவப்பானவர். நம் பக்கம் மிக்க சிறப்பானவர். நீர் நாடியதைக் கேளும். கேட்பதும் வேண்டுவதும் உம்மில் நின்றும், ஏற்பதும், கொடுப்பதும், நம்மில் நின்றுமெனத் திருவுளமானான். எனவே நாயகம் எனது ஆண்டவனே ! நீ ஆதமுக்கு மலக்குகளைக் கொண்டு சாஷ்டாங்கம் செய்வித்தாய். அவரைத் தெளிவாக்கி சுவர்க்கத்தில் குடியேற்றிவித்தாயென்றார்கள்.

அல்லாஹ் தஆலா முஹம்மதே ! உமது தன்மையான சிறு அகமியத்தின் ஒளியானது அவர் மீது பிரகாசித்திராவிடில் நாம்

ஆதமுக்கு சாஸ்டாங்கம் செய்யுங்களென அமரர்களுக்கு சொல்லியிருக்க மாட்டோம். நாடியதைக் கேளுமென்றான். நாயகம் ஆண்டவனே ! நூஹ் நபியின் பிரார்த்தனையை அங்கீகாரம் செய்து, அவரையும், அவருடைய சமூகத்தினரையும் கப்பலில் இரட்சித்தாய் என்றார்கள். அல்லாஹ் தஆலா அவர் உமது அழகிய ஒளியைக் கொண்டு நம்மீது சத்தியம் செய்யாதிருக்கில் அவரும், அவருடனுள்ளவரும் வெள்ளத்தின் நாசத்தை விட்டும் ஈடேற்றம் பெற்றிருக்க மாட்டார்கள். இன்னும் கேளும். கொடுக்கப் படுவீரென்றான்.

நாயகம் ஆண்டவனே ! நீ இப்ராஹீம் நபியைத் தோழராக்கி, அவரின் பதவியை உயர்த்திவித்தாய். அவர்மீது நெருப்பை குளிர்ச்சியாக்கினாய் என்றார்கள். அல்லாஹ் தஆலா அவர் உமது மகத்துவ நாமத்தை உச்சரித்து நம்மை அழைத்திராதிருப்பின் நம்ரூதுடைய நெருப்பை விட்டும் தப்பித்துக் கொண்டிருக்க மாட்டார். இன்னும் சொல்லும் கேட்கப்படுமென சப்தமுண்டாயிற்று, நாயகம் ஆண்டவனே ! மூஸா நபியை வசனிக்கப் பட்டவராக்கி அவருடன் சம்பாஷனை புரிந்தாய் என்றார்கள். அல்லாஹ் தஆலா எனதன்பரிற் சிறந்தவரே ! அவர் நெருப்பளவில் இராவழி நடத்தப்பட்டார். நீரோ மகா வலுப்ப இராஜனான என்னளவில் மிஃராஜுக்கு நேர்வழிக் காட்டப்பட்டீர். அவரோடு தூர்ஸினா மலையில் வசனிக்கப் பட்டிருப்பிருப்பினும், நீர் மகத்துவ நாயகனின் ஆஸ்தான விரிப்பில் நேர்முக வசனம் அருளப் பெற்றீர்.

இன்னும் மூஸா காட்சியை விரும்பினார் எனினும் காண்க மாட்டீர் என சொல்லப்பட்டார். நீரோ எனது இராஜாங்க மாட்சியைக் கண்ணாற கண்டு களித்தீர். இன்னும் நீர் வேண்டிக் கெள்ளும் நிறைவேற்றப்படுவீர். என உத்தரவு பிறந்தது. நாயகம் என்னை ஆள்பவனே ! நீ ஈஸா நபியை உனது பரிசுத்த ரூஹ்ஆவியைக் கொண்டு கெட்டிப் படுத்தினாய். அவர்கள் உனது உத்தரவினால் குஷ்ட ரோகிகளை சுகப்படுத்தினார். உனது திருநாமத்தினால் மரித்தோரை உயிர்ப்பித்தார்கள். அல்லாஹ் தஆலா எனது நண்பரே ! நீர் பாவ நோய்களுக்கு பரிகாரியும். மரித்த

ஹிருதயங்களுக்கு உயிரளிப்பவருமாகு மெனப் பகர்ந்தான். நாயகம் ஆண்டவனே ! எனது பாவியான உம்மத்து சமூகத்தினர்களில் என்னுடைய "ஷபாஅத்து" மன்றாட்டத்தை அங்கீகரித்தருள் என்றார்கள். அல்லாஹ் தஆலா எனது அன்பரே ! நானுமது சொல்லைக் கேட்டேன். உம்முடைய நாட்டத்தை உமக்கு தந்தேன்.

எனது சிறப்பு, வலுப்பத்தின் பேரில் ஆணையாக ! அவர்கள் எனக்கு மாறு செய்தால் அதை மறைப்பேன். பிழைப் பொறுக்கத் தேடினால் மன்னிப்பளிப்பேன். "தவ்பா" பாவமன்னிப்புத் தேடினால் கபூல் அங்கீகரிப்பேன். என்னைக் கூப்பிட்டால் ஜவாபு விடைக் கொடுப்பேன். இன்னும் நான் அவர்கட்கு சென்றுப் போன குற்றங்களில் கருணைக் காட்டுவேன். எனது பொருத்தத்தை அவர்கட்கு நன்கொடை அளிப்பேன் கியாமத்து மறுமை நாளில் நீர் பொருந்துமளவும் உமக்கு உமது ஆண்டவன் ஷபாஅத்து மன்றாட்டத்தை அருள்வான். யா முஹம்மது எனது திருநாமங் களிலொரு நாமத்தை உமக்கு வரிசையளித்தேன். நீர் என்னை துதிப்பவர். நான் உமது துதிக்கப்பட்டவன். நீர் எனது சிநேகத்திற்குரியவர் நான், உம்மை சிநேகிப்பவன். உமது நாமத்தை எனது நாமத்தோடு சேர்த்தேன்.

எனது "திக்ரு" புகழுடன் உங்கள் புகழையும் மேலாக்கினேன். எனது வானத்திலும், பூமியிலும் உம்மை என்னோடு ஸ்துதியம் செய்யப்பட்டே அல்லாது என்னை ஸ்துதியம் செய்யப்படப் போவதில்லை. நீர் எனது சொந்த அடியார் எனது திருத்தூதர். திட்டமாக நான் மற்றெவரையும் உயர்த்தாத உச்சஸ்தானத்தில் உம்மை உயர்த்தினேன். எனது திருக்காட்சியை உம் அல்லாதவரைத் தவிர்த்து உமக்கே சொந்தமாய் தந்தேன் என்றருளினான். நாயகம் என்னுடைய ஆண்டவனே ! எனது உம்மத்து சமூகத்தினருக்கு பிழை பொருத்தருள் என்றார்கள். அல்லாஹ் தஆலா முஹம்மதே ! நீர் காணவில்லையா? நான் அவர்கள் மீது எனது ரஹ்மத் கிருபாகடாட்சத்தால் அவர்கள் பாவம் செய்யும் சமூகத்தினர். நான் பிழைப் பொறுக்கும் நாயனென எழுதிவிட்டேன். இன்னும் உமது சமூகத்தினரில் எழுபதுனாயிரம் பேர்கட்கு பிழைப்பொறுத்தே னென்றான். நாயகம் ஆண்டவனே ! அதை அதிகப்படுத்து என்ற

போது அவர்களில் ஒவ்வொருவருக்கும் உமது சமூகத்தினரிலிருந்து எழுபதுனாயிரம் பேரில் ஷபாஅத்து கொடுக்கப் படுவாரென்றான். நாயகம் ஆண்டவனே ! இன்னும் அதிகப் படுத்து என்றார்கள். அல்லாஹ்தஆலா தனது மகத்துவத்தின் திருக்கரத்தினால் மூன்று பிடி மண்ணெடுத்தான். ஒவ்வொரு பிடியின் கணக்கை மகா அறிவாலனான அல்லாஹ்வையன்றி யாரும் அறியார். யாமுஹம்மதே ! உமக்காக இந்தக் கணக்கு மிகைப் படுத்தினேனென்றான். நாயகம் ஆண்டவனே ! உனக்கே என்றும் அழியாப்புகழும் கீர்த்தியுமென்று துதித்து, நன்றி செலுத்தினார்கள். ஆண்டவனே ! அவர்கள் மீது ஸலவாத்து, ஸலாம் சொல்வாயாக !

أُطْرِىْ عَلَى الطَّاهِرِ السَّنِيِّ | نَافِى الرَّدَى صِيتُهُ الْجَلِيِّ

صَلَاةُ مَوْلَنَا ذِى الْجَلَالِ | عَلَى النَّبِيِّ نُوْرِ الْجَمَالِ

عَلَى الرَّسُوْلِ بَدْرِ الْكَمَالِ | عَلَى الْحَبِيْبِ شَمْسِ الْمَعَالِى

مُحَمَّدٌ خَيْرُ الْخَلْقِ طُرًّا | مُنَزَّهٌ عَنْ شَوْبِ الْمِثَالِ

مُحَمَّدٌ فَرْدُ الْكَوْنِ حُسْنًا | فِى زَيْنِ سِيْرِهِ وَالْخِصَالِ

مُحَمَّدٌ مَذْكُوْرٌ ثَنَاهُ | مَعْ ذِكْرِ مَوْلَاهُ كُلَّ حَالِ

مُحَمَّدٌ مَسْطُوْرٌ حُلَاهُ | فِى الْعَرْشِ مِنْ خَطِّ الْمُتَعَالِى

مُحَمَّدٌ مُشْتَقٌّ سُمَاهُ | مِنْ خَيْرِ اَسْمَا خَيْرِ الْمَوَالِى

قَدْ فَاقَ رُسْلًا وَزَادَ فَضْلًا | مَنْ ذَا يُحَاكِيْهِ فِى الْمَجَالِ

وَقَدْ تَسَامَى السَّبْعَ الْعَوَالِى | حَتَّى يُوَطِّيْهَا بِالنِّعَالِ

وَبَاتَ فَرْدًا مَعْ خَيْرِ فَرْدٍ | كَيْمَا يُنَاجِيهِ بِاللَّيَالِي

وَقَدْ تَخَلَّى مَعْ خَيْرِ مَوْلَى | عَرْشًا تَجَلَّى أَعْلَى الْمَجَالِ

فَقَرَّبَ الْمَحْبُوبُ حَبِيبًا | فِي حَضْرَةِ الْقُرْبِ وَالْوِصَالِ

فَقَدْ رَآى اللّٰهَ رَأْيَ عَيْنٍ | مِنْ غَيْرِ كَيْفٍ وَّلَا مِثَالِ

وَسَلَّمَ الْمَوْلَى لَهُ كَلَّمَ | وَقَالَ سَلْ أُعْطِ لَا أُبَالِي

صَلَّى عَلَيْهِ اللّٰهُ وَسَلَّمْ | وَعَمَّنَا فِيهِ بَعْدُ آلِ

20. பைத்தின் உரை

1. மாட்சிமையுடைய நமது நாயகனின் திருக்கருணையானது அழகிய ஒளியாகிய நபியின் மீதில்.

2. பூரண சந்திரனாகிய ரசூலின் மீதில் மேன்மைச்சூரியனாகிய ஹபீபின் மீதிலுண்டாவதாக !

3. முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் சர்வ சிருஷ்டிகளிலும் வெகு சிலாக்கியமான ஒப்புயர்வற்ற பரிசுத்தமானவர்கள்.

4. முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் தங்கள் அழகிய பழக்க வழக்கங்களிலும், குணாதிசய ஒழுக்க வணக்கங்களிலும் உலகில் தனி அழகு வாய்ந்தவர்கள்.

5. முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் தங்கள் துதியை ஆண்டவனின் துதியுடன் எச்சமயத்தும் சேர்த்து ஸ்தோதரிக்கப் பெற்றவர்கள்.

6. முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தங்கள் சற்குண

விசேடங்களை அர்ஷினிடத்தில் மேலான நாயனின் குத்ரத்தென்னும் கையெழுத்தினால் வரையப்பட்டவர்கள்.

7. முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் தங்கள் திரு நாமத்தை ஹைரான நாயகனின் திருநாமத்திலிருந்து பெயர்த் தெடுக்கப்பட்டவர்கள்.

8. திட்டமாக நபி நாயகமவர்கள் எல்லா ரசூல்மாரினும் வரிசையில் மேலிட்டு மிஞ்சி விட்டார்கள். அவர்களுக்கு எவன் தான் வீர பராக்கிரமத்தில் சமமாவர்.

9. நாயகம் மேலேழுவான்களையும் தங்கள் பாதரட்ஷைகளால் தோய்க்குமளவும் ஏறிச் சென்றார்கள்.

10. நாயகம் ஹைரான தனித்த, ஏகந்த நாயனுடன் தனித்தவர்களாய் பரம இரகசிய சம்பாஷனை புரியும் பொருட்டு இராத் தங்கினார்கள்.

11. மகோன்னத பரவெளியாய் ஜொலித்திலங்கும் அர்ஷின் சமஸ்தானத்தில் ஹைரான ஆண்டவனோடு தனித்திருந்தார்கள்.

12. ஆகவே மஹ்பூபாகிய ஆண்டவன் ஹபீபாகிய நாயகத்தை தனது சமீப சாயுட்சிய சமூகத்தில் முடுக வைத்தான்.

13. எனவே திட்டமாக நாயகம் ஹக்குதஆலாவை யாதொரு ஒப்புவமையன்றி கண்காட்சிப் புரிந்தார்கள்.

14. மேலும் ஆண்டவன் அவர்களுக்கு ஸலாமுரைத்து திருவசனம் புரிந்தான். இன்னும் நீர் கேளும். இலட்சியமின்றி தருவேனெனக் கூறினான்.

15. அல்லாஹ் தஆலா அவர்கள் மீது ஸலவாத்தும், ஸலாமும் சொல்வானாக ! இன்னுமந்த ஸலவாத்து, ஸலாமில் தங்கள் ஆட்களுக்குப் பின்னால் நம்மனைவரையும் அடைய வளைத்துக் கொள்வானாக !

ثُمَّ قَالَ اللّٰهُ عَزَّ وَجَلَّ يَا مُحَمَّدُ اِنْزِلْ وَبَلِّغْ عِبَادِي بِرِسَالَتِكَ، وَوَصِيَّتِي لِاُمَّتِكَ، فَاِنْ اٰمَنُوْا وَاَصْلَحُوْا فَاِنِّيْ اَنَا الْغَفُوْرُ الرَّحِيْمُ، وَسَاُعْطِيْهِمْ لِقَائِيْ فِيْ جَنَّاتِ النَّعِيْمِ، وَسَيَرَوْنَنِيْ يَوْمَ الْحَشْرِ كَمَا يَرَوْنَ الْقَمَرَ لَيْلَةَ الْبَدْرِ، يَا حَبِيْبِيْ يَا مُحَمَّدُ وَاِنِّيْ مُفْتَرِضٌ عَلَيْكَ وَعَلٰى اُمَّتِكَ خَمْسِيْنَ صَلَاةً فِيْ كُلِّ يَوْمٍ وَّ لَيْلَةٍ، فَارْجِعْ اِلٰى قَوْمِكَ بِلَا مُهْلَةٍ، وَبَلِّغْهُمْ عَنِّيْ هٰذَا الْفَرْضَ حَتّٰى يُقِيْمُوْهُ وَلَا يُضَيِّعُوْهُ، فَحَمَلَهُ الرَّفْرَفُ وَلَمْ يَزَلْ يَرْفَعُهُ وَيَخْفِضُهُ حَتّٰى اَهْوٰى بِهٖ اِلٰى سِدْرَةِ الْمُنْتَهٰى، فَاِذَا جِبْرِيْلُ قَائِمٌ مُّنْتَظِرٌ عِنْدَهَا، فَقَالَ اَبْشِرْ يَا مُحَمَّدُ حَيَّاكَ اللّٰهُ وَهَنَّاكَ، فَخُذْ شُكْرًا لِّلّٰهِ عَلٰى مَا اَعْطَاكَ، ثُمَّ هَبَطَا مِنْ سَمَاءٍ اِلٰى سَمَاءٍ، حَتّٰى اَدْرَكَا مُوْسٰى بِاللِّقَاءِ، فَقَالَ يَا مُحَمَّدُ اَبْشِرْ فَقَدْ عَلِمْنَا اَنَّكَ خَيْرٌ مِّنَّا، وَاَكْرَمُ عَلَيْنَا وَ سَاَلَهٗ عَمَّا افْتَرَضَ اللّٰهُ عَلَيْهِ وَعَلٰى اُمَّتِهٖ، فَقَالَ

خَمْسِيْنَ صَلَاةً فِيْ كُلِّ يَوْمٍ بِلَيْلَتِهٖ، فَقَالَ يَا مُحَمَّدُ
اِرْجِعْ اِلٰى رَبِّكَ، وَاسْأَلْهُ التَّخْفِيْفَ عَنْ اُمَّتِكَ،
فَاِنَّهُمْ ضُعَفَاءُ لَا يُطِيْقُوْنَ لِذٰلِكَ، فَاِنِّيْ بَلَوْتُ بَنِيْ
اِسْرَائِيْلَ، وَعَالَجْتُهُمْ بِالْخَطْرِ الثَّقِيْلِ، فَرَجَعَ اِلٰى
رَبِّهِ الْاَعْلٰى، وَوَقَفَ عِنْدَ سِدْرَةِ الْمُنْتَهٰى،
فَغَشِيَتْهُ السَّحَابَةُ الْعُظْمٰى، فَخَرَّ سَاجِدًا وَّقَالَ يَا
اَرْحَمَ الرُّحَمَاءِ، خَفِّفْ عَنْ اُمَّتِيَ الضُّعَفَاءِ، فَاِنَّهُمْ لَا
يَقْدِرُوْنَ عَلَى الْوَفَاءِ، فَوَضَعَ رَبُّهٗ خَمْسًا اَوْعَشْرًا،
فَرَجَعَ اِلٰى مُوْسٰى فَوْرًا، وَاَخْبَرَهٗ بِذٰلِكَ، فَرَدَّهٗ ثَانِيًا
كَذٰلِكَ، فَلَمْ يَزَلْ يَتَرَدَّدُ مُوْسٰى بَيْنَ وَرَبِّهٖ مَرَّاتٍ
حَتّٰى يُحَطَّ عَنْهُ اِلٰى اَنْ بَقِيَ خَمْسُ صَلَوَاتٍ، ثُمَّ قِيْلَ
يَا مُحَمَّدُ كُلُّ صَلٰوةٍ بِعَشْرٍ، عَلٰى اَنَّ مَنْ عَمِلَ حَسَنَةً
فَلَهٗ عَشْرُ حَسَنَةٍ، وَمَنْ هَمَّ بِهَا وَلَمْ يَعْمَلْهَا فَلَهٗ
حَسَنَةٌ، وَسَاَزِيْدُهَا وَاُضَاعِفُهَا لَهٗ بِالْمِنَّةِ، وَمَنْ
هَمَّ بِسَيِّئَةٍ فَلَا مُؤَاخَذَةَ بِالنِّيَّةِ، فَاِنْ عَمِلَهَا

يُكْتَبُ عَلَيْهِ وَاحِدَةٌ مِّنَ الْخَطِيْئَةِ، يَا مُحَمَّدُ وَعِزَّتِيْ
وَجَلَالِيْ، سَاغْفِرُهَا لَهُ وَلَا اُبَالِيْ، فَقَدْ اَمْضَيْتُ
فَرِيْضَتِيْ، وَخَفَّفْتُ عَنْ عِبَادِيْ، فَلَا يُبَدَّلُ حُكْمِيْ
وَلَا يُنْسَخُ كِتَابِيْ، ثُمَّ رَجَعَ اِلٰى مُوْسٰى فَرَدَّهُ كَالْاُوْلٰى
قَالَ قَدِ اسْتَحْيَيْتُ مِنْ مُرَاجَعَةِ رَبِّيْ، وَرَضِيْتُ بِمَا
حَكَمَ عَلَيَّ وَقَضٰى، فَوَدَّعَهُ مُوْسٰى وَقَالَ بِاسْمِ اللّٰهِ
جَلَّ وَعَلَا، فَاَهْبَطَهُ جِبْرِيْلُ حَتّٰى وَصَلَ اِلَى السَّمَاءِ
الْاُوْلٰى، فَاِذَا اللَّيْلُ عَلٰى حَالَتِهِ، لَمْ يَنْقُصْ وَلَمْ
يَزِدْ شَيْئٌ مِّنْ سَاعَتِهِ، فَفُتِحَ لَهُ بَابُ السَّمَاءِ الدُّنْيَا
وَرُفِعَ كَفٌّ مِّنَ النُّوْرِ فَاَبْصَرَ بِهِ اَهْلَ الْاَرْضِ السُّفْلٰى
فَنَزَلَ بِبَيْتِ الْمُقَدَّسِ فَاِذَا الْبُرَاقُ بِحَالِهِ فِي
الْمَوْضِعِ الَّذِيْ تَرَكَهُ بِرِحَالِهِ ۝ اَللّٰهُمَّ صَلِّ وَ
سَلِّمْ وَبَارِكْ عَلَيْهِ ۝

21. ஹிகாயத் வரலாறு

அப்பால் மகத்துவ மாட்சிக்குரிய ஆண்டவன் நாயகத்தை நோக்கி, முஹம்மதே ! நீர் பூலோகத்தில் இறங்கும், எனது அடியாருக்கு உமது ரிசாலத்து தூதுத்துவத்தை தெரிவியும். என்னுடைய வஸியத்து ஆக்யா பனைய உமது சமூகத்தினருக்கு அறிவியும். அவர்கள் என்னைக் கொண்டு ஈமான் நம்பிக்கை கொண்டு நல் வணக்கம் செய்வார்களாயின் நானவர்கட்கு பிழைப் பொறுத்து கிருபை செய்பவன்.

கியாமத்து மறுமை நாளில் சுவர்க்கப் பதியில் அவர்கட்கு எனது திருக் காட்சிப்புரிவேன். இன்னுமவர்கள் பதின

ான்காம் இரவில் பூரண சந்திரனைக் காணுவதைப் போல் மஹ்ஷர் மறுமையில் என்னை காண்பார்கள். எனது நண்பரே ! முஹம்மதே ! நான் உம் மீதும், நும் சமூகத்தினர் மீதும், ஒவ்வொரு இரவு, பகலிலும் ஐம்பது நேரத் தொழுகையை விதிபாக்கினேன். நீர் உமது சமூகத்தினரிடம் மீண்டு, அவர்கள் இந்த தொழுகைகைய அலட்சியம் செய்யாமல் நியம கட்டளையாய், தொழும்படி என் புறத்தால் அவர்கட்குத் தெரிவியுமென கட்டளையிட்டான்.

உடனே ! ரஃப்ரஃப் என்னும் பரமத் தொட்டிலானது நாயகத்தை சுமந்துக் கொண்டு உயர்ந்தும், தாழ்ந்தும், “சித்ரத்துல் முன்தஹா” வென்னும் விருட்சத்தடியில் வந்திறங்கியது. அங்கு ஜிப்ரீலானவர் இவர்களின் வரவை எதிர்ப் பார்த்து நின்றவராய், முஹம்மதே ! நீர் சுபவந்தனம் பெற்றீர். அல்லாஹ் தஆலா உமக்கு நற்காணிக்கைப் புரிந்தான். நல்லுபசாரமருளினான். உமக்கவன் நன்கொடை அளித்ததற்காக அவனுக்கு நன்றி செலுத்துமென்றார்.

பின்பு இருவரும் ஒவ்வொரு வானமாக இறங்கி நபி மூஸா அலைஹிஸ்ஸலாமை சந்தித்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி முஹம்மதே ! நன்மாராயம் பெறும். திட்டமாக நீர் எங்களில் சிரேஷ்டமானவரும், சங்கைவாய்ந்த வருமென்றறிருந்துக் கொண்டோமெனக் கூறி நாயகத்தின் மீதும், அவர்களின் சமூகத்தினர் மீதும் அல்லாஹ்தஆலா கற்பித்ததை பற்றிக் கேட்கவே, நாயகம் ஒவ்வொரு இரவு, பகலிலும் ஐம்பது வேளைத் தொழுகையை கடமையாக்கப் பட்டதென்றார்கள்.

நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் முஹம்மதே ! நீர் உமது நாயனிடம் திரும்பவும் போய் உமது சமூகத்தினருக்கு இலேசு படுத்திக் கேளும். அவர்கள் இவ்வைம்பது வேளைத்தொழுகைக்கு சக்திப் பெறமாட்டார்கள். நான் இவ்விஷயத்தில் பனீ இஸ்ராயீல் இஸ்ரவேலர்களுடன் கன அவஸ்தை பட்டிருக்கிறேன் என்றார்கள். நாயகம் தங்கள் மேலான நாயனிடம் மீண்டும் போய் "சித்ரத்துல் முன்தஹா" என்னும் விருட்சத்தினிடம் தரிக்கவே மகத்தான ஓர் மேகமானது நாயகத்தைச் சூழ்ந்துக் கொண்டது. உடனே சாஸ்டாங்கம் செய்தவர்களாய் கிருபையாளரில் மகாக் கிருபையுடைய நாயனே ! எனது ஏழை சமூகத்தினருக்கு இறங்கி இலேசு படுத்தியருள். அவர்களிதை நிறைவேற்றுவதில் அசக்தர்கள் என்றார்கள். ஆண்டவன் ஐந்து அல்லது பத்து வேளைகளைக் குறைத்தான். திரும்பவும் வந்து மூஸா அலைஹிஸ்ஸலாமுக்கு அதனை விரைவாக தெரிவிக்கவே, நாயகத்தை மறுமுறையும் திரும்ப ஆண்டவனிடம் அனுப்பினார்கள். இவ்வண்ணமாக மூஸாவுக்கும், அல்லாஹ்வுக்குமிடையில் போய் வந்ததின் பலனாக, அல்லாஹ் தஆலா தினமொன்றுக்கு ஏற்படுத்திய ஐம்பது வேளை தொழுகையையும் ஐந்து நேரத் தொழுகையாகக் குறைத்தான்.

அதன் பின் அல்லாஹ் தஆலா முஹம்மதே ! ஒவ்வொரு நன்மையும் பத்து நன்மைக்குச் சமமென்ற விகிதாச்சாரப்படி ஒவ்வொரு நேரத் தொழுகையும் பத்து நேரத்திற்குச் சமமாகும். யாதொருவன் ஒரு நன்மையைக் கருதி அதைச் செய்யாவிடில் அவனுக்கு ஒரு நன்மை செய்த கூலியுண்டு. இன்னும் எனது கருணையினால் அதிகமாயுங் கொடுப்பேன். யாதொருவன் ஒரு தீமையை நினைத்து அதைச் செய்யாதிருப்பின் அந்நினைப்பின் குற்றத்தை மன்னிப்பேன். அதைச் செய்து விட்டால் உரிய குற்றமெழுதப்படும். முஹம்மதே ! எனது சிறப்பு வலுப்பத்தின் மீதாணையாக ! நானவர்கட்கு பிழைப் பொறுப்பேன்.

இலட்சியம் செய்ய மாட்டேன். ஆதலால் எனது வேதக் கட்டளையைச் செலுத்திவிட்டேன். என்னுடைய அடியார் மீது இலேசுபடுத்தினேன். எனவே எனது தீர்ப்பானது மறுக்கப்படுவதில்லை. எனது விதியை மாற்றப் போவதில்லையென

சொல்லப்பட்டது. பின்பு நாயகம் மூஸா நபியிடம் வந்தப் போது இன்னொரு முறையும் ஆண்டவனிடம் சென்று, நேரங்களைக் குறைத்துக் கொண்டு வரும்படிச் சொன்னார்கள். நாயகம் நான் என்னுடைய நாயனிடம் திரும்ப போவதற்கு வெட்கிக்கிறேன். அவன் என் மீது விதித்த கற்பனையை புரிந்துக் கொண்டேன் எனக் கூறினார்கள். மூஸா அலைஹிஸ்ஸலாம் பிஸ்மில்லாஹ் சொன்னவர்களாய் நாயகத்தை மரியாதையாக வழியனுப்பினார்கள்.

ஜிப்ரீல் நாயகத்தை முன் வானம் வரைக் கொண்டு சேர்த்தார். அப்பொழுது இரவானது அதன் நாழிகையில் ஓர் வினாடியேனும் கூடுதல், குறைத்தலின்றி உரியபான்மையிலிருந்தது. இனி முன் வானத்தின் வாயில் திறக்கப்பட்டு, ஒரொளியின் திரையை உயர்த்தப்படவே அதன் பிரகாசத்தால் கீழே பூமியுடையோர்களைப் பார்த்தார்கள். பின்பு பைத்துல் முகத்தஸென்னும் பரிசுத்தப் பட்டணம் வந்திறங்கியதும், புராக்கென்னும் தேவ வாகனமானது. தாங்கள் பிரயாண அடையாளத்தோடு விட்டுப் போன இடத்தில் அப்படியே இருந்தது ஆண்டவனே ! அவர்கள் மீது ஸலவாத், ஸலாம் சொல்லியருள்வாயாக !

مَرْحَبًا بِالْمُصْطَفٰى مِنْ ذِي الْعُلَا ‖ مَرْحَبًا بِالْمُرْتَضٰى اَهْلًا وَّسَهْلًا

مَرْحَبًا بِالْمُجْتَبٰى خَيْرِ الْوَرٰى ‖ مَنْ عَلَا الْاَعْلٰى لِمَنْ عَزَّ وَجَلَّا

وَسَرٰى شَوْقًا وَّقَدْ اَسْرٰى بِهٖ ‖ رَبُّهٗ حُبًّا اِلٰى لُقْيَاهُ لَيْلًا

وَبِاَمْلَاكِ السَّمَاءِ بِاَسْرِهِمْ ‖ وَبِكُلِّ الرُّسُلِ قَدْ اَمَّ وَصَلّٰى

وَرَقٰى وَالرُّوْحُ عَنْهُ مُخَلَّفُ ‖ طَالِبًا مِّنْ رَّبِّهٖ قُرْبًا وَّوَصْلًا

وَسَمَا السَّبْعَ السَّمٰوَاتِ الْعُلٰى ‖ وَعَلَا الْاَعْلٰى مِنَ الْعَرْشِ الْمُعَلّٰى

وَاِلٰی قَابِ لِقَوْسَیْنِ دَنٰی | اَوْ اِلٰی اَدْنٰی دَنٰی ثُمَّ تَدَلّٰی
قَدْ رَاٰی حَقًّا بِعَیْنَیْ رَأْسِہٖ | خَیْرَ مَوْلَی الْعَرْشِ نُوْرًا قَدْ تَجَلّٰی
فَسَقَاہُ مِنْ سُلَافَۃِ قُدْسِہٖ | بَلْ کَسٰی مَا لَا کَسَا مِنْ قَبْلُ رُسُلَا
وَاَرَاہُ الْاٰیَۃَ الْکُبْرَی الَّتِیْ | لَا اَرٰیھَا لِسِوَاہُ قَطُّ اَصْلًا
وَحَبَاہُ الْحَقُّ مِنْ دِیْنِ الْھُدٰی | بِرَخِیْصِ الْحُکْمِ فَرْضًا ثُمَّ نَفْلًا
قَدْ اَتٰی فِیْنَا لَنَا مِنْ ذَاتِہٖ | رَحْمَۃً فِیْ اٰیَۃِ الْقُرْاٰنِ تُتْلٰی
یَا لَہٗ مِنْ نِعْمَۃٍ جَلَّتْ لَنَا | لَا نُؤَدِّیْ شُکْرَھَا قَوْلًا وَّفِعْلًا
فَلَکَمْ نِلْنَا بِمَسْرَاہُ الْمُنَا | وَاغْتَنَمْنَا مِنْ جَمِیْعِ الْخَیْرِ کُلًّا
وَلَکَمْ فُزْنَا وَحُزْنَا قُرَّۃً | وَسَعِدْنَا بِغِنَی الدَّارَیْنِ نَیْلًا
سِیَّمَا بِشَفَاعَۃٍ یُنْجِیْ بِھَا | کُلَّ عَاصٍ رَبُّہٗ عَمْدًا وَّجَھْلًا
یَا شَفِیْعِیْ خُذْ بِعَبْدِکَ اِنَّنِیْ | شَرُّ حَالَاتٍ اَقَلُّ الْخَلْقِ عَقْلًا
سَیِّدِیْ فَاقْبَلْ سَلَامَ تَحِیَّتِیْ | ثُمَّ حَیُّوْنِیْ بِاَحْسَنَ مِنْہُ قَوْلًا
وَعَلَیْکَ اللّٰہُ صَلّٰی دَائِمًا | وَعَنِ الْاٰلِ الرِّضٰی مِنْ خَیْرِ مَوْلٰی
وَعَفٰی عَنَّا وَعَمَّنْ عَقَدُوْا | مَجْلِسَ الْمِعْرَاجِ ذَا اَوْ مَنْ تَوَلّٰی

22. பைத்தின் உரை

1. மேலாம்பரமுடைய அல்லாஹ்வினால் முஸ்தபா நபிக்கே சுபச்சோபனம் முர்தழா நாயகத்திற்கே நல்வந்தனம் நல்மாராயம்.

2. ஹல்க்குகளில் ஹைரான முஜ்தபா வள்ளலுக்கே சுபமங்களம். அவர்கள் சிறப்பு வலுப்பமுடைய ஆண்டவனிடத்தில் மேலோகத்திற்கு மேல் உயர்ந்தார்கள்.

3. ஆண்டவன் அவர்களை தனது திருக்காட்சியளவில் இராவழி நடத்துவிக்க, மிக்க உகப்பாய், கன ஆசையுடன் நடந்தேகினார்கள்.

4. அந்தருலக அமரர் அனைவருக்கும், சகல ரசூல்மார்களுக்கும் முன்னிலையாய், இமாமாய் நின்றுத் தொழுவித்தார்கள்.

5. ரூஹென்னும் ஜிப்ரீலானவர் தங்களை விட்டும் பின்னிந்து தங்கள் ஆண்டவனின் திரு சமீப சேர்மானத்தை நாடி மேலேறினார்கள்.

6. மேலெழுவான்களுக்கும் மகா மேன்மையுடைய அர்ஷுக்கு மேலாய் உயர்ந்து சென்றார்கள்.

7. இன்னும் "காப கவ்ஸைன்" என்னும் சமீப சமூக ஆசிரமத்தை அணுகி அதன் மேல் "அவ்அத்னா"வென்னும் சன்னிதியில் அடுத்து சமீபித்தார்கள்.

8. திட்டமாக ஏக ஜோதிமயமாக இலங்கும் அர்ஷின் கைரான நாயகனை ! தங்கள் தலையின் இரு நேத்திரங்களாலும் உண்மையாய் கண்டார்கள்.

9. ஆகவே ஆண்டவன் அவர்களுக்கு தனது பரிசுத்த அமிர்த பானத்தை புகட்டி முன்னுள்ள ரசூல் மாருக்கு உடுத்தாத மகத்துவ உடைய தங்களுக்குடுத்தினான்.

10. இன்னும் அவர்களன்றி எவருக்கும் அறவே காண்பிக்காத அருமையான, பெருமையான, திருஷ்டாந்தங்களை அவர்களுக்கு காண்பித்தான்.

11. ஹக்குதஆலா நீதமான மார்க்கத்தில், சுலபமான மதக்கோட்பாடு பர்ளு, நப்லு முதலிய மதவிதிகளை அவர்களுக்கு பரிசளித்தான்.

12. தங்கள் தாத்தின் சுபாவத்தினால் நமதுப் பொருட்டு திருக்குர்ஆனில் ஓதப்பட்டு பிரகாரம் நம்மில் ரஹ்மத்தென்னும் அருளாக வந்துதித்தார்கள்.

13. அவர்கள் நமக்கு எவ்விதமாக நிஃமத்தென்றால் அந்த நிஃமத்துக்கு நாம் சொல்லாலும், செயலாலும் நன்றி செலுத்த தகுதியல்லோம்.

14. தாங்கள் வினோதய யாத்திரையின் பயனாக நாம் எம்மாத்திரமோ ஆசாபாசங்களைப் பெற்றோம். சகல நன்மைகளையும் மொத்தமான கொள்கைக் கொண்டோம்.

15. இன்னும் எம்மாத்திரமோ கண் குளிர்ந்த பவிசு பாக்கியங்களைப் பெற்றோம். இபகர செல்வ சம்பவத்துக்களையடைந்து மோட்சக் கதி எத்தினோம்.

16. முக்கியமாக அறிந்தும், அறியாமலும், ஆண்டவனுக்கு மாறு செய்யும் என் போன்ற மாபாவியடங்களையும் கடைத்தேறத்தக்க மன்றாட்டத்தால் ஜெயம் பெற்றோம்.

17. என்னை மன்றாடி இரட்சிப்பவரை ! தங்களின் இவ்வடிமையை கைப்பிடியுங்கள். திட்டமாக நான் படைப்புகளில் அற்பப் புத்தி படைத்தவனும், துஷ்ட சுபாவமுடையவனாயிருக்கிறேன்.

18. எனது நாயகரே ! எனது காணிக்கையாகிய ஸலாமை அங்கீகரித்து, அதிலும் அழகானஇனிய சொல்லாலெனக்கு பிரதியுத்தரவளியுங்கள்.

19. அல்லாஹ் தஆலா தங்கள் மீது எக்காலமும் ஸலவாத்து சொல்வானாக ! தங்கள் ஆட்களைத்தொழும் ஹைரான நாயனின் பொருத்தமுண்டாகுக.

20. இன்னும் எங்களுக்கும், இந்த மிஃராஜ் மஜ்லிஸை நியமித்தோர், நிர்வகித்தோருக்கும் அல்லாஹ்தஆலா பாவமன்னிப்பருள்வானாகவும்.

ثُمَّ رَكِبَهُ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ فَطَارَ بِهٖ عَلَى الْهَوَاءِ
بِسُرْعَةٍ حَتّٰى اَتٰى مَكَّةَ زَادَهَا اللّٰهُ كَرَامَةً وَّرِفْعَةً،
فَقَالَ يَا جِبْرِيْلُ اِنَّ قَوْمِيْ يُكَذِّبُوْنَنِيْ وَلَا يُصَدِّقُوْنَنِيْ
فَقَالَ يَا مُحَمَّدُ اِنْ كَذَّبَكَ اَبُوْجَهْلٍ صَدَّقَكَ اَبُوْبَكْرِنِ
الصِّدِّيْقُ فَهُوَ صَاحِبُكَ الرَّفِيْقُ، ثُمَّ وَدَّعَهُ جِبْرِيْلُ
مَضٰى فَلَقِيَهُ عَمُّهُ الْعَبَّاسُ فِي الطَّرِيْقِ، فَقَالَ مَا
شَأْنُكَ يَا مُحَمَّدُ، فَقَالَ يَا عَمِّيْ، لَقَدْ اُسْرِيَ بِيَ الْبَارِحَةَ
اِلٰى رَبِّيْ، مِنْ مَكَّةَ اِلٰى بَيْتِ الْمُقَدَّسِ اِلٰى سَبْعِ
سَمٰوَاتٍ، وَقَدْ رَأَيْتُ مِنْ عَجَائِبِ الْمَخْلُوْقَاتِ، وَذَكَرَ
لَهُ مَا رَاٰهُ اِلٰى اٰخِرِ الرِّوَايَاتِ، فَقَالَ يَا مُحَمَّدُ اِنَّ
قَوْمَكَ كَذَّبُوْكَ، وَلَمْ يُصَدِّقُوْكَ وَلَا يُؤْمِنُوْنَ
بِحَدِيْثِكَ اَبَدًا، فَلَا تُحَدِّثَنَّ بِهٖ مِنَ الْقُرَيْشِ اَحَدًا
فَقَالَ وَاللّٰهِ لَاُحَدِّثَنَّ بِمَا اتَّخَذْتُ مِنَ اللّٰهِ عَهْدًا،
ثُمَّ انْطَلَقَ اِلٰى مَنْزِلِ اُمِّ هَانِيٍ بِنْتِ عَمِّهٖ، فَوَجَدَ
فِرَاشَهُ لَمْ يَبْرُدْ مِنْ اٰثَرِ نَوْمِهٖ، وَذَكَرَ لَهَا الْحَالَ

بِتَمَامِهٖ، فَقَالَتْ بِاَبِیْ وَاُمِّیْ اَنْتَ یَارَسُوْلَ اللّٰہِ
لَا تُحَدِّثَنَّ بِهٖ قُرَیْشًا فَاِنَّهُمْ یُكَذِّبُوْنَكَ وَیُسَفِّهُوْنَكَ
وَیَرُدُّ عَنْكَ مَنْ اٰمَنُوْا بِكَ، فَقَالَ وَاللّٰهِ لَاُحَدِّثَنَّ
هُمْ بِجَمِیْعِ اَحْوَالِیْ، فَاِنْ صَدَّقُوْا وَاٰمَنُوْا وَاِلَّا فَلَا
اُبَالِیْ، ثُمَّ دَخَلَ الْمَسْجِدَ الْحَرَامَ، فَاَوَّلُ مَنْ مَرَّ
بِهٖ اَبُوْجَهْلِ بْنُ هِشَامٍ، فَلَمَّا رَاٰهُ دَنَا اِلَیْهِ وَجَلَسَ
كَالْمُسْتَهْزِئِ بَیْنَ یَدَیْهِ، وَقَالَ یَا مُحَمَّدُ هَلْ فِی
الْبَارِحَةِ شَیْئٌ مِّنَ الْاَخْبَارِ، فَقَالَ نَعَمْ، قَدْ اُسْرِیَ
بِیْ اِلٰی بَیْتِ الْمُقَدَّسِ وَاِلَی الْجَنَّةِ وَالنَّارِ، ثُمَّ ذَكَرَ
لَهٗ مَا رَاٰهُ مِنَ الْعَجَائِبِ وَالْاَسْرَارِ، فَقَالَ یَا مُحَمَّدُ
ثُمَّ اَصْبَحْتَ بَیْنَ ظَهْرَانَیْنَا، فَقَالَ نَعَمْ، قَالَ اَفَتُحَدِّثُ
بِهٖ قَوْمَكَ، فَقَالَ نَعَمْ، فَصَاحَ لَعَنَهُ اللّٰهُ بِهِمْ یَا
مَعْشَرَ بَنِیْ كَعْبِ بْنِ لُؤَیٍّ هَلُمُّوْا جَمِیْعًا، فَحَضَرُوْا
السَّاعَةَ سَرِیْعًا، فَقَالَ اَبُوْ جَهْلٍ یَا مُحَمَّدُ حَدِّثْ
قَوْمَكَ، بِمَا حَدَّثْتَنِیْ بِهٖ وَلَا تُمْسِكْ، فَقَالَ

صَلَّيْتُ الْبَارِحَةَ فِي مَكَّةَ، وَالْغَدَاةَ فِي الْوَادِ الْاَعْلٰى،
وَمَا بَيْنَ ذٰلِكَ فِي الْمَسْجِدِ الْاَقْصٰى، وَعُرِجَ بِيْ اِلَى
السَّمٰوَاتِ الْعُلٰى، حَتّٰى كُنْتُ مِنْ رَبِّيْ كَقَابِ قَوْسَيْنِ
اَوْ اَدْنٰى، وَكَلَّمَنِيْ رَبِّيْ بِكَلِمَاتٍ، وَفَرَضَ عَلَيَّ وَعَلٰى
اُمَّتِيْ خَمْسَ صَلَوَاتٍ، وَرَأَيْتُ الْجَنَّةَ وَالنَّارَ وَالْعَرْشَ
وَالْكُرْسِيَّ وَغَيْرَ ذٰلِكَ مِنَ الْعَجِيْبَاتِ، وَقَصَّ عَلَيْهِمُ
الْقِصَّةَ اِلٰى اٰخِرِ الرِّوَايَاتِ، فَقَالُوْا يَا مُحَمَّدُ حَدِّثْنَا
عَنِ الْاَنْبِيَاءِ وَمَنْ رَأَيْتَ مِنْهُمْ، فَقَالَ رَأَيْتُ اِبْرَاهِيْمَ
وَمُوْسٰى وَعِيْسَى ابْنَ مَرْيَمَ، وَغَيْرَهُمْ وَوَصَفَهُمْ،
فَقَالُوْا وَمَنْ رَأَيْتَ مِنْ قَوْمِنَا، قَالَ رَأَيْتُ عِمْرَانَ
ابْنَ جُنْدُبَ وَهُوَ رَجُلٌ قَصِيْرٌ، اَشْبَهُ مِنْكَ يَا اَبَا
جَهْلٍ يُعَذَّبُ فِي النَّارِ السَّعِيْرِ، فَلَمَّا سَمِعُوْا تَعَجَّبُوْا
وَتَوَقَّفُوْا بَيْنَ تَكْذِيْبٍ وَّتَصْدِيْقٍ، ثُمَّ انْطَلَقُوْا
اِلٰى اَبِيْ بَكْرِنِ الصِّدِّيْقِ، وَقَالُوْا لَهُ الْحَقْ صَاحِبَكَ
الرَّفِيْقَ، فَاِنَّهُ اُسْرِيَ بِهٖ اِلٰى بَيْتِ الْمُقَدَّسِ وَاِلَى

اِلَى السَّمٰوٰتِ السَّبْعِ فِیْ بَارِحَتِهٖ، ثُمَّ رَجَعَ اِلٰی مَکَّةَ
بِلَیْلَتِهٖ، فَقَالَ اَبُوْبَکْرٍ اَفَحَدَّثَکُمْ رَسُوْلُ اللّٰهِ
صَلَّی اللّٰهُ عَلَیْهِ وَسَلَّمَ بِهٰذَا الْمَقَالِ، فَاِنِّیْ اَشْهَدُ
اَنَّهٗ رَسُوْلُ اللّٰهِ وَاُصَدِّقُهٗ مِنْ اَخْبَارِ السَّمٰوٰتِ
فِیْمَا قَالَ، ثُمَّ قَالَ اَبُوْجَهْلٍ یَا مُحَمَّدُ صِفْ لَنَا بَیْتَ
الْمُقَدَّسِ عَنْ صِفَتِهٖ وَهَیْئَتِهٖ، فَوَصَفَ شَیْئًا وَّ
تَوَقَّفَ عَنْ شَیْءٍ مِّنْ صُوْرَتِهٖ وَمَاهِیَتِهٖ، فَجَلَّاهُ اللّٰهُ
لَهٗ فَاقْتَلَعَهٗ جِبْرِیْلُ وَحَمَلَهٗ عَلٰی جَنَاحِهٖ اِلٰی حَضْرَتِهٖ
فَقَالَ لَهُمْ اِسْئَلُوْا عَمَّا شِئْتُمْ مِنْ حَالَاتِهٖ وَذَکَرَ
لَهُمْ جَمِیْعَ اَسْبَابِهٖ وَاٰلَاتِهٖ، ثُمَّ سَاَلُوْهُ عَنِ الرَّکْبِ،
فَقَالَ مَرَرْتُ عَلٰی عِیْرِ بَنِیْ فُلَانٍ، وَقَدْ ضَلَّ بَعِیْرٌ
لَهُمْ، فَدَلَلْتُهُمْ عَلَی الْمَکَانِ، وَکَانَ فِیْ رَحْلِهِمْ مَاءٌ،
فَشَرِبْتُهٗ لِلْاِرْتِوَاءِ، وَطَرَحْتُ الْقِدَحَ هُنَالِكَ،
فَاسْئَلُوْهُمْ عَنْ ذٰلِكَ، ثُمَّ قَالُوْا اَخْبِرْنَا مَتٰی تَجِیْءُ
الْعِیْرُ، فَقَالَ عِنْدَ طُلُوْعِ الشَّمْسِ بِلَا نَکِیْرٍ فَانْتَظِرُوْا

ذٰلِكَ، حَبَسَ اللّٰهُ الشَّمْسَ حَتّٰى تَطْلُعَ الْعِيْرُ، فَقَالَ
رَجُلٌ هٰذِهِ الشَّمْسُ وَقَالَ اٰخَرُ هٰذِهِ الْعِيْرُ، فَاٰمَنَ
قَوْمٌ وَقَالُوْا اِنَّ هٰذَا الْحَقُّ وَّصَوَابٌ، وَكَانُوْا اَرْبَعَةَ
اٰلَافٍ مِّنَ الْحَاضِرِيْنَ عَلٰى قَوْلِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ
اللّٰهُ عَنْهُمْ اَجْمَعِيْنَ، وَكَذَّبَ بِهٖ اٰخَرُوْنَ فَرَمَوْهُ
بِالسِّحْرِ وَالْاِرْتِيَابِ، وَقَالَ اَبُوْبَكْرِنِ الصِّدِّيْقُ وَاللّٰهِ
لَقَدْ صَدَقْتَ يَا رَسُوْلَ اللّٰهِ، فَقَالَ يَا اَبَا بَكْرٍ اِنَّكَ
الصِّدِّيْقُ الْاَكْبَرُ، فَاَوْحَى اللّٰهُ تَعَالٰى اِلَيْهِ وَمَنْ
يُّطِعِ اللّٰهَ وَالرَّسُوْلَ فَاُولٰٓئِكَ مَعَ الَّذِيْنَ اَنْعَمَ
اللّٰهُ عَلَيْهِمْ مِّنَ النَّبِيّٖنَ وَالصِّدِّيْقِيْنَ وَالشُّهَدَآءِ
وَالصَّالِحِيْنَ، وَحَسُنَ اُولٰٓئِكَ رَفِيْقًا، ذٰلِكَ الْفَضْلُ
مِنَ اللّٰهِ وَكَفٰى بِاللّٰهِ عَلِيْمًا، دَعْوٰهُمْ فِيْهَا سُبْحَانَكَ
اللّٰهُمَّ وَتَحِيَّتُهُمْ فِيْهَا سَلَامٌ، وَاٰخِرُ دَعْوٰهُمْ اَنِ
الْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ٥ اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ وَ
بَارِكْ عَلَيْهِ ٥

23. ஹிகாயத் வரலாறு

அதன் பின் நாயகம் புராக்கின் மீதேறினார்கள். அவர்களை சுமந்துக் கொண்டு அதிவேகமாய் ஆகாயத்தில் பறந்து திருமக்கமா நகரம் வந்துச் சேர்ந்தது. நாயகம் ஜிப்ரீலே ! என்னுடைய ஜனங்கள் இவ்விஷயத்தில் என்னை உண்மைக் கொள்ளாது பொய்யாக்குவார்களே?வென்றார்கள். ஜிப்ரீல் முஹம்மதே ! உம்முடைய விஷயத்தை அபூ ஜஹ்ல் பொய்யாக்கிவித்த போதிலும், உமக்கு நண்பரான அபூபக்கர் சித்தீக் உண்மைக் கொள்வாரெனக் கூறி, நாயகத்தை வழியனுப்பி, விடைப் பெற்றுக் கொண்டு மறைந்துவிட்டார்.

நாயகம் வரும் வழியில் தங்கள் சிறிய தகப்பனார் அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுவை சந்தித்தார்கள். அவர் முஹம்மதே ! உமது விஷயமென்னவென்றார். நாயகம் எனது சிறிய தந்தையரே ! இன்றிரவு நான் மக்காவிலிருந்து பைத்துல் முகத்தஸ் வரையிலும் அதிலிருந்து ஏழு வானமளவும் இராவழி நடத்தப்பட்டேன். படைப்புக்கள் அடங்களின் அபூர்வ காட்சிகளை தரிசித்தேன் என முழு சரித்திரத்தையும் கூறினார்கள். அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் முஹம்மதே ! உம்முடைய சமூகத்தினர் உம்மை பொய்யரென்பார்கள். விசுவாசிக்காதவர்கள் இவ்விசயங்களை ஒரு காலும் நம்பிக்கைக் கொள்ளார்கள். ஆதலின் குறைஷி வமிசத்தினருள் எவரிடத்திலேனும் இவ்விஷயத்தை சொல்லாதீர் என்றார்.

நாயகம் அல்லாஹ்வின் மீது சத்தியமாக அவனிடத்தில் நானெடுத்திருக்கும் அருதிமானத்தைக் கொண்டு பேசியே தீர்ப்பேனெனக் கூறிவிட்டு தங்கள் சிறிய தந்தையார் மகள் உம்மு ஹானி ரழியல்லாஹு அன்ஹாவின் வீட்டில் பிரவேசித்ததும் தங்கள் படுக்கை விரிப்பில் நித்திரையின் சூடு தனியாதிருக்கக் கண்டார்கள். உம்மு ஹானி அவர்களிடமும் தங்கள் முழு வரலாற்றையும் பகர்ந்தார்கள். அதற்கவர்கள் அல்லாஹ்வுடைய ரசூலே ! என் தாயும், தகப்பனும் தங்கள் பாதத்திற்கே அர்ப்பணம் இது விஷயத்தை குறைஷி வமிசத்தினருக்கு சொல்லாதீர்கள். அவர்கள் தங்களை பொய்யர், அறிவீனர் என்பார்கள். தங்களைக்

கொண்டு நம்பிக்கை கொண்டவர்களும் ஒரு சமயம் மாறி விடுவாரென்றார்கள். நாயகம் அல்லாஹ்வின் மீது சத்தியமாக அவர்களுக்கு எல்லா விஷயங்களையும் சொல்லியே முடிப்பேன்.

அவர்கள் உண்மையில் விசுவாசங் கொண்டால் நன்று. இல்லாதிடினும் நான்பாராட்டப் போவதில்லை என்று சொல்லி அதன்பின் மஸ்ஜிதுல் ஹராமென்னும் சங்கைப் பெற்ற பள்ளியினுள் புகுந்தார்கள். அங்கு முதன் முதலாய் அபூஜஹ்லுப்னு ஹிஸாமே தென்பட்டான். அவன் நாயகம் அவர்களை காண்கவே அருகில் வந்து பரிகாசம் பண்ணுபவன் போல் சமுகத்தில் உட்கார்ந்துக் கொண்டு முஹம்மதே ! இன்னிரவு ஏதேனும் விசேஷங்கள் உண்டாவெனக் கேட்டான். அதற்கு நாயகம் உண்டு நான் பைத்துல் முகத்தஸென்னும் பரிசுத்தப் பட்டணம் வரையும், அதிலிருந்து வானலோகம், சுவர்க்கம் நரகம் வரையிலும், இராவழி நடத்தப் பட்டேனென தாங்கள் தரிசித்த, அதிசய, அந்தரங்க காட்சிகள் யாவற்றையும் அவனுக்கு போதித்தார்கள்.அவன் முஹம்மதே ! அப்பால் அதிகாலையிலே எங்கள் முன் தோன்றினீரோவென்றான். நாயகம் மெய்தான் என்றார்கள். அபூஜஹ்ல் இது விஷயத்தை உம்முடைய சமூகத்திற்கு சொல்வீராயென்றான்.

நாயகம் அவர்கள் ஆமென்றார்கள். உடனே அபூஜஹ்ல் எழுந்து ஓ ! கஃபுப்னு லுஅய் உடைய மக்களே ! எல்லோரும் விரைந்து வாருங்கள் என உரக்க கூவியழைத்தான். அது கேட்டவர்களெல்லாம் அதி சீக்கிரம் வந்து குழுமினார்கள். அபூ ஜஹ்ல் முஹம்மதே ! இதோ உம்முடைய சமூகத்தினருக்கு என்னிடம் சொன்ன சரித்திரங்கள் ஒன்றையாவது மறையாமல் சொல்லுமென்றான். நாயகம் நான் இற்றிரவு மக்காவில் தொழுதேன். காலையில் "வாதில் அஃளா"வில் தொழுதேன். அதற்கிடையில் மற்றும் தொழுகைகளை பைத்துல் முகத்தஸில் தொழுதேன்.

இன்னும் நான் எழுவான்களுக்கு மேலால் மிஃராஜுக்கேற்றி செல்லப்பட்டு எனது நாயனிடத்தில் "காபகவ்ஸைனி அவ்அத்னா" வென்னும் சமீப தானத்திலாயிருந்தேன். என்னுடைய ஆண்டவன் என்னோடு திருவசனம் புரிந்தான். என் மீதும், எனது சமூகத்தினர் மீதும், ஐந்து வேளைத் தொழுகையை விதியாக்கினான். இன்னும் நான் சுவர்க்கம், நரகம், அர்ஷ், குர்ஷ், முதலிய அநேக அதிசய

அற்புதங்களையும் தரிசித்தேனென ஆதியோடு அந்தம் எடுத்துரைத்தார்கள்.

இவைகளைக் கேட்டுக் கொண்டிருந்த அபூ ஜஹ்ல் முஹம்மதே ! தீர்க்கதரிசிகளில் யார் யாரை கண்டீர் என்று கேட்கவே அதற்கு நாயகம் இப்ராஹீம், மூஸா, ஈஸப்னு மர்யம் அலைஹிமிஸ்ஸாம் முதலியவர்களைக் கண்டேனென்று, அவர்களின் குணம், குறிகளையும், இலட்சணங்களையும் வருணித்துக் கூறினார்கள். அபூஜஹ்ல் எங்கள் ஆசாமிகளில் யாரை கண்டீரென்றான். நாயகம் இம்ரானுப்னு ஜுன்துபை கண்டேன். ஹேய் அபூ ஜஹ்லே ! அவன் உன்னைப் போன்று குள்ள மனிதன். எரிநரகில் வேதனைப்படுகிறான் என்றார்கள். இவ்வற்புதங்களை கேட்டுக் கொண்டிருந்தவர்கள் மிக்க ஆச்சரியமுற்று இதைச் சிலர் நம்பியும், சிலர் நம்பாமலுமாக எழுந்து அபூபக்கர் சித்தீக் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் சென்று அபூபக்கரே ! உமது தோழர் முஹம்மதைச் சேர்ந்துக் கொள்ளும், அவர் இன்றிரவு “பைத்துல் முகத்தஸ்” முதல் ஏழு வானங்கள் வரை ஏற்றிச் செல்லப்பட்ட அதே இரவில் மக்கமா நகரம் வந்து சேர்ந்து விட்டாராமென்றனர்.

அப்பொழுது அபூபக்கர் சித்தீக் ரழியல்லாஹு அன்ஹு நாயகம் உங்களுக்கு அவ்விதம் அறிவித்தார்களா? அப்படியானால் திட்டமாக அவர்கள் அல்லாஹ் தஆலாவுடைய திருத்தூதரென்னு சாட்சிக் கூறுகிறேன். அவர்கள் சொல்லும் வானலோகத்தின் அற்புத சமாச்சாரங்களை அப்படியே ஒப்புக் கொள்கிறேன் என்றார்கள். அதன்பின் அபூஜஹ்ல் முஹம்மதே ! நீர் பைத்துல் முகத்தஸைப் பற்றிய கோலங்குறிகளை எங்களுக்கு வர்ணியுமென்ற போது, நாயகம் அப்படியே சிலதை வர்ணித்து வருகையில் அவர்களுக்கு அல்லாஹ் தஆலா பைத்துல் முகத்தஸை கண்முன் வெளியாக்கினான். நாயகம் அக்கூட்டத்தினரை நோக்கி அதன் ஒவ்வொரு அம்சங்களையும் உறுப்பினங்களையும் விரித்துரைத்தார்கள்.

பின்பு, அவர்கள் தங்கள் யாத்திரைக் காரர்களைப் பற்றிக் கேட்கவே நான் இன்னின்ன கிளையாரின் யாத்திரைக் காரரோடு சென்றேன். அவர்களின் ஒட்டகை வழித்தப்பிப் போயிற்று. நான் அவர்கட்கு துப்பறிவித்தேன். இன்னும் அவர்களிடம் தண்ணீர்

இருந்தது. நான் தாகத்தை தீர்த்துக் கொள்வதற்காக வாங்கிக் குடித்துவிட்டு கெண்டியை அங்கேயே போட்டு விட்டேன். நீங்கள் அது விஷயத்தைப் பற்றி அவர்களிடம் கேட்டறிந்துக் கொள்ளலாம் என்றார்கள். அவர்கள் அவ்வாகனக் காரர்கள் இங்கே எப்பொழுது வருவார்கள் என கேட்டதற்கு நாயகம் சூரியனுதிக்கும் போது என்றார்கள்.

அது போலவர்களின் வரவை எதிர்பார்த்திருந்தனர். அந்த யாத்திரிகர்கள் வரும் வரை அல்லாஹ் தஆலா சூரியனைத் தடுத்து வைத்திருக்கையில் ஒரு மனிதன் இதோ சூரியனுதித்து விட்டதென்றான். மற்றொருவன் இதோ யாத்திரீகள் வந்து விட்டனரென்றான். இதனால் சில ஜனங்கள் ஈமான் நன்னம்பிக்கை கொண்டவர்களாய் இது உண்மையான "முஃஜிஸத்" அதி அற்புதமென்றனர். இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்களின் சொல்படி அவ்விதம் சமூகமானவரில் ஈமான் நன்னம்பிக்கைக் கொண்டோர் 4000 பேர்களாகும். இவர்கெளல்லோருக்கும் அல்லாஹ் தஆலாவின் கருணையுண்டாகுக. மற்றவர்களிதை பொய்யாக்கி சூனியமென்றனர். அதன்பின் அபூபக்கர் சித்திக் ரழியல்லாஹு அன்ஹு அல்லாஹ் தஆலாவின் மீது சத்தியமாக அல்லாஹ்வின் ரசூலே தாங்கள் உண்மை சொன்னீர்களென்றனர்.

நாயகம் அபூபக்கரே ! நீர் "சித்தீக்குல் அக்பர்" பெரிய உண்மைவான் என்றார்கள். அல்லாஹ் தஆலாவிடமிருந்து திருவுளம் வந்தது. அல்லாஹ்வுக்கும், ரசூலுக்கும் வழிப்பட்டால் அவர்கள் நபிமார்கள், சித்தீகீன்கள், ஷுஹதாக்கள், ஸாலிஹீன்கள் என்னும் நல்லடியார்களுடனிருப்பார்கள். அவர்களே நல்ல அழகான துணைவராவர் என்பதாகும். அதுவே அல்லாஹ் தஆலாவின் திரு வரிசைக் கொடையுமாகும். அல்லாஹ் தஆலாவே அறிவாளரில் தக்க போதுமானவன் சுவர்க்கத்தில் அவர்களின் பிரார்த்தனையானது அல்லாஹ்தஆலாவை ஸ்தோத்திரம் செய்வதும், அவர்களின் காணிக்கை, ஒவ்வொருவரும் ஸலாம் சொல்லிக் கொள்வதும் அப்பிரார்த்தனையின் தீர்மானம் அகில உலகத்தினரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே எல்லா ஸ்துதியங்களுமென்று புகழ்வதுமாகும்.

١ بِحَمْدِكَ يَا مُسْتَوْجِبَ الْحَمْدِ وَالشُّكْرِ
وَاِنْ لَّمْ نَكُنْ نُحْصِيْ ثَنَاءَكَ بِالذِّكْرِ

٢ فَكَيْفَ وَقَدْ اَسْبَغْتَ مِنْ خَيْرِ نِعْمَةٍ
عَلَيْنَا وَكَمْ اَتْبَعْتَهَا نِعْمَةَ الْاِثْرِ

٣ فَمِنْ خَيْرِهَا اِرْسَالُ رُسْلِكَ فِي الْوَرٰى
خُصُوْصًا بِخَيْرِ الرُّسْلِ فِيْنَا مَعَ الْبُشْرِ

٤ وَكَمْ لَكَ فِيْنَا مِنْ اَيَادِيْ اَجِلَّةٍ
بِلَيْلَةِ مِعْرَاجٍ وَّجَلَّتْ عَلَى الْقَدْرِ

٥ فَهَا نَحْنُ جَمْعًا قَدْ قَرَأْنَا بِحُبِّهٖ
اَحَادِيْثَ مِعْرَاجٍ بِقِصَّةِ مَا اُسْرِيْ

٦ فَيَا رَبِّ فَضِّلْ بِالْقَبُوْلِ وَبِالرِّضَا
بِمَنْ قَرَأُوْا فِيْهَا بِذَا النَّظْمِ وَالنَّثْرِ

٧ وَمَنْ سَمِعُوْا مِنَّا وَمَنْ حَضَرُوْا هُنَا
وَمَنْ عَظَّمُوْا اَوْ سَاعَدُوْا اَوْ خِدْمَةَ النَّصْرِ

٨ وَمَنْ اَنْفَقُوْا اَوْ اَطْعَمُوْا بِمَحَبَّةٍ

وَمَنْ طَيَّبُوْا اَوْ اَنْثَرُوْا الزَّهْرَ بِالْعِطْرِ

٩ وَمَنْ حَثَّنِي اِنْشَا مُحَمَّدْ عُمَرِنَا

وَعَبْدِالْكَرِيْمِ بْنِ اَحْمَدَ ذِي الشُّهُرِ

١٠ خُصُوْصًا لِّذَيَّا الْمَلْكَرِيِّ فَاِنَّهٗ

مَشُوْمٌ شَرِيْرُ الطَّبْعِ فِي الصِّغْرِ وَالْكِبْرِ

١١ وَلَا فِيْهِ خَيْرٌ قَطُّ مِنْ كُلِّ وِجْهَةٍ

سِوٰى مَدْحِ مَحْبُوْبِيْ وَقَدْ طَابَ مِنْ ذِكْرِ

١٢ فَحَسْبِي بِهٖ اَنْ يَّغْمِزُوْا لِيْ بِطَرْفِهٖ

لِكَيْ يَسْلُكُوْنِيْ فِي الشَّفَاعَةِ فِي الْحَشْرِ

١٣ كَذَاكَ اُصُوْلِيْ مَعْ فُرُوْعِيْ وَاِخْوَتِيْ

وَاَهْلِيْ وَاَحْبَابِيْ لَدَى الْعُسْرِ وَالْيُسْرِ

١٤ وَيَا رَبَّنَا افْتَحْ بَابَ غَيْبِكَ رَحْمَةً

بِمَجْلِسِنَا هٰذَا الْمُبَارَكِ الذِّكْرِ

١٥ وَكُنْ قَيِّمًا فِيْنَا وَوَالِيْ اُمُوْرِنَا

وَصِلْنَا بِعُرْفٍ دَّ بِنُكْرٍ وَّلَا هَجْرِ

١٦ وَنَسْأَلُكَ التَّوْفِيْقَ فِيْمَا تُحِبُّهٗ
وَتَرْضٰى مِنْ اٰدَابِ السُّلُوْكِ مَعَ السَّيْرِ
١٧ مِنْ اِصْلَاحِ اَعْمَالٍ وَّاِخْلَاصِ تَوْبَةٍ
مِنَ الْبِرِّ وَالتَّقْوٰى مِنَ الشُّكْرِ وَالصَّبْرِ
١٨ وَنَرْجُوْكَ اَنْ تَعْفُوْا جَمِيْعَ ذُنُوْبِنَا
وَتَغْفِرَ زَلَّاتِ الْكَبَائِرِ وَالصِّغْرِ
١٩ وَتُسْبِلَ عَنْ سَوْأٰتِنَا سِتْرَ قَابِلٍ
مُقِيْلٍ لِّاَعْثَارٍ وَّاَعْذَارِ ذِى الْعُذْرِ
٢٠ وَتَعْمُرَنَا فِى الدِّيْنِ خَيْرَ عِمَارَةٍ
عَلٰى مِلَّةِ الْاِسْلَامِ لَامِلَّةِ الْكُفْرِ
٢١ عَلٰى خَيْرِ اِيْمَانٍ عَلَى الْحَقِّ وَالْهُدٰى
عَلٰى طِيْبِ عَيْشٍ فِى الْحَيٰوةِ بِلَا عُسْرٍ
٢٢ عَلٰى كَلِمَةِ التَّوْحِيْدِ عِنْدَ مَمَاتِنَا
بِخَاتِمَةٍ حُسْنٰى بِلَا فِتْنَةِ الْقَبْرِ
٢٣ اِلٰهِىْ اَعِذْنَا مِنْ عَذَابِ جَهَنَّمٍ

اَمَانًا وَّ اَدْخِلْنَا الْجِنَانَ عَلَى الْقَصْرِ

٢٤ وَهٰذَا رَسُوْلُ اللّٰهِ فَلْيَشْفَعًا بِنَا

لَنَا فِيْهِ حَقٌّ مِّنْ حُقُوْقِيَّةِ الذُّخْرِ

٢٥ مُحَقِّقُ لَنَا مِنْكَ اللِّقَا بِلِقَائِهٖ

وَذَاكَ الْمُنَافُ الْكُلُّ خَيْرٌ عَلٰى خَيْرِ

٢٦ وَصَلِّ عَلٰى هٰذَا النَّبِيْ خَيْرِ مَنْ سَرٰى

اِلَيْكَ وَخَيْرِ الْعَبْدِ نَحْوَكَ قَدْ اُسْرِيْ

٢٧ وَسَلِّمْ عَلٰى هٰذَا الرَّسُوْلِ وَاٰلِهٖ

وَاَوْلَادِهٖ مَعْ اَهْلِهِ السَّادَةِ الطُّهْرِ

٢٨ وَاَيْضًا عَلَى الصِّهْرَيْنِ وَالْخَتْنَيْنِ وَالْ

بَقِيَّةِ مِنْ اَهْلِ الْبِشَارَةِ مِنْ عَشْرِ

٢٩ وَسَائِرِ اَصْحَابٍ كِرَامٍ وَّتُبَّعٍ

لَهُمْ بِالْهُدٰى فِي الدِّيْنِ كَالْاَنْجُمِ الزُّهْرِ

٣٠ كَذَا وَعَلَيْنَا كُلَّمَا الْحَمْدُ وَالثَّنَا

لِوَجْهِكَ يَا مُسْتَوْجِبَ الْحَمْدِ وَالشُّكْرِ

24. ஹிகாயத்தின் வரலாறு

1. எல்லாப் புகழுக்கும், துதிக்கும் சுதந்திர பாத்தியமுடைய நாயனே! உனது புகழை நாங்கள் மட்டிட இயலாதெனினும், உனது புகழை கொண்டே முடிவுக்கு வந்தோம்.

2. எப்படியென்றால் நீயோ எங்கள் பால் நல்ல நிஃமத்துக்களை நிரம்பக் குவித்து அதன் மேலும் எம்மட்டோ அளவற்ற பௌஜ் பாக்கியங்களை தொடர்ந்தருளியிருக்கிறாய்.

3. அவைகளில் ஹைரானநிஃமத்தானது, ஹல்க்குகளில் உனது ரசூல் மார்களை அனுப்பியதும், அதிலும் பிரதானமாக ரசூல்மாரில் ஹைரான நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை எங்களில் நன்மாராயம் கொண்டு விடுத்ததுமேயாகும்.

4. இன்னும் எம்மாத்திரமோ உனக்குரிய மகத்தான நற்பாக்கியங்கள் எங்கள் பொருட்டு இந்த மிஃராஜென்னும் விண்ணோதய யாத்திரையில் புதைந்திருக்கின்றன.

5. இதோ நாங்கள் அந்நாயகரின் உகப்பினால் அவர்களின் மிஃராஜினது திருவாய்மைகளென்னும் ஹதீதுகளையும், ஆகமங்களையும் ஓதினோம்.

6. ஆண்டவனே! உனது நல்வரிசையினால் அவ்வோதலை அங்கீகரித்து அச்சரித்திர வரலாற்றில் இந்த பைத்துகள் வசனங்களை ஓதினோர்க்கும்.

7.இன்னுமிதை கேட்போர், இம்மஜ்லிஸில் சமூகமாயிருப்போர், சங்கை, மரியாதையோடு சிறப்பித்தோர், பணிவிடை, உதவி ஒத்தாசை புரிந்தாதரவளித்தார்க்கும்

8. இன்னும் அந்நாயகரில் நற்புரீதியுடன் பொருள் போஜன முதலிய தருமங்களை செய்தோர்க்கும், பரிமளவாசனைத் திரவியங்களால் இம்மஜ்லிஸை மணமாக்கினோர்க்கும்.

9. இன்னுமிந்த மிஃராஜ் மாலை கோவை செய்யும் படி என்னைத் தூண்டுதல் செய்த எங்கள் முஹம்மது உமருக்கும், பிராக்கியாதிப் பெற்ற அஹ்மது லெப்பை மரைக்கர் குமாரர் அப்துல்கரீமுக்கும்

10. முக்கியமாக மல்கரீ வம்சத்திலுள்ள இச்சிறு பயலுக்கும் உனது திருவருள் பொருத்தத்தை தந்தருள்வாயாக! நிச்சயமாக அவனோ இளமையிலும், முதுமையிலும் சுத்த நீசனும், துஷ்டசுபாவியுமானவன்.

11. இன்னும் அவன் நமது மஹ்பூப் நாயகரை மணமாற புகழ்ந்து வாழ்த்து வதை தவிர்த்து யாதொரு நன்மையும் அவனில் அறவே காணப் படுவதில்லை.

12. ஆகவே அப்புண்ணிய நாயகரால் எனக்கு போதிய உபகாரமாவது மறுமை நாளில் தங்கள் கடைக்கண் ஜாடையினால் தங்கள் ஷபாஅத்தின் தாவட்டத்தில் என்னையும் தொடுத்து விடுவதாகும்.

13. அவ்வாறே எனது தாய், தந்தையர், சந்ததி சகோதரர், பாண்டு வத்தினர்களுக்கும், இன்னும் எனது சுக துக்கங்களில் ஈடுபடும் சகாக்களான சிநேகிதர் எல்லோரையும் மன்றாடி மீட்பதுமாகும்.

14. எங்கள் ஆண்டவனே! இந்த பரக்கத்தான மிஃராஜ் வாழ்த்தையோதும் எங்களுடைய இம்மஜ்லிஸில் உனது ரஹ்மத்தினை மறைவான வாயிலைத்திறந்து வைப்பாயாக!

15. இன்னும் நீயே சகல காரியாதிகளிலும் சர்வாதிகாரம் பெற்ற எங்கள் உத்தம நிர்வாகியாயிருந்தருள். இன்னும் விருப்பு, மருப்பின்றி எல்லா நன்மைகளிலும் எங்கள் சார்பாயிருந்தருள்.

16. இன்னும் உனதுபிரியம் பொருத்தத்திற்குரிய மெஞ்ஞான வழி நடை பழக்க வழக்கத்திலும்

17. ஸாலிஹான நல்அமல்கள்,கலப்பற்ற தவ்பா நன்றி, நலம்,தக்வா,சுக்ரு, ஸப்ரு முதலிய நற்கிரியைகளிலும் உன்னிடம் நல்வரம் கோருகின்றோம்

18. இன்னும் எங்கள் பிசகு, பிழை,குற்றம், குறை ,தவறு, முதலிய சகல பெரிய சிறிய பாவ தோசங்களனைத்தையும் மன்னித்தருளும்படி உன்னை விரும்பி கேட்கின்றோம்

19. இன்னும் உத்ரு உடையான் உத்ரை அங்கீகரித்து சருகுதலை நிவர்த்திப்பவன் பாண்மையாய் எங்கள் மானபங்கத்தை மறைத்தருள்

20. எங்களை குப்ரு, ஷிர்க்கின் மார்க்கத்தைவிட்டும் காப்பாற்றி,

தீனுல் இஸ்லாமென்னும் சன்மார்க்கத்தில் தக்கப்படி பரிபாலித்து பராமரித்தருள்

21. உண்மையான, நேர்மையான நல்ல ஈமானுடன் கஷ்டமற்ற, மணமான சுக ஜீவிய ஜெயமத்திலும் எங்களை தாபரித்தருள்

22. எங்கள் மௌத்திடத்தில் தவ்ஹீதென்னும் ஏகத்துவத்தின் முக்தி மந்திரமாகிய கலிமாவின் பேரில் அழகிய முத்திரையிட்டு, கப்ரின் பித்னாக்களையும்எங்களை விட்டும் அகற்றியருள்

23. எங்கள் ஆண்டவனே! எங்களை ஜஹன்னமென்னும் நரக வேதனையைவிட்டும் காப்பாற்றி, நித்யானந்த சுவனப்பதியின் மணமாளிகையில் புகுவித்தருள்

24. இதோ அல்லாஹ்வின் ரசூல் எங்களின் பொருட்டு மன்றாடு வார்களாக ஏனெனில் நாங்கள் அவர்களை தங்கரியம் கொண்டாடும் பாத்தியம் அவர்களில் எங்களுக்குண்டு

25. ஆகையினால் அவர்களின் திருக்காட்சியை உனது பேரானந்த தீதாருடன் எங்களுக்கு நிச்சய மாக்கியருள் இதுவே எங்கள் பேராசையும் அபிலாஷையும், மேலெண்ணமுமாகும் மற்றவை யெல்லாம் மென்மேலும் ஹைராயிருக்கும்.

26. இனி உனது திருச்சமூகம் மிஃராஜ் நடத்திவிக்கப்பட்ட நல்லடியாராகிய ஹைரான இந்த நபியவர்கள் மீது ஸலவாத் சொல்வாயாக

27. இன்னுமிந்த ரசூல் நாயகர் மீதும், பரிசுத்த நாயகங்களான புத்திர பவுத்திர, கிளை, கோத்திர, பாதியஸ்த, குடும்பத்தினர் மீதும் ஸலாம் சொல்லியருள்

28 மேலும் அவர்களின் இரு மாமனார், இரு மருகர், மற்றும் நன்மாராயம் பெற்ற பன்மரில் மீதியான அறுவர்கள் மீதும்

29. இன்னும் தீனுல் இஸ்லாமில் அழகிய நட்சத்திரங்கள் போன்ற சங்கைவான்களான சகாக்கள் மீதும் சன்மார்க்க நல்வழியில் அவர்களை பின்பற்றியவர்கள் மீதும்

30. அவ்வாறே எங்கள் மீதும்ஸலவாத்,ஸலாம் உண்டாவதாக! ஆண்டவனே! சகலபுகழுக்கும், நன்றிக்கும் பாத்தியமுடைய உனக்கே எல்லாப் புகழும், துதியும் காலாகாலமும் உனது மகத்துவ திருமுகத்திற்கே சிறப்பாயிருக்கக் கடவது.

دُعَاءٌ

اَللّٰهُمَّ يَا مَنْ مُدَّتْ اِلَيْهِ اَيَادِيْ اَمَانِي الْبَرِيَّةِ فِيْ كُلِّ الْمُهِمَّاتِ الدِّيْنِيَّةِ وَالدُّنْيَوِيَّةِ وَيَا مَنْ يَنْتَهِيْ اِلَيْهِ اَوْجُهُ الْاٰمَالِ حَيْثُ يَنْقَطِعُ الرَّجَاءُ وَيَا مَنْ اِلَيْهِ الْمُشْتَكٰى وَالْمَفْزَعُ فِي الشِّدَّةِ وَالرَّخَاءِ وَيَا مَنْ يُّجِيْبُ الْمُضْطَرَّ اِذَا دَعَاهُ وَيَا مَنْ لَا يَرُدُّ الْمُسْتَنْجِدَ بِبَابِهٖ عَنْ عَطَائِهٖ وَجَدْوَاهُ، نَسْأَلُكَ بِفَضْلِ فَيْضِ اَقْدَسِ وُجُوْبِ رَحْمَتِكَ الْاِمْتِنَانِيَّةِ مِنْ حَضْرَةِ خَزَائِنِ غَيْبِكَ الْقُدْسِيَّةِ وَنَتَوَسَّلُ بِمُطَهَّرِ جَنَابِ رُوْحِ قُدْسِكَ وَخَازِنِ رَحْمَتِكَ وَنَدِيْمِ حَضْرَتِكَ وَنَجِيِّ غَيْبِكَ وَخَلِيْفَةِ مَمْلَكَتِكَ وَعَرُوْسِ مَنَصَّتِكَ سَيِّدِنَا مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ اَنْ تُصَلِّيَ وَتُسَلِّمَ عَلَيْهِ وَعَلٰى اٰلِهٖ وَاَصْحَابِهِ الْاَمْجَادِ الْاَنْجَابِ وَحَمَلَةِ شَرِيْعَتِهٖ اِلٰى يَوْمِ الْفَصْلِ وَالْخِطَابِ وَاَنْ تُوَفِّقَنَا لِاِخْلَاصِ الْقَوْلِ وَالْفِعْلِ

وَالنِّيَّةِ، وَتُلْهِمَنَا الْخَيْرَاتِ فِى الْاَحْوَالِ وَالْاَعْمَالِ الْمَحْمُوْدَةِ الْمَرْضِيَّةِ، وَتُخَلِّصَنَا مِنْ اَيَادِى الْاَعَادِى الدِّيْنِيَّةِ وَالدُّنْيَوِيَّةِ، وَتُسَلِّمَنَا مِنْ مَصَائِدِ مَكَائِدِ النَّفْسَانِيَّةِ وَالشَّيْطَانِيَّةِ، اَللّٰهُمَّ اِنَّا قَدِ اجْتَمَعْنَا وَقَرَأْنَا اَحَادِيْثَ مِعْرَاجِ نَبِيِّكَ وَاَخْبَارَ اِسْرَاءِ عَبْدِكَ وَرَسُوْلِكَ، فَاَلْبِسْنَا خِلَعَ الرِّضٰى وَالْقَبُوْلِ، وَتَوِّجْنَا بِتَاجِ الْعِزَّةِ وَالْكَرَامَةِ وَالتَّبْجِيْلِ، وَاجْعَلْ مَدَائِحَنَا فِيْهِ بِالنِّظَامِ وَالنِّثَارِ مِنْ مَثَابَةِ مَثُوْبَاتِ حَسَنَاتِ الصُّلَحَاءِ الْاَخْيَارِ، وَتَجْمَعَ بَيْنَنَا وَبَيْنَهٗ فِىْ دَارِ الْقَرَارِ، اَللّٰهُمَّ اكْتُبْ لَنَا سَوَابِكَ رَحْمَتِكَ، وَسَوَابِغَ نِعْمَتِكَ، وَنَوَامِيَ بَرَكَتِكَ، وَافْتَحْ لَنَا اَبْوَابَ جَنَّتِكَ، فِىْ نَدْوَتِنَا هٰذِهِ الْمُبَارَكَةِ الشَّذِيَّةِ، فَضْلًا لِّهٰذَا الْمَلَكِيِّ الْجَامِعِ الْمُتَرْجِمِ لِهٰذِهِ الْخَصَائِصِ النَّبَوِيَّةِ، وَالْاَحَادِيْثِ الْمِعْرَاجِيَّةِ، وَلِقُرَّائِهَا، وَسُمَّاعِهَا،

وَحُضَّارِهَا، وَكُتَّابِهَا، وَلِمَنْ اَجْرٰى هٰذَا الْعَمَلَ
الْجَلِيْلَ، وَالْخَيْرَ الْجَزِيْلَ، فِيْ هٰذِهِ اللَّيْلَةِ بِالْكَرَامَةِ
وَالتَّبْجِيْلِ، اَللّٰهُمَّ اجْعَلْ جَمْعَنَا هٰذَا جَمْعًا مَّرْحُوْمًا
وَتَفَرُّقَنَا مِنْ بَعْدِهٖ تَفَرُّقًا مُّبَارَكًا مَّعْصُوْمًا،
وَلَا تَجْعَلْ فِيْنَا وَلَا مِنَّا وَلَا مَعَنَا شَقِيًّا وَّلَا مَطْرُوْدًا
وَّلَا مَحْرُوْمًا، اَللّٰهُمَّ اَصْلِحْ اَحْوَالَنَا، وَاَحْسِنْ
اَعْمَالَنَا، وَبَلِّغْ اٰمَالَنَا، وَلَا تُؤَاخِذْنَا بِقَبِيْحِ
اَفْعَالِنَا، وَلَا تُجَازِنَا بِسُوْءِ اَعْمَالِنَا اَللّٰهُمَّ اغْفِرْ
لَنَا وَارْحَمْنَا، وَلِوَالِدِيْنَا وَلِاَهْلِيْنَا، وَلِاَوْلَادِنَا وَلِاِخْوَانِنَا
وَلِاَشْيَاخِنَا وَلِاَحْبَابِنَا، وَلِجَمِيْعِ الْمُسْلِمِيْنَ بِرَحْمَتِكَ
يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ، وَنَسْئَلُكَ اَللّٰهُمَّ بِحَقِّكَ يَا
رَحْمٰنُ يَا رَحِيْمُ، وَبِحَقِّ نَبِيِّكَ الْكَرِيْمِ وَبِمَا كَانَ
بَيْنَكَ وَبَيْنَهٗ فِيْ حَضْرَةِ الْخَلْوَةِ وَالْجَلْوَةِ مِنَ السِّرِّ
الْقَدِيْمِ، وَالْقُرْبِ الْعَظِيْمِ، وَالْوَصْلِ الْجَسِيْمِ فِيْ
رَفْرَفِ الْاُنْسِ وَالْجَلَالَةِ وَالتَّعْظِيْمِ اَنْ تُعْتِقَ

رِقَابَنَا وَرِقَابَ اٰبَائِنَا وَاُمَّهَاتِنَا وَجَمِيْعِ الْمُسْلِمِيْنَ

بِالْهَيْبَتِكَ مِنَ النَّارِ وَتُدْخِلَنَا الْجَنَّةَ يَا رَبَّ الْعٰلَمِيْنَ،

وَاَنْ تُصَلِّيَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدِ كَ الْمُخْتَصِّ بِالْمِعْرَاجِ

وَالْاِسْرَا، وَالْمَخْصُوْصِ بِالْوَحْدَةِ الْكُبْرٰى وَالْمُخَصَّصِ

بِسِرِّ مَقَامِ اَوْ اَدْنٰى، اَلَّذِيْ لَمْ يَصِلْ اِلَيْهِ اَحَدٌ،

وَلَا يُكْشَفُ عَنْهُ بِجِدٍّ وَّلَا جُهْدٍ، وَلَوْ لِوَاحِدٍ مِّنَ

الْاَنْبِيَآءِ وَالْمُرْسَلِيْنَ، وَلَا الرُّوْحَانِيَّةِ

الْمُقَدَّسَةِ وَالْمَلَائِكَةِ الْمُقَرَّبِيْنَ، وَعَلٰى اٰلِهٖ

اَهْلِ الْجُوْدِ وَالْكَرَمِ، وَاَصْحَابِهٖ ذَوِي الصِّدْقِ

وَالْقَدَمِ، وَعَلٰى سَائِرِ اُمَّتِهٖ خَيْرِ الْاُمَمِ وَتُسَلِّمَ

تَسْلِيْمًا كَثِيْرًا دَائِمًا اِلٰى يَوْمِ الدِّيْنِ، وَالْحَمْدُ لِلّٰهِ

رَبِّ الْعٰلَمِيْنَ ٥

துஆவின் உரை

எங்கள் ஆண்டவனே ! சர்வ சம்பூரண இலட்சங்களுக்குரிய நாயகனே! இகபரலோகத்தின் சகல அத்தியாவசியங்களில் அடியாரின் ஆசா, பாசங்களென்னும் கரங்களை ஏந்தி பிரார்த்திக்கத் தக்க பாத்தியமுடைய நாயனே ! எவர் தம்பமுமுற்று பரிதபிக்கும் நிற்கதியில் ஏழைகளாகிய எங்கள் அபிலாஷைகளென்னும் முகங்கள் முன்னோக்கும் முடிவான இலட்சியமாகிய இறைவனே ! சர்வ சுக, துக்கங்களிலும் எங்கள் முறைப் பாட்டிற்கிரங்கி ஆதரித்து அபயமளிக்கும் அடைக்கலமாகிய வல்லவனே ! கொடிய கஷ்ட, நஷ்ட சங்கடங்களில் சிக்குண்டு கதறியழைப் போர்க்கு நல்உத்தாரம் அளிக்கும் மன்னானே ! உனது வாயிலே கதியென சரணடைவோர்க்கு தடையின்றி, தஞ்சமளித்து தருமக் கொடைக் கொடுத்தாளும் ரஹ்மானே ! நாங்கள் உனது பரிசுத்த அந்தரங்க பொக்கிஷத்தின் சன்னிதியில் தர்மார்த்த விதியாகிய கருணைக் கடலின் பால் கனிந்தொழுகும் உனது திவ்விய ரஹ்மத்தென்னும் திருவருளை முன்னிட்டு உன்னை வேண்டி நிற்கின்றோம்.

இன்னும் நாங்கள் உனது மகா பரிசுத்த ஆத்மாவும், கிருபை பொக்கிஷப் பதியும் திருச்சமூக சகாவும், அந்தரங்க இரட்சகரும், தோத்திய அரசாங்க இஸ்தானிகரும், மணவறை மாப்பிள்ளையுமாகிய எங்கள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கொண்டு உன்னிடம் சிபாரிசு தேடுகிறோம். நீ அம்மகிமைக்குரிய மகான் மீதும், அவர்களின் கவுரவமிக்க புண்ணிய ஆத்மாக்களாகிய இனமித்திர சகாக்கள் மீதும் இன்னும் நீதி, விசாரணை நாள் பரியந்தம் அவர்களின் சன்மார்க்க பொறுப்பேற்ற பாரவாங்களாகிய வலிமார், குத்புமார் நல்லவர்கள் மீதும் உனது திருக்கருணை ஈடேற்றம் பாலித்தருள்வாயாக !

ஆண்டவனே ! இன்னுமெங்கள் மனோவாக்கு காயங்களாகிய திரிகரணங்களும், பரிசுத்தமடையும் பொருட்டு நல்வரம் தந்தருள். எங்கள் சகல காரியாம்சங்களிலும் உனது பொருத்தம் புகழுக்குரிய நன்மைகளை எங்களுக்கு நல்லுதிப்பாக்கியருள். எங்கள் வைதீக, லௌகீக சத்துருக்களின் கைகள் மேலோங்கா வண்ணம் எங்களை

தற்காத்தருள் கொடிய கொடு, மனோ மமதை, அகங்கார முதலிய துஷ்ட ஷைத்தான்களின் மாய கபட வலைக்குள் மாட்டி மடிந்து போகாமல் எங்களை இரட்சித்து காப்பாற்றியருள்.

ஆண்டவனே ! நாங்கள் உனது திருநபிகள் நாயகரின் அருள் வாய்மைகளென்னும் வின்னோதய ஆகமங்களையும், உனது நல்லடிமை தூதரின் சரித்திரங்களையும் ஓதி வாழ்த்தினோம். ஆகையால் உனது கபூல் பொருத்தமென்னும் பரிவட்டங்களை எங்களுக்கு போர்த்தியருள். சங்கை சிறப்பு மகத்துவமென்னும் கிரீடத்தை எங்களுக்குச் சூட்டியருள். இன்னுமவர்களின் புகழாகிய இந்த கோவைகளையும், வசனங்களையும் நல்லோர்கள், சாலிஹீன்களின் நல்வணக்கங்களின் ஸ்தானங்களில் ஆக்கி வைத்தருள். இன்னும் நித்தியானந்த நற்சுக வாழ்வில் தரிப்பாடான சுவனப் பதியில் எங்களையும், அவர்களோடு சேகரமாக்கியருள்.

எங்கள் ஆண்டவனே ! உனது முதன்மையான நற் கருணையையும், சம்பூரணமான சௌபாக்கியத்தையும், மிகுதியான சம்பத்தையும், எங்களுக்கு கற்பித்தருள். உனது சுவனலோகத்தின் திருவாயிலை மணமான, சிறப்பான இந்தக் கோவை ஓதும் தரும சபைக்கு நேரால் திறந்து வைத்தருள்.

முக்கியமாக எங்கள் நபி நாயகரின் சிறப்பான இவ்வின்னோதய வரலாற்றை கோவை செய்து, மொழிபெயர்த்த மல்கரீ என்னும் இச்சிற்றடியேனுக்கும் இதையோதுவார், கேட்போர், சமூகமானோர், எழுதி வைத்தோர், இன்னுமிந்த கண்ணியமிக்க சங்கையான மிஃராஜின் இரவில் இவ்வருமையும், பெருமையும் வாய்ந்த மகத்தான நல் வணக்கத்தைக் கொண்டாடி சிறப்பிப்போர் முதலிய சகலருக்கும், உனது நல்லருள் கருணை பாலிப்பாயாக !

எங்கள் ஆண்டவனே ! எங்களின் இக்கூட்டத்தை கிருபைக்குரிய கூட்டமாகவும், எங்கள் பிரிவை சுபிட்சமான பாதுகாக்கப்பட்ட பிரிவாகவும் ஆக்கியருள். இன்னும் எங்களிலோ, எங்களிலிருந்தோ எங்களுடனோ, யாதொரு முனிவு பெற்றவனையாவது, பாக்கியமற்றவனையாவது, நற்பேற் கெட்டவனையாவது, ஆக்காதிருப்பாயாக !

ஆண்டவனே ! எங்கள் சுபாவக் குணங்களை திருத்தமாக்கியும், கிரியைகளை அழகாக்கியும், அபீட்ஷைகளை சித்தியாக்கியும்

அருள்வாயாக! எங்கள் துற்திருத்தியங்களால் எங்களை குற்றம் பிடியாதே ! அதிக்கிரமங்களால் தண்டியாதே !

ஆண்டவனே ! கிருபையாளரில் மகா கிருபையாளனே ! உனது கிருபா கடாட்சத்தால் எங்களுக்கும், எங்கள் மாதா, பிதா, மனைவி, மக்கள், சகோதரர், தீட்சதகுருமார், இஷ்டமித்திரர் முதலிய, சகல முஸ்லிம், முஃமின்களுக்கும் பிழைப் பொறுத்து கிருபை செய்தருள்வாயாக !

ஆண்டவனே ! சர்வதயாளனே ! உத்தம கிருபையாளனே ! சர்வலோக இரட்சகனே ! நாங்கள் உனது உண்மையைக் கொண்டும், உனது சங்கையான திருநபியின் உண்மையைக் கொண்டும், இன்னும் இரகசிய, பராசியத்தில் மகிமை மிக்க மருவுதலென்னும் பசிய பஞ்சனையின் மீது, உனக்கும், அவர்களுக்குமுரிய அருமையும், பெருமையும் அதிசிலாக்கியமும், வெகுயோக்கியமுமான, சாமீப, சாயுட்சய சமூகத்தின் பூர்வீக, அகமியங்களைக் கொண்டும், உன்னை கெஞ்சிக் கேட்கிறோம். உனது மகத்தான தெய்வீக சத்துவத்தினால் எங்களுடையவும், எங்கள் மாதா, பிதாக்களுடையவும் மற்றும் முஸ்லிம்களுடையவும், கழுத்துகளில் நின்றும் கொடிய நரகத்தின் அடிமைத் தனமென்னும் பந்தக் கட்டை அவிழ்த்து, உரிமைப் பட்டயமளித்து, நித்தியானந்த சுகம் பெற்று வாழும் மோட்சப்பதியில் எங்களைப் புகுதுவித்து ஆசீர்வதித்தருள்வாயாக!

ஆண்டவனே ! உனது ஹபீபாகிய முஹம்மதென்னும் திருநாமம் தரித்தவரும், சிறப்பான மிஃராஜின் சிரேஷ்டரும் மகோன்னத ஏகாந்த பதவியாகிய "வஹ்தத்துல் குப்ரா"வின் சொந்தக் காரரும், இன்னும் நபிமார், ரசூல்மார், பரிசுத்த சமூக ஆசிரமத்தின் ஆன்மீக அமரர்களில் எவரேனும் முக்தி பெறவோ தெண்டிப்பாலும், உழைப்பாலும், ஒருவருக்கும் சித்தியாகவோ, கூட்டாததுமான "காப கவ்ஸைனி அவ் அத்னா" வெனும் சாமீப சமூகப் பதவியின் அந்தரங்கப்பிரதான புருஷருமாகிய எங்கள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீதும், தங்கள் தருமக்குண சீலர்களாகிய வமிசப் பரம்பரையினர் மீதும், உண்மை பக்த சிரோன்மணிகளான சகாக்கள் மீதும், மற்றும் அவர்களின் சமூக சமேதரர் மீதும், உலக நிலையநாள் பரியந்தம் தரிபாடான, மிகுதியான ஸலவாத்து, ஸலாமென்னும் திருக்கருணை ஈடேற்றம் சொல்லியருள் வாயாக!

اِلٰهِيْ قَدْ خَتَمْنَا ذِكْرَ شَيْئٍ ‏ بِمِعْرَاجِ النَّبِيِّ وَيَا اِلٰهِيْ
اِلٰهِيْ فَاقْبَلَنْ مِنَّا بِحُسْنٍ ‏ قَبُوْلاً ثُمَّ اِقْبَالاً اِلٰهِيْ
اِلٰهِيْ وَاعْفُ عَنَّا وَارْحَمَنَّا ‏ وَجُدْ وَالْطُفْ بِفَضْلِكَ يَا اِلٰهِيْ
اِلٰهِيْ وَارْزُقَنَّا مِنْ حَلَالٍ ‏ وَجَنِّبْنَا الْحَرَامَ وَيَا اِلٰهِيْ
اِلٰهِيْ وَاقْضِ عَنَّا كُلَّ دَيْنٍ ‏ وَتَبِعَاتِ الْحُقُوْقِ وَيَا اِلٰهِيْ
اِلٰهِيْ عَافِنَا مِنْ شَرِّ قَحْطٍ ‏ وَجَذْبٍ وَّالْغَلَاءِ وَيَا اِلٰهِيْ
اِلٰهِيْ اِدْفَعْ بَلَاءً مِّنْ وَبَاءٍ ‏ وَطَعْنٍ ثُمَّ طَاعُوْنٍ اِلٰهِيْ
اِلٰهِيْ اَمْطِرَنْ مَطَرًا غَزِيْرًا ‏ بِاِرْخَاصِ الْبِلَادِ وَيَا اِلٰهِيْ
اِلٰهِيْ اُكْتُبْ لَنَا خَيْرًا كَثِيْرًا ‏ بِرَحْمَتِكَ الْوَسِيْعَةِ يَا اِلٰهِيْ
اِلٰهِيْ صَلِّيَنْ طُوْلَ الدَّوَامِ ‏ عَلٰى مِسْكِ الْخِتَامِ وَيَا اِلٰهِيْ
اِلٰهِيْ وَارْضَ عَنْ اٰلٍ وَّصَحْبٍ ‏ وَكُلِّ الْمُسْلِمِيْنَ وَيَا اِلٰهِيْ

قد طبع هذا الكتاب المستطاب
فهيمية پبلشرس
خانقاه فهيمية
چنئ

25. பைத்தின் உரை

1. ஆண்டவனே! நாங்கள் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திரு மிஃராஜ் கிஸ்ஸாவில் சிலதை ஓதி முடித்தோம்.

2. ஆண்டவனே! நீ உனது அழகிய திருக்கருணையினால் முன் வந்து எங்கள் இர்த நல்வாழ்த்தை கபூல் செய்வாயாக !

3. ஆண்டவனே! உனது திருஅருளினால் எங்களை பற்றி மன்னித்து, கிருபை செய்திறங்கி நன் கொடையருள்வாயாக!

4. ஆண்டவனே! அசுத்த ஹராமை தவிர்த்து சுத்த ஹலாலான ரிஜ்க்கை எங்களுக்கு உணவளித்தருள்வாயாக

5. ஆண்டவனே ! எங்களைப் பற்றிய பிறர் தொடர்ச்சி முதலிய சகல கடன்கட்டுகளையும் நிவர்த்தித் தருள்வாயாக !

6. ஆண்டவனே ! எங்களை விட்டும் பஞ்சம் வரம், அதிவிலை வாசி முதலிய காலக்குரூர தீங்கை அகற்றி நற்சுக வாழ்வைத் தந்தருள்வாயாக !

7. ஆண்டவனே ! கொடிய வபா, தஃனு, தாவூனு முதலிய எல்லா முஸீபத்துக்களையும் விட்டு தவிர்த்தருள் வாயாக !

8. ஆண்டவனே ! எங்கள் நாடு, நகர்வளம் செழித்தோங்கி, சுகித்து வாழ போதிய கனமழையைப் பொழியச் செய்தருள்வாயாக

9. ஆண்டவனே ! உனது ரஹ்மத்தென்னும் அதிவிசால கருணையினால் மிகுதமான நல் சுபிட்சங்களை எங்களுக்கு கற்பித்தருள்வாயாக !

10. ஆண்டவனே ! எங்கள் நாயகராகிய கஸ்தூரி முத்திரை தரித்த முஸ்தபா நபியவர்கள் மீது நீடூழி காலம் ஸலவாத்து, ஸலாம் சொல்லியருள்வாயாக !

11. ஆண்டவனே ! இன்னும் அவர்களின் கிளை, கோத்திர, சினேக சகாக்கள் மீதும், மற்றும் எல்லா சமூக முஸ்லிம்கள், முஃமின்களுக்கும் உனது திருவருட் பொருத்தத்தை தந்தருள்புரிவாயாக !